பூங்கொடி பதிப்பகம்

# முருகன் சிரித்தான்



லக்ஷ்மி

## நூல் விவரப்பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | முருகன் சிரித்தான் |
| நூலாசிரியர் | : | "லக்ஷ்மி" |
| மொழி | : | தமிழ் |
| நூலின் பொருள் | : | நாவல் |
| வெளியீடு | : | **பூங்கொடி பதிப்பகம்**<br>14, சித்திரைக்குளம் மேற்கு தெரு<br>மயிலாப்பூர், சென்னை - 600 004 |
| நூல் உரிமை | : | டாக்டர் கே. மகேஸ்வரன் |
| பதிப்பு ஆண்டு | : | முதற் பதிப்பு : டிசம்பர், 1981<br>இண்டாம் பதிப்பு: செப்டம்பர், 1982<br>மூன்றாம் பதிப்பு : ஜூன், 1987<br>நான்காம் பதிப்பு : ஜூன், 1992<br>ஐந்தாம் பதிப்பு : மே, 1999<br>ஆறாம் பதிப்பு : டிசம்பர், 1999<br>ஏழாம் பதிப்பு : டிசம்பர், 2009 |
| பக்கங்கள் | : | 128 |
| நூல் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| எழுத்து | : | 11.5 புள்ளிகள் |
| தாள் | : | 10.9 கி.கி. வெள்ளைத்தாள் |
| பைண்டிங் | : | கார்டு போர்டு |
| ஒளி அச்சுக் கோர்வை | : | அமராவதி<br>செல்: 9444169725 |
| அச்சிட்டோர் | : | அமர் ஆப்செட் பிரிண்டர்ஸ்,<br>சென்னை - 600 005 |

**விலை ரூ. 45-00**


## "லக்ஷ்மி"யின்
## பூங்கொடி வெளியீடுகளில் சில. . .


* அழகின் ஆராதனை.................................................. 80.00
* அவள் தாயாகிறாள்.................................................. 35.00
* அசோகமரம் பூக்கவில்லை.................................................. 55.00
* அடுத்த வீடு.................................................. 175.00
* அரக்கு மாளிகை.................................................. 180.00
* அதிசய ராகம்.................................................. 90.00
* அவளுக்கென்று ஒரு இடம்.................................................. 85.00
* அவள் ஒரு தென்றல்.................................................. 75.00
* இவளா என் மகள்.................................................. 65.00
* இனிய உணர்வே என்னைக் கொல்லாதே.................................................. 105.00
* இருளில் தொலைந்த உண்மை.................................................. 85.00
* இன்றும் நாளையும்.................................................. 90.00
* உறவுகள் பிரிவதில்லை.................................................. 40.00
* உயர்வு.................................................. 80.00
* உறவின் குரல்.................................................. 65.00
* ஊன்றுகோல்.................................................. 75.00
* என் வீடு.................................................. 55.00
* என் மனைவி.................................................. 85.00
* ஒரு காவிரியைப் போல
(சாகித்ய அகடமி பரிசு பெற்றது).................................................. 125.00
* ஒரு சிவப்பு பச்சையாகிறது.................................................. 110.00
* கடைசி வரை.................................................. 55.00
* கங்கையும் வந்தாள்.................................................. 115.00
* கதவு திறந்தால்.................................................. 115.00

"லக்ஷ்மி"யின்

பூங்கொடி வெளியீடுகளில் சில. . .

* கதாசிரியையின் கதை (முதல் பாகம்)........................... 60.00
* கதாசிரியையின் கதை (இரண்டாம் பாகம்)...................... 70.00
* கழுத்தில் விழுந்த மாலை............................................. 70.00
* கணவன் அமைவதெல்லாம்.......................................... 85.00
* காளியின் கண்கள்....................................................... 75.00
* கூறாமல் சன்னியாசம்................................................. 60.00
* கைமாறியபோது........................................................... 85.00
* கோடை மேகங்கள்....................................................... 90.00
* திரும்பிப் பார்த்தால்.................................................. 55.00
* துணை ..................................................................... 60.00
* தோட்டத்து வீடு ......................................................... 50.00
* நல்லதோர் வீணை ........................................................ 90.00
* நாயக்கர் மக்கள்.......................................................... 150.00
* நிற்க நேரமில்லை ....................................................... 80.00
* நியாயங்கள் மாறும்போது ............................................ 110.00
* நிகழ்ந்த கதைகள்....................................................... 95.00
* நீலப்புடவை................................................................ 60.00
* நீதிக்குக் கைகள் நீளம்................................................ 80.00
* பண்ணையார் மகள்....................................................... 115.00
* பவானி......................................................................... 50.00
* புனிதா ஒரு புதிர்......................................................... 55.00
* புதைமணல்................................................................... 60.00
* பெயர் சொல்ல மாட்டேன்................................................ 60.00
* பெண் மனம் (தமிழ்நாடு அரசு பரிசு பெற்ற நூல்) 80.00

# முருகன் சிரித்தான்

## 1

அந்த மூன்று பெண்களும் லாட்ஜின் வராந்தாவில் நின்று கொண்டு இருந்தனர்.

சில்லென்று முகத்திலே வீசிய கடற்காற்று, நெருப்பாகக் குமைந்த அனுராதாவின் மனதிற்கும் உடலுக்கும் ஆறுதலாகத்தான் இருந்தது.

அப்பப்பா! நல்ல குளிர். பச்சை வண்ண காஷ்மீர் சால்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டாள் சாரதா. அவளுக்கு அதிகமான குளிரும் தாங்காது வெயிலையும் பொறுக்க மாட்டாள். அதுவும் ரத்தஅழுத்த நோய் வந்த பின்னர் அவள் உடல்நிலை அத்தனை சுகமாக இருக்க வில்லை. துணைக்கு இரண்டு வைத்தியர்கள் வருகிறார் களே என்றுதான் இந்தச் சுற்றுப் பயணத்தைத் துணிவுடன் அவள் ஏற்றாள்.

கீழே கடல் ஓரத்தில் கால்களை நனைத்துக் கொண்டு நின்ற மக்களின் ஆரவாரம். அலைகள் எழுப்பிய ஓசையையும் மீறி மேலே மிதந்து வந்து அவர்கள் காதுகளில் விழத்தான் செய்தது.

பாவம்! இந்தக் குளிரில் அந்தக் குழந்தையைப் பாருங்கள். எத்தனை ஆசையோடு சூரிய உதயத்தைப்

பார்க்க வந்திருக்கிறாள்? சாரதா கீழே ஓர் ஓரமாக நின்று கொண்டிருந்த ஒரு பள்ளிச் சிறுமியைச் சுட்டிக் காட்டினாள்.

''இப்படித் திரும்பி மேலே பாருங்கள் சாரதா அம்மா! வானத்தைக் கடல் தொட்டுக் கொண்டிருக்கும் இடத்திலேயே கொஞ்சம் கண்ணாக இருங்கள்'' டாக்டர் ரேவதி தன் தோழிகளுக்குக் கண்டிப்பாக உத்திரவு போட்டாள்.

''சூரிய நாராயணப்பிரபு! கருணாமூர்த்தி! காட்சி தருகிறாயாடா அப்பா நாராயணா!'' கைகளைத் தூக்கி, உதய சூரியனுக்கு கும்பிடு போட்டபடி ஆர்ப்பரித்தாள் சாரதா. கன்னியாகுமரிக்கு அவள் வந்திருப்பது இது தான் முதல் தடவை.

அடிவானத்திலே கடலில் இருந்து பொற்குடம் போல சுற்றிலும் சிவப்பு வண்ணத்தைத் தீட்டியபடி, புன்மை இருளைப் போக்கியபடி, பொழுதை விடியச் செய்து கொண்டு மெல்லப் புறப்பட்ட உதய சூரியனைக் கண்டார்கள், அவர்கள்.

''ஆகா...! என்ன அற்புதமான காட்சி! எத்தனை முறை பார்த்தாலும் அலுக்காத அழகு'' என்றாள் டாக்டர் ரேவதி. அவள் அழகை ஆராதிக்கும் ரசிகை. சங்கீதத்திலும் பற்றுதல் உண்டு; ஞானமும் உண்டு.

டாக்டர் அனுராதா மெய்மறந்து பார்த்தாள்.

மெல்ல மெல்ல நீலவானத்தில் தாவி எழுந்த உதய சூரியனின் ஒளிமயமான அழகு, அவளது நினைவுகளைக் கிளறிவிடவே கண்கள் பனிக்க நெஞ்சு நினைவுச் சுமையில் விம்ம சிலையாக நின்றுவிட்டாள்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் இதே கன்னியா குமரியில் பயணிகளுக்குக் கட்டப்பட்டுள்ள விடுதியின்



மாடி அறையில் கட்டிலின் மீது சாய்ந்தபடியே அந்தப் பெரிய சன்னல் வழியா அவள் சூரிய உதயத்தைக் கண்டு களித்த நினைவு-

அப்போது அவளும் நரேந்திரனும் தேன் நிலவைக் கழிக்க அங்கு வந்து இருந்தனர்.

''எத்தனை அழகாக இருக்கிறது, பார்த்தீர்களா!'' என்று அவள் உற்சாகமாகச் சொன்னதும், நரேந்திரன் அவளைத் தன் நெஞ்சோடு சேர்த்துக் கொண்டு, ''உன்னை விட அழகா சொல்லு'' என்று கன்னங்களை வருடிக் கொஞ்சிய நினைவின் இனிப்பு... உடம்பெல்லாம் சிலிர்க்கச் செய்தது.

அந்த இனிய நினைவிலே, ஒரு குடம் பாலிலே துளி நஞ்சு கலந்தாற்போல, இப்போது ஏற்பட்டு இருக்கும் பிளவின் நினைப்பும் புகுந்து கொண்ட போது அவள் மனம் வெடித்துவிடும்போல வேதனையில் துடித்தது.

மேலே எழும்பிக் கொண்டு இருந்த சூரியனை சேவித்தபடி, கண்களை மூடிய நிலையில் தன்னை மறந்து நின்றாள் சாரதா. அப்படி அவளுக்குள் அந்தக் காட்சி ஆனந்த பரவசத்தை உண்டாக்கி விட்டது.

''அனு என்ன! இதுக்காகவா உன்னை இத்தனை தூரம் கூட்டி வந்தேன்? நாளை திருச்செந்தூர் போகப் போகிறோம். நீ இப்படி மனம் சோர்ந்து உணர்வுகளை சிதற விட்டால்-'' அவளுக்கு மட்டுமே கேட்கும்படி அடிக்குரலில் காது அருகே டாக்டர் ரேவதி கிசுகிசுத்தாள்.

அனுராதா பள்ளியில் படிக்கும் காலத்தில் இருந்தே ரேவதியை அறிவாள். அவர்களது ஏழைக் குடும்பத்திற்கு ரேவதிதான் வைத்தியர். நெடுங்காலமாகப் பல வகையிலும் அவளுக்கு உதவி புரிந்தவள்.

''புத்திசாலிப் பெண் - அழகாகவும் இருக்கிறாள் - டாக்டருக்குப் படிக்க வையுங்கள். கண்டேன், கண்டேன்னு நல்ல இடத்தில் இருந்து மாப்பிள்ளை வந்து கொண்டு போய் விடுவான்'' டாக்டர் ரேவதிதான் முதல் முதலாக அவள் அம்மாவிடம் சொல்லி அனுவுக்குக் கல்வி மீது உற்சாகத்தை ஊட்டியவள்.

சின்ன வயதில் அனு, தந்தையை இழந்தாள். அம்மா பஞ்சாயத்துப் பள்ளியொன்றில் ஆசிரியையாக வேலை பார்த்தாள். தனது ஒரே மகளைக் காத்து, வளர்த்து, படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற ஆசை அவளுக்கு அதிகமாகத்தான் இருந்தது. அப்பா விட்டுப் போன இன்சூரன்சு தொகையில் கிடைத்த வட்டி, வீட்டு வாடகைக்குத்தான் சரியாக இருந்தது. காரணீசுவரன் கோயில் தெருவிலே ஒரு சிறு வீட்டின் முன் பகுதியிலே குடியிருப்பு-ஒண்டுக் குடித்தனம். பற்றாக்குறை பட்ஜெட்டின் கஷ்டஜீவனம். இந்த நிலையில் கல்லூரிப் படிப்புக்கு அவர்கள் எங்கே போவர்கள்? வைத்தியக் கல்லூரிப் படிப்பைப் பற்றித்தான் நினைக்க முடியுமா?

டாக்டர் ரேவதிக்கும், அவளுக்கும் இடையே வயதில் எவ்வளவோ வித்தியாசம். சொல்லப் போனால் மகளை ஒத்த வயது. அனுராதாவுக்கு உண்மையான தோழமை, காதலைப் போன்று ஒரு ஆழமான உணர்வு. அதற்கு இடையே வயதோ சாதியோ அந்தஸ்தோ எதுவும் குறுக்கிட முடியாது என்ற திடமான நம்பிக்கை ரேவதிக்கு.

''எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு. நல்லா படிக்கிறே. கோவிந்துகிட்டேகூட நான் சொன்னேன். அவரும் முயன்று பார்க்கப் போகிறார். எந்தக் கல்லூரி யிலாவது உபகார சம்பளத்தோட உன்னைச் சேர்த்து விடப் போகிறோம். பிறகு படிக்க வேண்டியது உன் பொறுப்பு''



அடிக்கடி அவர்கள் வீட்டுக்கு வந்த போதெல்லாம் ரேவதி சொன்னாள்.

ரேவதி வெறும் வாய்ப் பேச்சோடு எப்பொழுதுமே அடங்கி விடுவது இல்லை. சொன்னதைச் செய்து முடிக்காவிடில் அவளுக்கு மண்டை வெடித்து விடும். கணவன் கோவிந்தன் நல்ல வேலையில் இருந்தார். அவருக்கு பலரின் அறிமுகமும் நட்பும் இருந்தன. அவரது முயற்சி - சிபாரிசு இரண்டின் மூலம் அனுராதா கல்லூரியை எட்டிப் பார்த்தாள். கருத்துடன் படித்தாள் - நல்ல மதிப்பு எண்களுடன் தேர்வு பெற்றாள். வைத்தியக் கல்லூரியிலும் உபகாரச் சம்பளத்துடன் சேர்ந்தாள். வெற்றியோடு வெளியே வந்தாள். தனது வாழ்க்கை உயர மிகவும் பாடுபட்ட டாக்டர் ரேவதியை அவள் தனது மற்றொரு தாயாகவே எண்ணத் தொடங்கிவிட்டாள். டாக்டர் என்று அழைப்பதை விட்டுவிட்டு ''ரேவதி அம்மா'' என்றுதான் ஆசையுடன் அழைதாள்.

பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்று இயல் பாகவே ஆவல் கொண்டு ஆவன செய்து உதவிய டாக்டர் ரேவதியின் வாழ்விலும் ஒரு பெரும் துன்பம் ஏற்பட்டு விட்டது. மூன்று ஆண்டுக்குமுன் அவள் கணவன் கோவிந்தன் மாரடைப்பில் திடீரென்று மரணம் அடைந்தார்.

ரேவதி அந்தக் காலத்திலேயே துணிந்து காதல் திருமணம் செய்து கொண்டவள். கணவனும் மனைவியும் அன்றில் பறவை போல இணைபிரியாத ஜோடியாக நெருங்கி நேசமுடன் வாழ்ந்தவர்கள். இந்த மாபெரும் இழப்பை இவர்கள் எப்படித்தான் தாங்கிக் கொள்ளப் போகிறார்களோ! என்று அனு அதிசயப்பட்டது உண்மை.

''கோவிந்து போனதும் கூடவே நான் செத்துப் போய் விடுவேன்னு நினைச்சியா, அனு...? நான் உடனடியாக

சாக விரும்பவில்லை, ஏன் தெரியுமா? அவரோடு இணைந்து வாழ்ந்தப்போ எங்களுக்குள் பேசிக்கொண்ட இனிய மொழிகள், நடந்த இன்பநிகழ்ச்சிகள் இவற்றைத் திரும்ப நினைத்துப் பார்க்கக்கூட பொழுது இல்லாமல் அவசர கதியில் வைத்தியத் தொழிலுக்குப் பின்னால் நான் ஓடிக்கொண்டு இருந்தேன். அவர்போன பின்புதான் அதையெல்லாம் நினைச்சுப் பார்க்க நேரம் இல்லாமல் காலத்தை ஓட்டி விட்டோமே என்ற வருத்தம் எனக்குள் ஏற்பட்டது. இப்போ நான் மறுபடியும் கற்பனையில் என் கணவருடன் முதல் முதலாகக் குடித்தனம் ஆரம்பித்த நாளில் இருந்து எங்களுக்குள் ஏற்பட்ட பல சம்பவங் களை நினைத்துப் பார்க்கிறேன். அந்த இனிமையிலே என் கணவருடன் மறுபடியும் நான் வாழ்வது போன்ற ஒரு பிரமை ஏற்படுகிறது. அதனால் என்னால் துயரத்தை தாங்கிக் கொள்ள முடிகிறது. அவர் நினைவு என்னை மிகவும் வருத்தும் போது நாங்கள் ஆரம்பத்தில் எடுத்துக் கொண்ட புகைப்படங்கள் கொண்ட ஆல்பத்தைத் திறந்து வைத்துக் கொள்கிறேன். படங்களைந் பார்த்து நாங்கள் ஒருவரையொருவர் பரிகசித்துச் சிரித்த நினைவு வந்து விடும். நான் தனியே உட்கார்ந்து கொண்டு அந்த நாளை நினைத்துச் சிரிப்பேன். கண்க்ளில் நீர் எழும்பி, கன்னங்களில் வழியும் வரை சிரிப்பேன். ஒன்று மட்டும் புரிஞ்சுக்கோடி. இத்தனைப் பெரிய இழப்பையும் தாங்கிக் கொள்ள இயற்கை தானே நமது இதயத்திற்கு நாளா வட்டத்திலே ஒரு தெம்பைக் கொடுத்து விடும்.''

மரணம் அடைந்துவிட்டார், உங்கள் கணவர். இனி திரும்பியே வரமாட்டார் என்ற பெரிய பிரிவு ஏற்பட்டும் உங்களால் சகித்துக் கொள்ள முடிகிறது. ஆனால், என்னைப் பாருங்கள் ரேவதி அம்மா, கணவரைப் பிரிந்து வாழும் துர்பாக்கியம் நேர்ந்து விட்டதே என்ற அதிர்ச்சியைத் தாங்க முடியாது துவண்டு போகிறேன்.



''அதுவும் பத்து மாதம் சுமந்து பெற்ற பிள்ளையைப் பிரிந்திருக்கும் துக்கத்தை என்னால் தாங்கிக்கவே முடியலை.''

ரேவதியைத் தேடிக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்ற அனு, அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு கதறி அழுதுவிட்டாள்.

''கண்ணைத்துடைச்சுக்கோ. அழுவதை நிறுத்து. எனக்கு மட்டும் ஐந்து பிள்ளைகளா இருக்காங்க? ஒரே ஒரு மகன். செல்லமாக வளர்ந்தவன். டாக்டருக்குப்படிச்சு பல பட்டங்கள் பெற்றதும் கல்யாணமாகிய கையோடு மனைவியுடன் அமெரிக்காவுக்குப் போய்விட்டான். அதுக்காக நான் உருகியா போய்விட்டேன்?'' அதட்டினாள் ரேவதி.

''என் பிள்ளை மூணு வயசு பச்சைப் பாலகன். என் மடியிலேதான் தூங்கணும்னு தினம் அடம் செய்து அழுவான். நான் ஊட்டினால்தான் சாப்பிடுவான். என்மேலே உசிரா இருந்த அந்தப் பச்சைக் குழந்தையின் பிஞ்சு மனத்திலே நஞ்சு கலக்க அவர் எடுத்துக்கிட்டுப் போயிட்டாரே, ரேவதியம்மா, என் பெத்தவயிறு பதைக்கிறதே. நீங்கள் ஒரு தாயாராச்சே, புரியலையா? என் சொந்த தாய்கூட இல்லையே. என் கஷ்டத்தை உங்கள்கிட்டத்தானே நான் சொல்லிக்க முடியும்?'' விம்மி விம்மி அழுதாள் அனுராதா.

கையைக் கழுவிக்கொண்டு வந்தாள், ரேவதி. அலமாரியில் இருந்த சுத்தமான துண்டை எடுத்து கைகளைத் துடைத்துக் கொண்டாள்.

''வாஷ்பேசின் அருகே சோப்புப் பெட்டி இருக்கு, முகத்தைக் கழுவிக்கோ. சூடா காப்பி தரேன், குடிச்சுக்கோ, அத்தோட ஓர் ஊசி போடறேன். நானே காரில் உன்னை

வீட்டிலே கொண்டுவிடறேன். ராத்திரி நல்லா தூங்குவே. காலைல மனசு லேசாக இருக்கும். வேலையைக் கவனிப்பே.''

''நானும் ஒரு வைத்தியர்தானே- இதெல்லாம் எனக்குத் தெரியாதா?'' விசும்பியபடியே முகத்தைக் கழுவிக் கொண்டு வந்தாள், அனு.

நீ இந்தச் சமயம் கொஞ்சம் பொறுமையா இருக்கணும். ரொம்ப அவசரப்படறே. டாக்டர் நரேந்திரன் என்ன செய்யப் போகிறார்னு கொஞ்சம் விட்டுப்பிடி. உன் கையிலே தொழில் இருக்கு, திறமையான வைத்தியர்னு பேர் வாங்கியிருக்கே. அவர்கிட்ட நீ எதுக்கும் கையேந்தி நிற்கத் தேவையில்லை. காப்பியைச் சாப்பிடு. இந்த மாத்திரையைப் போட்டு விழுங்கு. இது ஒரு சின்ன ஊசி...''

அன்று இரவு அனு நன்றாகவே உறங்கிவிட்டாள். மறுநாள் உண்மையாகவே மனம் லேசாகத்தான் இருந்தது. அவள் எழுந்து, குளித்து முடித்து, வேறு உடை உடுத்திக் கொண்டு வேலைக்குப் புறப்படுமுன் தொலைபேசியில் ரேவதி கூப்பிட்டாள்.

உன் வேலை, என் வேலை எல்லாவற்றையும் ஒரு வாரத்துக்கு நம் சிநேகிதி சவிதா கவனிச்சுக்கொள்ள ஏற்பாடு செய்துவிட்டேன். ஒரு சிறு பெட்டிக்குள் நாலு நைலக்ஸ் சேலை, இரண்டு பட்டுச்சேலை, சில உள் ஆடைகள், துண்டு, சோப்பு, சீப்பு, கண்ணாடி, பிரஷ்பேஸ்ட் வாரிப் போட்டுக்கொள்.''

''என்னத்துக்கு ரேவதி அம்மா?''

''என்னத்துக்கு எதுக்குன்னு கேட்காதே. ஆனாலும் சொல்கிறேன். கடந்த சில மாதமாக நீ அழுதுகொண்டே யிருக்கிறதைக் காண எனக்குப் பொறுக்கலை. அதனாலே ஒரு சுற்றுப் பயணத்துக்கு ஏற்பாடு பண்ணி, டிக்கெட்டும்



வாங்கி வைச்சுட்டேன். இன்று மாலை நாம் நெல்லை எக்ஸ்பிரசில் கிளம்பறோம். கூட எனக்குத் தெரிஞ்சவங்க சாரதான்னு ஓர் அம்மாவும் வராங்க.''

''நா வரணுமா ரேவதி அம்மா?''

நல்லா இருக்கே உன் கேள்வி? உனக்காகத்தான் இந்தப் பயணமே. எல்லாம் தயார் பண்ணிட்டேன். எங்கள் சமையல் ஆள் இட்டிலி சுட்டு, தேங்காய் சட்டினி வச்சு கட்டி கொடுத்துடுவார். ஒரு கேன் நிறைய தண்ணி கொண்டு வரேன். நீ சும்மா பெட்டியோட வந்தால் போதும்.''

''எனக்கு மனதே நல்லா இலலை. இந்தப் பயணம் அவசியமா?''

ரொம்ப அவசியம். முதல்லே திருநெல்வேலியில் இறங்கி நாகர்கோவிலுக்குப் போகிறோம். அங்கு ஒரு நண்பன் வீட்டில் தங்குகிறோம். நாகேஸ்வரனை தரிசித்துவிட்டு கன்னியாகுமரி போகப்போகிறோம். அங்கே இரண்டு நாள் இருந்துவிட்டு திருச்செந்தூர் கிளம்புகிறோம், உன்னை திருச்செந்தூருக்கு ஏன் கூட்டிப் போகிறேன், தெரியுமா?-''

''ஏன்?''

''திருச்செந்தூர் முருகன் எப்போதும் சிரிக்கிறான். அன்பர்களைக் கண்டதும் ஆனந்தமாகச் சிரிக்கிறான். அழுது கொண்டு இருக்கும் நீ ஆண்டவன் சிரிப்பதைக் கண்டு ஆனந்தத்துடன் கூடவே சிரிக்கப் போறே.''

''ரேவதி அம்மா, உங்களுக்கு நன்றி எப்படி சொல்றதுன்னே தெரியலை.''

''ஸ்... மறுபடியும் அழ ஆரம்பிக்காதே. பெண்கள் அதுவும் படிச்ச பெண்கள், தொழில் கல்வியில் தேர்ந்தவர்கள், திறமையாகத் தொழிலைச் செய்யக் கூடிய

துணிவு உடையவர்கள் பச்சைக் குழந்தை போல துன்பங் களைக் கண்டு அழுவது எனக்குப் பிடிக்காது. மாலை நாலு மணிக்குத் தயாரா இரு.''

இப்போது அவர்கள் கன்னியாகுமரியில் ஓர் ஓட்டல் அறையில் தங்கியிருந்தனர்.

''என்ன யோசனை? கிளம்புங்கள்.'' ரேவதி அதட்டிக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள்.

''இப்போ நாம் எங்கே போகிறோம்?'' சாரதா கம்பளி சால்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு கேட்டாள்.

''இப்போ நாம் நேரே குளிக்கப் போகிறோம். மூன்று கடலும் ஒன்றாகக் கலக்கும் கன்னியாகுமரி முனையிலே குளிப்பது உடம்புக்கும் நல்லது- மனத்திற் கும் நல்லது. ஆன்மநேய வழிபாட்டிற்கும் நல்லது. உம் கிளம்புங்கள்.''

''ரொம்பக் குளிரும் போல இருக்கே?'' நடுங்கினாள், சாரதா.

கணவனுடன் தேன் நிலவுக்கு வந்திருந்தபோது அனுராதா கடலில் முழுகிவிட்டு கோவிலுக்குப் போகப் பெரிதும் விரும்பினாள்.

''எனக்கு சளி பிடித்துக் கொண்டுவிடும். இதெல்லாம் என்ன நம்பிக்கை-பெரிய கட்டுப் பெட்டியாக இருக்கிறாயே?'' நரேந்திரன் அதட்டித் தடுத்து விட்டான். அந்த ஆசை நிறைவேற இத்தனை நாள் சென்றன. எத்தனை வித்தியாசமான சூழ்நிலையில் அந்த ஆசையை அவள் நினைவேற்றிக் கொள்ளவேண்டி வந்துவிட்டது?

டாக்டர் ரேவதியிடம் ஓங்கிப் பேசி மறுப்பு தெரிவிக்க சாரதாவுக்கு அச்சம். பலிபீடத்திற்கு இழுத்துச்



செல்லப்படும் ஆடுபோல பயந்து கொண்டே பின்னால் மெல்ல நடந்தாள்.

''அங்கே பாருங்கள் எத்தனை சின்னக் குழந்தைகள் எல்லாம் கடலில் குளிக்கிறாங்க? பயப்படாமல் என் கையைப் பிடிச்சுக்கோங்க'' சாரதாவைத் தரதரவென்று இழுத்துக்கொண்டு கடலில் இறங்கி விட்டாள் ரேவதி.

கம்பளி சால்வையை நீக்கி தரை மீது விட்டெறிந்து விட்டுக் கண்களை மூடிக்கொண்டு தொப்பென்று முழுகினாள் சாரதா.

உண்மைதான்! கடல்நீர் வெதுவெது என்று இளஞ் சூடாக, இத்தனை இதமாக அணைத்துக் கொள்கிறதே என்ன அதிசயம்!

ரேவதிக்குக் கடலைக் கண்டதும், மகிழ்ச்சி பிடிபடவில்லை. ''சின்னஞ்சிறு பெண் போல சிற்றாடை இடையுடுத்தி சிவகங்கை கரையினிலே ஸ்ரீ துர்கா சிரித்திடுவாள். பெண் அவளின் கண் அழகை பேச முடியாது. பேரழகிக்கு இணையாக வேறொன்றும் கிடையாது-'' என்று சீர்காழி கோவிந்தராஜன் தமது இனிய குரலில் இசைத்த பாடலை உரத்துப் பாடிய வண்ணம், பலமுறை நீரில் முங்கி முங்கி எழுந்தாள், ரேவதி.

''ஆமாம்! இந்தப் பாட்டை உளுந்தூர்பேட்டை சண்முகம் சிதம்பர துர்க்கையம்மன் மேலேயல்லவா பாடியது? அதை இங்கே...'' சாரதா கேட்டு முடிக்கு முன் ரேவதி சிரித்தாள். ''மதுரையிலே அவள் மீனாட்சி, மாநகர் காசியில் அவள் விசாலாட்சி, காஞ்சியில் காமாட்சி-'' என்ற தேஷ் ராகத்திலே கொஞ்சம் உருட்டிவிட்டு, ''சிதம்பரத்திலே அவள் துர்க்கை, இங்கே கன்னியாகுமரி, எதைப் பாடினால் என்ன? எல்லாம் அவள்தானே! இன்னொரு முழுக்குப் போடுங்கோ. அப்படியே ஈரச்சேலையோடு லாட்ஜுக்கு ஓடுவோம்...''

அனு கடல் நீரில் முழுகி எழுந்தாள். அலுக்காத சுகமாக அலைகள் அவளை ஆரத் தழுவிக் கொண்டன. கணவனின் கரத்தைப் பிடித்துக் கொண்டு அவள் கடலில் குளிக்க விரும்பினாள். ஆனால் நரேந்திரன் மறுத்து விட்டான்.

இப்போது அவள் கையை நழுவவிட்டு அவன் தூரத்தே விலகி நிற்கிறானே.

கடல் நீருடன் அவளது கண்களிலிருந்து வழிந்த கண்ணீரும் கலந்து வாயில் உப்புக் கரித்தது.

உப்புத் தண்ணீர் போக லாட்ஜில் குளித்து விட்டு வேறு உடுத்திக் கொண்டார்கள்.

''உச்சிக்கால பூஜைக்குப் போவோம் வாருங்கள்'' உத்தரவிட்டாள் ரேவதி.

அவர்கள் தேவிதரிசனத்திற்குப் போனபோது கோவிலுக்குள் பெரிய யாத்ரீகர் கூட்டம்.

''வெள்ளிக்கிழமையல்லவா?-அப்படித்தான் இருக்கும். வரிசையில் நின்றபடி மெல்ல உள்ளே போங்கள்'' என்றாள், ரேவதி.

பட்டுப் பாவாடையும், தாவணியும் அணிந்து மலர் மாலை சூடி, மஞ்சள் பூசி பொட்டிட்டு, மையிட்டு வைர மூக்குத்தி பளபளவென்று ஒளி வீச கன்னியாகுமரி தேவி கருணை பொழிந்த கண்களால் சிரித்தபடி நின்று கொண்டு இருந்தாள்.

தேனிலவுக்கு வந்தபோது நரேந்திரனை மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு கோயிலுக்குக் கூட்டி வந்த திருந்தாள், அனு.

''சட்டையைக் கழற்றிவிட்டுத்தான் இங்கே யெல்லாம் கோயிலுக்குள் ஆண்கள் நுழைய வேண்டுமாம். எனக்குச் சட்டையில்லாது திறந்த மார்புடன் நிற்கப் பிடிக்காது'' முணு முணுத்தான் அவன்.



''ஆண் பிள்ளை இதுக்கெல்லாம் அஞ்சலாமா? வாங்க? முதல் முதலாக நாம் ஆரம்பித்துள்ள மண வாழ்க்கையின் போது சேர்ந்து நாம் வழிபடும் தெய்வம் இவள். மறுக்காதீர்கள்!'' அழாத குறை, கெஞ்சி, கொஞ்சி, அவனை அழைத்துச் சென்றாள். அனு.

இன்று போலவே அன்றும் தேவி கன்னியாகுமரி சின்னஞ்சிறு இடையில் சிங்காரப்பட்டுடுத்தி, செல்லமாக சிரித்துக்கொண்டு நின்றாள். அதைக் கண்டு ஆனந்த பரவசம் எய்திய அனுராதா ''அம்மா! பகவதி அனைத்துலக நாயகி! என் மீது என்றும் அன்பினைச் சொரியும் அமுதவல்லி! உம்மைப்பிரியா, உன் உறவு மறவா உள்ளத்தினை உவந்தே அளிக்கும் இன்சுவையே'' சற்று உரத்த குரலிலேயே அழகாக மனம் உருகிப்பாடி விட்டாள்.

''போதும்! போகலாமா?'' சிடுசிடுவென்று நரேந்திரன் பேசியதைக் கேட்டு அனு அதிர்ந்து போனாள்.

பட்டங்கள் - பதவி - பங்களா - கார் - பணம் என்று பல நலன்களைப் பெற்றிருக்கும் டாக்டர் நரேந்திரனுக்குத் தெய்வ நம்பிக்கை கிடையாதா? இத்தனை நாள் பழகி-காதலித்துக் கல்யாணம் செய்து கொண்ட கணவன், கடவுள் நம்பிக்கையற்றவர் என்ற உண்மை உதயமானபோது நெஞ்சிலே சம்மட்டி கொண்டு யாரோ அடித்தது போன்ற வேதனை.

கடவுள்மீது நம்பிக்கை இல்லாதவனுக்கு கல்யாணம் என்ற புனித உறவின்மீது மட்டும் நம்பிக்கை இருந்து விடவா போகிறது?

கண்களிலிருந்து பெருகி கன்னங்களில் கோடிட்ட கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் அனு.

''தாயே கன்னியாகுமரி! நீ தனிமையிலே தவம் செய்தாலும் மானிடர்களான எங்களை மங்களமாக வாழவைக்க வரம் தந்து கொண்டிருக்கும் கருணைக் கடலாச்சே. என் மேல் ஏன் அம்மா இந்த வர்வம்? எம்மையும் பொருட்டாக எண்ணி என் குறை தீர்க்க எண்ணி அருள் புரிவாய். குமரித் தாயே! உன் பாதம் சரணம் சரணம்.''

விம்மிக்கொண்டே தொழுத கையுடன் வெளியே வந்த அவளை ரேவதி அன்புடன் அணைத்துக் கொண்டாள். ''கொஞ்சம் பொறுமையாக இரு. நீ கேட்டவரம் கொடுப்பாள் தேவி.''

மெல்ல அவர்கள் மூவரும் லாட்ஜை நோக்கி நடந்தனர்.

## 2

கன்னியாகுமரியில் தங்கியிருந்த அந்த இரண்டு நாளில் எல்லாவற்றையும் பார்த்துவிட வேண்டும் என்ற துடிப்பு சாரதாவுக்கு. அன்று காலை அவர்கள் ஒன்பது மணி அளவில் விவேகானந்தர் பாறையைப் பார்வையிட விசைப்படகில் சென்றனர். கரைப்பக்கம் கண்களைச் செலுத்தியபோது என்ன அழகான காட்சி? கோவிலும், கட்டடங்களும், கரை ஓரமாகத் தென்பட்ட பசுமையான மரங்களும் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்ற ஆவல்.

விவேகானந்தர் மண்டபத்தில் தியானம் செய்யும் இடத்திற்கு வந்தபோது, ரேவதி அனுவின் தோளை அழுத்தி உட்கார வைத்தாள். ''அமைதியில்லாத மனதிற்கு மருந்து இந்த இடம். சிந்தையை சும்மாயிருக்க வைத்து சிறிது நேரம் கண்களை மூடிக்கொண்டு தியானம் செய்.''



அனு அவள் உத்திரவுப்படியே உட்கார்ந்தாள். ஓம் என்று வெளிச்சமாகத் தெரிந்த எழுத்தை மட்டுமே பார்த்தபடி, லேசாகக் கவிழ்ந்து நின்ற இருளில் பளிங்குத் தரைமீது உட்கார்ந்து கொண்டு தன்னை மறக்க முயன்றாள். நரேந்திரனின் நினைவு, அவனுடன் அந்தப் பாறைக்கு வந்த முதல் அனுபவம் எல்லாம் சேர்ந்து அவளை மறக்க விட்டால்தானே?

அவர்கள் வீட்டு மாடியில், இருளில் கைப்பிடிச் சுவர்மீது சாய்ந்தபடி, அவள் நின்றுகொண்டு இருந்தாள். கருநீலப்பட்டாக விரிந்து கிடக்கும் வானத்திலே சிறிது மின்னும் விண்மீன்களைப் பார்ப்பது அவளுக்கு ஓர் இன்பமான பொழுதுபோக்கு.

பின்னால் மெல்லியதாகக் காலடி ஓசை.

திரும்பிப் பார்க்குமுன் அவனுடைய கரங்கள் அவளை இறுக்கமாகத் தழுவிக் கொண்டு மூச்சைத்திணறச் செய்தன.

''இருட்டிலே என்ன தேடுகிறாய்?''

''இந்த இருட்டில்-நான் இங்கே நிற்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

''நீதான் நட்சத்திரம் போல் இருட்டிலும் ஒளியாக மின்னுகிறாயே! எங்கு இருந்தாலும் உன்னைக் கண்டு பிடிச்சு விடுவேனே!''

திருமணமான புதிதிலே அப்படிக் கொஞ்சிய கணவன்- தன்னந் தனிமையாக அவன் இப்போது ஒரு பிளாட்டில் வாழ்ந்து வருகிறான். அவள் வீட்டு வழியேதான் அவன் தனது மருத்துவமனைக்குத் தினமும் காரில் போகிறான்.

தெருவழியாக விரையும் நீலவண்ண அம்பாசிடரை அவள் தினமும் சன்னல் வழியாகக் காலை எட்டு மணி

அளவிலே பார்த்துக் கொண்டுதான் நிற்கிறாள். ஒரு நிமிடம் அவன் முகம் அவளுக்குத் தெரியும். ஆனாலும் அந்த ஒரு நிமிடமாவது அவனைப் பார்த்தால் போதும் என்ற ஆவல். கைக்காரியங்களைப் போட்டுவிட்டு, அவன் வரும் நேரத்திற்கு முன்னதாகவே சன்னல் அருகே வந்து தவம் இருக்கிறாள். தெருவையே விறைப்பாகப் பார்த்தபடி வண்டியை ஓட்டிக் கொண்டு செல்லும் அவன், மறந்துகூட அவளைத் திரும்பியும் பார்க்கவில்லை. அப்படி ஒரு பயங்கரமான பிளவு அவர்களுக்குள்.

கன்னத்தை நனைக்கவிருந்த கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு அவள் எழுந்து அமர்ந்தாள். அங்கு இருந்த புத்தகக் கடையில் ''தினசரி தியானம்'' எனும் புத்தகம் ஒன்றை அங்கு வந்ததின் அடையாளமாக வாங்கிக் கொண்டு விசைப் படகில் கரைக்குத் திரும்பினார்கள்.

கன்னியாகுமரியை விட்டுப் புறப்படுமுன் சாரதா தன் உறவினர்களுக்குக் கொடுக்க பாசி மணி மாலை, சோழிகள், சிறு கூடைகள் என்று பல பொருள்களை வாங்கி நிறைத்துக் கொண்டாள்.

உறவினர்கள் என்று சொல்லிக் கொள்ளத்தான் அனுவுக்கு யாருமே இருக்கவில்லையே?

அவளது வாழ்வு உயரத் தன்னை மெழுகுவர்த்தியாக எரித்துக் கொண்ட அம்மாவும் மறைந்து போய் விட்டார்களே.

மூங்கில் குழலில் செய்த கரடி வடிவில் இருந்த பொம்மை ஒன்றை வாங்கினாள் அனு.

''யாருக்கு இந்தப் பரிசு'' ரேவதி மெல்லக் கேட்டாள்.

''என் குழந்தை பெரியவனாகிப் படிக்கப் போகும் போது, அவன் மேஜை மீது வைத்துக் கொண்டு இதற்குள் தன் பென்சில், ரப்பர் முதலியவற்றைப் போட்டு வைத்துக் கொள்ளக் கொடுக்கப் போகிறேன். ரேவதி அம்மா, உலகத்திலே எந்த உறவு அறுந்து போனாலும் போகும். தாய்-பிள்ளை என்கிற உறவு அறுந்து போகாத பந்தமாச்சே. முயன்றால் கணவனைக்கூட, மறந்துவிட என்னால் முடியும். ஆனால் என் குழந்தை-அவனை எப்படி மறப்பேன்?''



''சரி சரி, அழ ஆரம்பிச்சுடாதே, கிளம்புங்கோ, நாகர்கோவில் பஸ்ஸைப் பிடிச்சு, நண்பர்கள் வீட்டில் சாப்பாட்டை முடித்துக் கொண்டு திருச்செந்தூர் பஸ்ஸை பிடிக்கணும்'' ரேவதி உசுப்பினாள்.

அன்று மாலை திருச்செந்தூருக்கு விரைந்து கொண்டிருந்த பஸ்ஸில் அவர்கள் மூவரும் நெருக்கமாக முன்பக்க இருக்கையில் அமர்ந்தனர்.

பஸ் ஒரு குலுக்கலுடன் ஒரு திருப்பத்தில் நின்றது.

''ஏன் இங்கே நிற்கிறது? என்ன ஆச்சு?'' சாரதா கோழித்தூக்கத்தில் இருந்து விழித்துக்கொண்டாள்.

''ஒண்ணும் ஆகலை. எதிர்ப்பக்கம் வந்த பஸ் ஒரு சேற்றுக் குழிக்குள்ளே விழுந்துடுத்து. எல்லோருமா சேர்ந்து கை கொடுக்க இறங்குகிறாங்க.''

பயணிகளில் ஆண்கள் அனைவரும் இறங்கி சேற்றிலே அமிழ்ந்து கிடந்த பஸ்ஸை தள்ள மிகவும் பாடுபட்டனர். பெரிய சங்கிலியால் ஏற்கனவே இணைக்கப்பட்டு, கைவிட்ட நிலையில் பரிதாபமாகக் கிடந்த பஸ்ஸை பயணிகள் தேர் இழுப்பதுபோல் இழுத்தனர். ஊகும், ஓர் இம்மிகூட நகர மறுத்தது.

''யந்திரம் தூக்கிக்கொண்டு வந்து இழுக்கணும். இது நம்மால் சாத்யப்படாத கேஸ்'' என்று பயணிகள் கைவிட்டனர்.

சன்னல் வழியே வேடிக்கை பார்த்தபடியிருந்த அனுவின் மனதிலும் அதே எண்ணந்தான்.

அவர்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட விபத்தை நண்பர்கள் யர்ராலும் சீராக்க முடியவில்லையே?

நேராக ஓடிக்கொண்டிருந்த வாழ்க்கை வண்டி கவிழ்ந்து, எங்கேயோ சிக்கிக் கொண்டு நின்றது.

அவனும் குழந்தையும், மாமியாரும் அந்தப் பெரிய வீட்டில் வசித்தனர். அவள் தன்னந்தனியே அந்த சிறிய ஃபிளாட்டில் வசிக்க நேரிட்டது. போக்குவரத்திற்கு உபயோகித்த கார் அவளது சொத்து என்பதால் அதே வீட்டிலேயே விட்டுவிட்டு வந்திருந்தாள். தனது மருத்துவ அறைக்கு அவள் தினசரி பஸ் அல்லது ரிக்ஷாவில்தான் போய் வந்து கொண்டு இருந்தாள்.

ஐந்து ஆண்டுகூட முடியவில்லை. அமர்க்களமாகத் தொடங்கிய மணவாழ்க்கை அலங்கோலமாகப் பிளந்து கொண்டு, ஆளுக்கொரு மூலையில் வசித்துக் கொண்டு இருந்தனர்.

நரேந்திரனைப் பொறுத்தவரை அவளை முழுவதும் மறந்துவிட்டான். கவலையேயின்றி வாழ்ந்து கொண்டு இருந்தான்.

அவள்? அவனை மறக்கவில்லை - மறக்கவும் விரும்பவில்லை. மனதால் நேசித்து, மகிழ்ச்சியுடன் அல்லவா அந்தத் திருமணத்திற்கு ஒப்புதல் கொடுத்தாள்...

''எல்லாரும் ஏறுங்கள்'' நடத்துனரின் உரத்த குரல் சிந்தனையைச் சிதைக்கவே அவள் இருக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

கைவிடப்பட்ட அந்த பஸ் பரிதாபமாக சேற்றுக் குழியில் இறங்கிய நிலையில் அப்படியே இருந்தது.



பயணிகள் வண்டிக்குள் ஏறி அமர்ந்து கொண்டனர். பஸ் குலுக்கலும், ஆட்டலுமாக துரிதமாக ஓடத் தொடங்கியது.

பசிய வயல்களும்--வாழைத் தோட்டங்கள்-தென்னை - பனை மரங்கள்-நீல மலைத் தொடர் என்ற காட்சிகளை மறைத்துக்கொண்டு இருள் வேகமாகப் பரவத் தொடங்கியது. ஏற்கனவே தாமதமாகப் புறப்பட்ட பஸ், திருச்செந்தூரை அடைவதற்குள் நன்றாக இருட்டி விட்டது.

சாமான்களை இறக்கிக்கொண்டு அவர்கள் சுற்று முற்றும் குதிரை வண்டிக்காகப் பார்க்குமுன் சொல்லி வைத்தாற்போல் ஒரு வாலிபன் ஒரு காலி ஜீப்புடன் வந்து நின்றான்.

''தேவஸ்தான விடுதிக்குக் கொண்டுவிடறேன். ஐந்தே ரூபாய் கொடுத்தால்போதும்'' என்றான் அவன்.

லேசாக மழை தூறத் தொடங்கிவிட்டது. பேரம் பேசுவதிலே ரேவதி கெட்டிக்காரிதான். ஆனாலும் நேரத்தை யும், கொட்டப் போகிற மழையையும் உத்தேசித்து, சரி என்று ஒப்புக்கொண்டாள்.

சில நிமிடங்களில் தேவஸ்தான விடுதியில் அறை ஒன்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டு, மூவரும் சாமான் களைக் கொண்டு அறைக்குள் இறக்கினர். முகத்தைக் கழுவி, முடியைச் சீராக்கிக் கொண்டு வேறு உடுத்திக் கொண்டு கடவுள் தரிசனத்திற்குக் கிளம்பினார்கள். ''சீக்கிரம் புறப்படுங்கள். அலங்காரத்தைக் கலைத்துவிட்டு அபிஷேகம் ஆரம்பமாகி விடும்'' என்று அடுத்த அறை யில் இருந்த ஓர் அம்மாள் அவர்களை துரிதப்படுத்தினாள்.

மிகவும் வேகமாக, இடையே சன்னமாக விழுந்த மழைத் தூறலைப் பொருட்படுத்தாது தரிசனத்திற்கு விரைந்தனர்.

கோயிலுக்குள் நுழைந்து, படிகள் மீது ஏறி இறங்கி நடக்கும்போது எதிரே தெரிந்த உற்சவ மூர்த்தியின் அலங்காரத்தைப் பார்த்து மெய்சிலிர்த்தபடி மூலவரைத் தரிசிக்க அனு விரைந்தபோது அவளது நெஞ்சை அந்த பழைய நினைப்பு அடைத்துக் கொண்டு விட்டது.

ரேவதிக்குக் கோயில் தலயாத்திரை கைவந்த கலை. எங்கே யாரைப் பிடித்து என்ன செய்ய வேண்டும் என்பது அவள் அறிந்திருந்த பாடம்.

அனுவும் சாரதாவும் வரிசையாகப் பக்தர்களுடன் நடந்து, அபிஷேகம் பார்க்க இரு கைப்பிடிகளின் இடைவெளியில் தரையில் சந்நிதியில் உட்கார்ந்து கொண்டார்கள். பின்னால் இடித்து நெருக்கிக்கொண்டு வந்து அமர்ந்த ரேவதி சொன்னாள். ''விபூதி அபிஷேகத்துக்கு ஏற்பாடு பண்ணிவிட்டேன். அதைத்தான் நாம் ஊருக்கு எடுத்துக் கொண்டு போய் நண்பர்களுக்குப் பிரசாதமாகக் கொடுக்க முடியும். ஆகும் செலவை மூவரும் பங்கிட்டுக் கொள்வோம். சரிதானே?''

அனுவும், சாரதாவும் தலையை ஆட்டினார்கள்.

முருகன் திரு உருவத்திற்கு அபிஷேகம் ஆரம்பமாகியது.

பன்னீர் - சந்தனம் - பஞ்சாமிர்தம் - பால் என்று மாறி மாறி கண் குளிரத் தரிசித்தனர். முடிவில் திரை போடப்பட்டு சில நிமிடம் கழித்துத் திரை தள்ளப்பட்ட போது, விபூதி அபிஷேக நிலையில் முருகன் சிரித்தான். பக்தர்களைக் கண்டு சிரித்தபடி அருள்பாலிக்க அழகோடு நின்ற கோலம் மெய்சிலிர்க்கச் செய்தது.

''முருகா! உன் சந்நிதிக்கு வந்து அன்று நான் அபிஷேக ஆராதனை செய்துவிட்டுப் போனேனே,



அப்படியும் கருணை காட்டாது வேடிக்கை செய்துட்டியே அப்பா. உன் ஞாபகமாகக் குழந்தைக்குக்கூட சிவகுமார்ன்னு பேர் வச்சேனே. என் சிவகுமாரனைப் பிரிச்சு வச்சிருக்கியே. உன் கருணைக்கு இந்தச் செயல் அடுக்குமா ஆண்டவா?'' மெய் உருக, உள்ளம் உருக, கண்கள் பனிக்க அனு வேண்டிக் கொண்டபோது, அன்று நடந்த நிகழ்ச்சி நெஞ்சிலே குமுறி எழத்தான் செய்தது.

தீபாராதனையை அர்ச்சகர் சுழற்றிக் காட்டியபோது ''முருகா... முருகா...'' என்று பக்தர்கள் முழக்கமிட, உட்கார்ந்து இருந்த அனைவரும் எழுந்து ஓரமாக நின்றுகொண்டு ஜோதியை வணங்கினர்.

வழிபாடு முடிந்ததும் அவர்கள் மூவரும் அறைக்குத் திரும்பினர். பிரசாதக் கூடையை வைத்துவிட்டு, முகம்-கால் கழுவிக்கொண்டு சாப்பாடு ஓட்டலை நோக்கி நடந்தனர்.

''எனக்கு ஒரு தோசையும்-காப்பியும் மட்டும் போதும்'' சாரதா முன்பாகவே சொல்லி விட்டாள்.

''எனக்கு இட்லியும் காப்பியும் போதும்'' அனு சொன்னாள்.

தோசையைவிட இட்லிதான் நரேந்திரனுக்கு மிகவும் பிடித்தமான சிற்றுண்டி. எண்ணெயிட்டு வார்த்த தோசையைவிட 'நீராவியில் சுத்தமாக வெந்த இட்லி உடம்புக்கு நல்லது என்பான். ''அம்மா செய்வாங்க பூப்போல'' நாளைக்கு ஒரு முறையாகிலும் அம்மாவின் புகழ் பாடாது இருக்க மாட்டான்.

தருச்செந்தூருக்கு அவர்கள் இருவரும் வந்தபோது, அவன் தேவஸ்தான விடுதியின் அறைக்குள்ளேயே படுக்கையில் கிடந்தான்.

''கோயிலுக்குப் போக நேரமாயிடுச்சே'' அவள் மெல்லத் தொட்டு அவனை எழுப்ப முயன்றாள்.

''என்னைத் தொந்திரவு பண்ணாதே, நீ போய் கவனிச்சுக்கோ'' அசட்டையாகப் பதில் அளித்துவிட்டு அவன் புரண்டுபடுத்தான்.

தேன்நிலவு கடைகளுக்கும் சினிமாவுக்கும் அலைந்த அலுப்பாக இருக்கும். சொந்தக் காரை அவன் சென்னையில் இருந்து ஓட்டி வந்தது அசதியாகவும் இருக்கலாம். அப்படித்தான் நினைத்தாள் அனு.

அவள் மட்டும் கோவிலுக்குப் போனாள். அபிஷேகம் முடிந்ததும் பிரசாதத்துடன் வந்தவள் திருநீரைத் தொட்டு அவன் நெற்றி மீது வைத்தபோது, நெருப்புப்பட்டுவிட்டது போல் அவன் துள்ளி எழுந்தான்.

''இன்னிக்கு சொல்றேன், ஞாபகம் வச்சுக்கோ. விஞ்ஞான படிப்புப் படித்த எனக்கு இதுகள்மீது நம்பிக்கை இல்லை.''

''எதுகள் மீது!'' வியப்புடன் அவள் கேட்டாள்.

''சாமி பூதம் துண்ணூரு வேப்பிலை என்கிற அதுகள் மேல் எனக்கு நம்பிக்கை கிடையாது. வாழ்க்கை என்பது இயற்கையால் ஆளப்பட்டு இயற்கை முறையில் வகுக்கப்பட்டு இயங்குகிறதுன்னு நம்புகிறவன் நான்.''

''நான் பழகினபோது நீங்கள் நாத்திகர்னு ஒரு பேச்சு மூலம்கூட அறிமுகம் செஞ்சுக்கலையே?''

''என் நாத்திகக் கொள்கைகளைவிட உன்மேலே எனக்கு விட்டுக் கொடுக்க முடியாத ஆசை பொங்கிக் கொண்டு வந்தது. இவளைக் கல்யாணம் செய்து கொள்ள வேணும். இவள் என்னுடையவளாக வேணும் என்கிற ஆதங்கம். ஒரு சமயம் என் நாத்திகக் கொள்கைகள்



உனக்கு அதிர்ச்சி கொடுத்துடுமோன்னு வெளியே சொல்லிக்கலை.

''எனக்கு ரொம்ப தெய்வ நம்பிக்கை உண்டுன்னு உங்களுக்குத் தெரியும் இல்லையா?''

''தெரியும் அதைப்பற்றி நான் அக்கறைப்படலை. எனக்கு வேண்டியது நீ, அவ்வளவுதான். உன் கொள்கைள் அல்ல.''

''கணவன்-மனைவின்னு ஆயிட்ட நம்மிடையே இப்படி ஒரு பெரும் பேதம் இருப்பது சரியா? சிந்திச்சுப் பார்த்தீங்களா?''

''சித்திச்சுப் பார்த்தேன். நாளாவட்டத்திலே உன் விஞ்ஞானப் படிப்பு உன் அறிவுக் கண்ணைத் திறக்கும். இதெல்லாம் விஞ்ஞான அறிவுக்கு ஒவ்வாத விஷயம்னு நீயே ஒதுக்கிடுவே.'' மெல்லச் சிரித்தான். எழுந்து வந்து அவள் நெற்றியிலே கீற்றாக அப்பிக் கொண்டிருந்த திருநீறை தன் கைக்குட்டையால் துடைத்து விட்டு, அவளைத் தன் நெஞ்சோடு சேர்த்துக் கொண்டான்.

அவனது அன்பு இனித்தது. ஆனால், கொள்கை வேறுபாடு உடையவர்கள் என்ற உண்மையை உணர்ந்ததும் அந்த அன்பிலே ஏதோ ஒருபுறம் கசப்பது போன்ற பிரமை.

படிப்பு - பட்டம் - பணம், பங்களா, பதவி என்று எல்லாவற்றையும் கொடுத்திருக்கிற முருகன், இவருக்கு இப்படி ஒரு வக்கிரமான கொள்கையையும் கொடுத்திருக்கிறாரே! இது என்ன சோதனை? அவள் அன்று முழுவதும் பல முறை எண்ணிப் பெருமூச்செறிந்து கொண்டு இருந்தாள்.

நேற்றுவரை உள்ளத்தோடும் உணர்வோடும் கலந்து விட்டவனைப்போல இனித்த கணவன், தனது

கொள்கையை வெட்ட வெளிச்சமாக எடுத்துச் சொன்ன போது அவளுள் ஒரு நடுக்கம் ஏற்படத்தான் செய்தது. அவன் யாரோ ஒரு புதிய மனிதன் போலத்தான் அவளுக்கு பிரமிப்பைக் கொடுத்தான். விவரிக்க இயலாத வேதனையை யும் தந்தான்.

அவள் தாய் மீனா கல்லூரிப் படிப்பு படித்தவள் இல்லை. ஆனாலும் அறிவிலும் சாமர்த்தியத்திலும் அவளுக்கு இணை அவளே என்பதுபோல் திகழ்ந்தாள். அவள் அடிக்கடி மகளிடம் சொல்வது வழக்கம்.

"ஒருவருடைய உண்மை உருவம் தெரியவேண்டும் என்றால் அவர்களுடன் நெருங்கிப் பழக வேண்டும். தொலைவில் இருக்கும்போது மிகவும் தூயவர்கள்போல் தோன்றுகிறவர்களை நெருங்கினால் உண்மை நம்மை அதிசயக் கனவாக்கும்."

அவனுடன் நெருங்கிப் பழகி அவனைப் புரிந்து கொள்ள அவள் தவறிவிட்டாளோ?

வேலைக்கு மனு செய்துவிட்டு நேர்முக பார்வைக் காக அவள் அந்த தனியார் மருத்துமனைக்குப் போனாள் - டாக்டர் நரேந்திரன் அதன் கூட்டாளிகளில் ஒருவன்; மிகவும் கண்டிப்பும், கராருமாக நடப்பவன். பிரபலமான அறுவை சிகிச்சை நிபுணன். ஆனால், ஆசாமி கொஞ்சம் கர்வம் பிடித்தவன்.

வெளியார் கூறிய தகவலுடன் நடுங்கிக் கொண்டு தான் போனாள் அனு.

அவளைச் சேர்த்து நான்கு பெண்கள் பேட்டிக்கு வந்து இருந்தனர். அவர்களில் இருவர் அவளுடன் அதே கல்லூரியில் படித்துத் தேர்ந்தவர்கள். உயர் மட்டத்துப் பெண்கள். செல்வாக்கு உடையவர்கள். வேலை எங்கே தனக்குக் கிடைக்கப் போகிறது என்று அவர்களைக்



கண்டதுமே அனுராதாவின் உற்சாகம் ஒடுங்கிப் போயிற்று.

அவள்தான் கடைசியாக அழைக்கப்பட்டாள்.

வேலை தனக்குக் கிடைக்கப் போவதில்லை- ஒப்புக்காக அழைக்கிறார் என்று நம்பிக்கை இன்றி நடைதளர்ந்தவளாக உள்ளே மெல்ல சென்று அவனுக்கு எதிரே தயக்கமாக நின்றாள்.

"உட்காருங்கள் டாக்டர்... மிஸ் அனுராதா? பெயர் சரிதானே?" கேட்ட வண்ணம் அவளது விண்ணப்பத் தாளைத் திறந்து தன்முன் வைத்துக் கொண்டான் நரேந்திரன்.

அவனது குரலில் ஏன் இத்தனை குழைவு? அமர்ந்தவள் திகைப்புடன் மெல்ல நிமிர்ந்து பார்த்தாள். அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

அவள் கேள்விப்பட்டபடி டாக்டர் நரேந்திரன் கெடு பிடியாகத் தெரியவில்லை. அரும்பு மீசையும் - சுருண்ட முடியும்-களையான முகமும் கொண்ட கட்டிளங்காளை.

"நீங்கள் ஸ்டான்லியில் படித்தவர் போலிருக்கு. நான் பாண்டிச்சேரியில் படித்தவன். மேற்படிப்புக்கு சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தேன். அதற்குப் பிறகு லண்டனுக்குப் போயிருந்தேன். படித்து முடித்ததும் அங்கேயே ஓர் ஆஸ்பத்திரியில் நான்கு ஆண்டு பயிற்சி பெற்றேன். போன ஆண்டுதான் இந்த மருத்துவமனையில் வந்து சேர்ந்தேன். என் கூட்டாளியான டாக்டர் மருதீசனை எனக்கு ரொம்பப் பிடிக்கிறது. அதனால் தொடர்ந்து அவருடன் இருப்பதாகத் தீர்மானம்' - தன்னைப்பற்றி வேகமாக அறிமுகப்படுத்திக் கொண்டான்.

அவளுக்கு மிக்க அதிசயமாகத்தான் இருந்தது. அவளைப்பற்றி விசாரிக்கத்தானே அழைத்திருந்தான். அதைவிட்டு, தன்னைப் பற்றி அறிமுகம் ஏன்?

''நான் வெறும் எம்.பி.பி.எஸ். மேலே படிக்க ஆசை. ஆனால் வசதியிருக்கவில்லை'' தன்னைப் பற்றி சுருக்கமாகச் சொல்லிக் கொண்டாள், அனு.

''பட்டங்களைவிட அனுபவங்கள் முக்கியம். அது உங்களிடம் இருக்கும் என்று நினைக்கிறேன்'' அவனது பார்வை அவள் முகத்தில் பதிந்தபோது நெஞ்சு இன்னும் வேகமாக அடித்துக்கொண்டது. காந்த சக்தி வாய்ந்த கண்கள்போல் பளபளத்த அவனது பார்வையைச் சந்திக்க சக்தியில்லாது அவள் மேசையைப் பார்த்தாள்.

''இங்கே வேலை செய்யுங்கோ, அனுபவம் பெருகும். நாங்களே எங்கள் செலவில் உங்களை மேற்படிப்புக்கு வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்க முடியும். அப்படி ஓர் இளம் வைத்தியரை தோல் நோய்கள் பற்றிய மேல் பயிற்சிக்கு லண்டனுக்கு அனுப்பி யிருக்கிறோம். உங்களுக்கு சம்மதமானால்...

அவள் நிமிர்ந்து பார்த்தாள், வியப்புடன்.

''சம்பளம் அதிகம் இல்லை. ஆரம்பத்திலே இங்கே நாங்கள் எண்ணூற்றி ஐம்பதுதான் கொடுப்பது வழக்கம். உங்கள் அனுபவத்தை உத்தேசித்து கொஞ்சம் கூடுதலாகத் தர முடியும். காலை ஏழு மணிக்கு வேலைக்கு வந்துவிட வேண்டும். இடையே பகல் உணவுக்கு ஒரு மணி நேரம் ஓய்வு உண்டு. உங்களுக்கு என்று பெண்கள் பகுதியில் இரண்டு வார்டுகள் தரப்படும். அதன் பொறுப்பு முழுவதும் உங்களுடையதாக இருக்கும். மாலை ஐந்து மணிக்கு வேலை முடிகிறது. வாரத்திற்கு ஒரு தடவை இரவுப் பணி இருக்கும். வாரத்திற்கு ஒரு முறை அறுவை சிகிச்சைக்கு உதவி செய்ய வேண்டியிருக்கும். ஐந்து மணிக்குமேல் சொந்தமாக நீங்கள் உங்கள் கிளினிக்கில் கேஸ்களைப் பார்ப்பதுபற்றி எங்களுக்கு எந்தவிதமான



மறுப்பும் கிடையாது. நாளைக்கே வந்து வேலையை ஒப்புக் கொள்ள முடியுமா?''

இதயம் இரண்டாகிவிடும் போல் வேகமாக அடித்துக் கொண்டது. உண்மையா! மருதீசன் அவர்களின் பிரபலமான ஆனந்தா மருத்துவமனையில் அவளுக்கு வேலை கிடைத்து விட்டதா?... ஒரு சிபாரிசும் இல்லாது.

''நன்றி டாக்டர், நன்றி, நாளைக்கே வருகிறேன்'' என்றாள், அவள்.

விடை பெற்றுக்கொண்டு, எழுந்திருந்து வாசலை நோக்கித் திரும்பியபோது.

''டாக்டர் அனுராதா''

அவன் குழைவாகக் கூப்பிட்டான்.

''டாக்டர் மருதீசனால் இன்று வர இயலவில்லை. ஒரு சமயம் நாளைக்கு அவர் வரலாம். அப்போது அவரை அறிமுகம் செய்து வைக்கிறேன். வயதில் எங்களைவிட பெரியவர். ஆனால் பழகுவதற்கு இனியவர்.'' புன்முறுவல் செய்தபடி அவளைக் கண்களால் அளந்தான்.

''கரடி, புலி, சிங்கம் என்று வெளியார் சொல்லிக் கொள்ளும் நீங்களே இத்தனை நல்லவராக இருக்கீங்க. அவர் இன்னும் ரொம்ப நல்லவராகத்தான் இருக்க வேணும்'' சொல்ல வேண்டும்போல் நா துடித்தது. அதிகப் பிரசங்கித்தனம் கூடாது - இவருடன் அளந்துதான் பேசவேண்டும் என்று எண்ணியவளாக, தலையை ஆட்டிவிட்டு, மெல்ல வெளியேறினாள்.

வேலைக்கு அமர்ந்த சில நாளைக்குப் பின் ஒரு நாள் மாலை அவள் பஸ்ஸைப் பிடிக்க வெளியே வந்த போது மழை பிடித்துக் கொண்டுவிட்டது. கொட்டும் மழையில் நனைந்தபடி வேகமாக பஸ் நிலையத்தை அணுக அவள்

நடந்தபோது, வெள்ளை நிற ''பியட்'' கார் ஒன்று அருகே சர் என்று நிற்பதை உணர்ந்து திடுக்கிட்டுப் போனாள்.

முன் பக்கத்துக் கதவைத் திறந்து கொண்டு. ''டாக்டர் அனுராதா ஏறிக்கோங்க. நான்கூட வீட்டுக்குத்தான் போகிறேன். மழையில் ஏன் நனைகிறீங்க?'' டாக்டர் நரேந்திரன் உபசரித்தபோது அவளால் ஏன் மறுக்க முடிய வில்லை?

''ரொம்ப நனைஞ்சுட்டீங்களே! அட பாவமே. ஆமாம் உங்க வீடு?'' விசாரித்தபடி அவள் மீது பார்வையை படரவிட்டபோது அவளுக்கு வெட்கமாகத் தான் இருந்தது.

அவள் இதுவரை செய்யாத காரியம், யாருடைய காரிலும் அப்படி சட்டென்று முன் இருக்கையில் ஓட்டுகிறவர் அருகே உட்கார்ந்து வந்தது இல்லை. பயமாகத்தான் இருந்தது. வெட்கமாகவும் இருந்தது.

''நாங்கள் குடியிருப்பது ஒரு சிறு சந்து. அதுக் குள்ளேயெல்லாம் இந்தக் கார் வரமுடியாது. திருப்புகிறது சிரமம். அதனாலே சாலையிலேயே நீங்கள் நிறுத்தினால் போதும்'' அவள் மெல்ல ஒதுங்கப் பார்த்தாள்.

அவன் ஒப்புக்கொள்ளவில்லை. ''மனம் இருந்தால், சந்தாயிருந்தால் என்ன பொந்தாக இருந்தால் என்ன? இந்தக் கார் வரும். திரும்பும். கவலைப்படாதீங்க'' இருபொருள்பட அவன் பேசியதும், அவனது அருகாமையும் அவளை மெய்சிலிர்க்கச் செய்தன.

ரங்கதுரை தெருவுக்குள் அவன் காரை மிகவும் கஷ்டத்துடன் செலுத்திக் கொண்டுவந்து அவர்களது ஓட்டு வீட்டின் முன் நிறுத்தினான்.

''உள்ளே வாங்கோ!'' என்று அழைக்கக்கூட அவளுக்கு வெட்கமாக இருந்தது.



மூன்று கார்கள் - பெரிய பங்களா - ஆட்படைகள் என்று வசதியான மேல்மட்டத்து வாசி, அவன். குடிசை போன்ற தங்களது சிறு ஓட்டு வீட்டுக்குள் அழைத்து உபசரிக்க அவளுக்கு எப்படியோ இருந்தது.

''நானும் வரலாமா? இந்த மழைக்கு சூடாக ஒரு கப் காப்பி கிடைக்குமா?'' கேட்டுக்கொண்டே அவனும் காரைவிட்டு இறங்கியபோது அவளால் மறுக்க முடியவில்லை.

அம்மா மீனா அவசரமாகக் காப்பி போட்டு கலந்து சூடாகக் கொடுத்ததை வாங்கிக் குடித்தபடி அந்தச் சிறு கூடத்தில் இருந்த ஒரே நாற்காலியில் அமர்ந்தபடி, கண்களை அவன் ஓடவிட்டதைக் கண்டு அவள் அரண்டு போனாள். ஏழ்மையான அவளது சூழ்நிலையை எடை போடுகிறார். வெட்கிப்போனாள்.

அடுத்த சில நிமிடத்தில் வாசல்வரை வந்து வழி அனுப்பியபோது அவன் சொன்னான். 'உங்கம்மா போட்ட காபி ரொம்ப நல்லா இருக்கு. உங்களுக்குக் காப்பி போட தெரியுமா?'' பற்கள் தெரிய முறுவலித்தான். அவன் முகம் முன்னைவிட பிரகாசம் ஆகியது. கண்கள் பளபளத்தன.

''கொஞ்சம் பழக்கம் உண்டு.''

''ஒரு நாளைக்கு உங்கள் கையாலே காப்பி சாப்பிட ஆசையா இருக்கு. கூப்பிட்டுக் கொடுப்பீர்களா?'' விளையாட்டாக அவன் கேட்டபோது, அனு வெட்கத்தில் முகம் சிவந்து போனாள்.

''என்ன, பதில் இல்லை?''

''காப்பி என்ன சாப்பாட்டுக்கே வாங்க. அம்மா கிட்டே சொல்றேன். அம்மா நல்லா பிரியாணி செய்வாங்க.''

''ஊகும்! நீங்கள் சமைச்சு உங்கள் கையால் போடணும்.''

''என் கையாலேயே ஊட்டிவிடச் சொல்ல மாட்டீங்களே.''

இப்படித் தொடங்கிய நட்பு, எங்கே வந்து முடிந்திருக்கிறது.

அன்று இரவு அவள் உறங்க வெகுநேரம் ஆகியது. ''எழுந்திரு சீக்கிரம். பச்சைத் தண்ணீரில் முழுகிவிட்டு கோயிலுக்கு விடியற்காலை அபிஷேக ஆராதனைக்குப் போகணும். இன்னும் தூக்கமா! பிறகு திருநெல்வேலிக்கும் கிளம்பணுமே'' ரேவதி அதட்டி எழுப்பினாள்.

அவர்கள் திருநெல்வேலி வந்தடைந்தபோது பிற்பகலாகிவிட்டது. அவசரமாக உணவை அருகில் இருந்த ஓர் ஓட்டலில் முடித்துக்கொண்டு அவர்கள் புகைவண்டி நிலையத்திற்கு விரைந்தனர்.

''ஓர் இடத்தில் நீங்கள் இருவரும் உட்காருங்கள். நான் போய் நமது ரிசர்வேஷன் என்ன கதியில் இருக்குன்னு பார்த்துவரேன்'' துடிப்பும் ஆர்வமும் உள்ள டாக்டர் ரேவதிதான் ஓடினாள்.

வண்டிகள் ஏறி, அவர்களுக்கு அளிக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்து கொண்டனர்.

வெளியே லேசாக ஆரம்பித்த மழை, ஓவென்ற இரைச்சலுடன் கொட்டத் தொடங்கியது.

வண்டி ஒரு சிறு குலுக்கலுடன் நிலையத்தை விட்டுப் பிரிய மனம் இல்லாதுபோல் சிணுங்கியபடி புறப்பட்டது.

அனுவின் சிந்தனைகளும் அத்துடன் கூடத் தொடர்ந்தன.



# 3

தடக் தடக் என்று தாளமிட்டபடி நெல்லை எக்ஸ்பிரஸ் விரைந்து கொண்டு இருந்தது.

மூவர் படுக்க வசதியாக மூன்று பலகைகள் அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டு இருந்தன.

ரேவதி வயதில் அவர்கள் எல்லாரையும்விட மூத்தவள். ஆனால், உடலில் சுறுசுறுப்பின் தெம்பு அதிகம்.

''மேல் பலகையில் நான் ஏறிப்படுத்துக் கொள்கிறேன். சாரதா அம்மாளுக்கு முட்டி நோவு, கீழ்ப் பலகையில் உறங்கட்டும். நடுப் பலகையில் நீ தூங்கலாம். ஏறமுடியும் அல்லவா?''

வண்டி இருளைக் கிழித்துக்கொண்டு ஓடிக் கொண்டு இருந்தது. நேரம் நழுவிக் கொண்டு போவதை உணர்ந்த ரேவதி, சாப்பாட்டு மூட்டையை அவிழ்த்தாள். இருட்டிலே நிலையத்தில் இறங்கி ஏறி சாப்பிட எதுவும் வாங்கத் தன்னால் ஆகாது என்று முன்கூட்டியே அவள் தனது பிளாஸ்டிக் கூடைக்குள் திருநெல்வேலி ஓட்டலில் வாங்கிய இட்லி பொட்டலங்களும், பிளாஸ்கில் காப்பியும் தயாராக வைத்து இருந்தாள்.

சாரதா அம்மா வெறும் காப்பியை மட்டும் பருகி விட்டு, படுக்க ஆயத்தமாகிவிட்டாள்.

ரேவதிக்கு நல்ல பசி. இட்லிகளை ஒரு கை பார்த்து விட்டு, கையைக் கழுவிக் கொண்டு, டம்ளர் நிறைய காப்பியை ஊற்றிப் பருகினாள்.

நரேந்திரனின் நினைவுகள் நெஞ்சை அடைக்க அனுவுக்கு பசிக்கவில்லை. ஒரே ஓர் இட்லியை மட்டும் பிட்டுத் தின்றுவிட்டு கொஞ்சம் காப்பியுடன் இரவு உணவை முடித்துக் கொண்டாள்.

எல்லோரும் படுக்கத் தயாரானார்கள். ''நல்ல வேளை நாம் நகைகளை கழற்றி வீட்டில் வைத்து விட்டு மணி பிளாஸ்டிக் வளையலும், கருக மாலையுமாக புறப்பட்டது நல்லதாகப் போயிற்று. இப்போ எங்கே பார்த்தாலும் திருட்டு அதிகமாகி விட்டது. ''ரேவதி சொல்லிக் கொண்டே மேலே ஏறி கால்களை நீட்டிப் படுத்துக் கொண்டு விட்டாள்.

''கோவிலில் பார்த்தீங்களா? நாகராஜனை தரிசிக்கப் போனபோது ஒரு பெண்ணைப் பார்த்தேன். புதுமணத் தம்பதிகள் போலிருக்கு. இடுப்பிலே தகதக வென்று தகடிச் சேலை, முழங்கைவரை கனமான தங்க வளையல்கள், கழுத்திலே பிடிபிடியாக தங்கச் சங்கிலிகள். இப்போ தங்கம் விற்கும் விலைக்குக் கிட்டதட்ட லட்ச ரூபாய்க்கு மேலிருக்கும். எனக்குப் பயமாக இருந்தது. அவள் துணிவுடன் போட்டுக் கொண்டு வந்திருந்தாள்'' சாரதா அம்மாள் வியப்புடன் பேசியபடியே போர்வையை இழுத்து மூடிக்கொண்டு. கீழ்ப்பலகையில் சாய்ந்து விட்டாள்.

கையோடு கொண்டு வந்த சிறு தலையணை மீது தலையைச் சாய்த்துக் கொண்டு அனு போர்வையால் உடலை மூடிக்கொண்டாள்.

பளிச் என்று இருந்த விளக்குகள் அணைக்கப்பட்டு, மங்கிய நீல விளக்கு எரிந்து கொண்டு இருந்தது. எதிர்ப்பக்கத்து பலகையில் படுத்திருந்த மூவரும் அயர்ந்து உறங்கிக் கொண்டு இருந்தனர்.

சில பெண்களுக்கு நகைமோகம் ரொம்ப உண்டு. அதுவும் ஒருவகை நோய் போல'' ரேவதி மேலேயிருந்து முணுமுணுப்பது கேட்டது.

நரேந்திரனின் அம்மாவுக்கு அப்படி ஒரு நோய் இருந்தது. முதல் முதலாகத் தன் வருங்கால மாமியாரை



அவள் ஒரு நாள் எதிர்பாராத விதமாக அந்தத் தனியார் மருத்துவமனையில் சந்தித்தாள்.

''என் அம்மாவுக்கு லேசா சர்க்கரை இருக்கிறது. ரத்த பரிசோதனைக்கு வரச் சொன்னேன். அந்த அம்பாசிடரில் இருந்து இறங்கி வராங்களே அவங்கதான் என் அம்மா'' வராந்தாவிலே நின்று கொண்டிருந்த அனுராதாவிடம் அவன் தன் தாயைப் பெருமையுடன் அறிமுகப் படுத்தினான்.

ஐம்பது வயதிற்கும் மேல் இருக்க வேண்டும். ஆனால்! மிதமிஞ்சிய ஒப்பனையில் தமக்கை போன்று இளமையாகக் காணப்பட்டாள். நகை காய்ச்சி மரம் போன்ற தோற்றம். அழுத்தமாக, அடுக்காகக் கைகளில் பல தங்க வளையல்கள். கழுத்திலும் பல கொத்து சங்கிலிகள். காதில் வட்டமாக அகன்ற வைரக் கம்மல். கையிலே ஒரு பெரிய அழகுப் பை. இடையிலே கனத்த சரிகைக் கரை வைத்த காஞ்சிபுரப்பட்டு. ''பணக்காரி'' என்ற தம்பட்டங் கொட்டிய தோற்றத்திலே தேர்போல் தனது இரட்டை நாடி சரீரத்தை அசைத்துக் கொண்டு மெல்ல மிடுக்காக உள்ளே வந்தாள்.

அம்மாவிடம் பிள்ளைக்கு மட்டற்ற மதிப்பு இருந்தது. அவளைக் கண்டதும் அடித்துப் புரட்டிக் கொண்டு கவனிக்க விரைந்தான்.

''இவங்க இந்த மருத்துவமனையிலே வேலை பார்க்கிற டாக்டர் அனுராதா'' அவளைத் தன் தாயாருக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

தன் வீட்டைப் பெருக்கும் வேலையாளைப் பார்ப்பது போல அசட்டையாக மேலும் கீழும் கண்களால் அளந்தாள். அந்தம்மாள் பெயர் சண்பகம், ஆனால் பண்பு எனும் வாசனை சிறிதும் கிடையாது என்பதை முதல் அறிமுகத்திலேயே புரிந்து கொண்டு விட்டாள் அனு.

''போய்விட்டு வரேன்'' -காரியம் ஆனதும் தன் மகனிடம் மட்டும் சொல்லிக் கொண்டு அவள் கிளம்பிச் சென்று விட்டாள். மற்ற வைத்தியர்கள், நர்சுகள், ஆஸ்பத்திரி ஆட்கள் எல்லோரும் அவள் கண்களுக்குத் தூசியாகத்தான் பட்டனர்.

பரம்பரையாக பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவள் அவள். அந்தக் கர்வம் பார்வையிலும், நடையிலும், கழுத்துத் திருப்பத்திலும் மித மிஞ்சிக் கிடந்தது.

''என் தாயாருக்கு உங்களைப் பிடிக்கறதுன்னு நினைக்கிறேன். வலியில்லாமல் ரத்தத்தை ஊசியால் எடுத்த முதல் டாக்டர் நீதான்னு சொன்னாங்க.'' உணவு வேளையின்போது அவன் அவளிடம் வந்து பேசினான்.

''அப்படியா, சந்தோஷம்'' என்றாள் அனு. அந்த நகைகாய்ச்சி மரத்தின் மனத்திலே மற்றவர்களைப் பற்றிய நினைப்பு கூட இருக்குமா அதிசயப்பட்டாள் தனக்குள்.

ரெயில் வண்டி ஓவென்ற கூச்சலுடன் ஓடிக்கொண்டு இருந்தது. சன்னல் வழியாகக் கண்ணாடிக் கதவின் ஊடே மெல்ல கண்களைத்துருவிக்கொண்டு பார்த்தாள், அனு. வெளியே ஒரே இருட்டு. மழை இன்னும் பெய்து கொண்டு இருந்தது. இடுக்கு வழியே அடித்த சாரல் தண்ணீர் லேசாக ஒழுகிக்கொண்டு இருந்தது.

இன்னொரு மழை நாள். வானமே பொத்துக் கொண்டு விட்டது போன்று அன்று மழை கொட்டிக் கொண்டு இருந்தது. பலத்த இடியும் மின்னலும்.

மருத்துவமனையில் வேலை முடிந்ததும் கிளம்பத் தயங்கிக் கொண்டு வாயில்படி மீது அனு நின்று கொண்டு இருந்தாள். ''டாக்கி ஒன்றை வரவழைத்துப் போய் விட்டால்? இன்று ஒரு நாள் கொஞ்சம் செலவு செய்துதான் ஆகவேண்டும் போலிருக்கு. இந்த மழை விடும் போல் தோணலையே'' நினைத்தபடி அவள் நின்று கொண்டு இருந்தாள்.



''ஹாய் டாக்டர் வீட்டுக்குத்தானே? நான் கொண்டு விடறேன்'' பின்னால் வந்த அதிகாரக் குரல் திடுக்கிடச் செய்தது?

''இப்படி வாங்க. காரை இந்தப் பக்கம் நிறுத்தி வச்சிருக்கேன். எனக்கும் வேலை முடிஞ்சு போனது நல்லதாச்சு. உங்களிடம் இன்னிக்கு ஒரு விஷ்யம் பேசணும்னு நினைச்சேன். மழை அதுக்கு எனக்காக ஒத்துழைக்கிறது'' சிரித்தபடி அவன் முன்னே நடக்க மறுக்கமாட்டாது காந்தத்தால் கவரப்பட்ட இரும்புத் தூளைப் போல அவன் பின்னால் நகர்ந்தாள்.

வண்டி வெகுதூரம் விரையும் வரையும் அவன் ஏதும் கேட்கவில்லை. வீட்டுக்குப் போகும் திசை சந்து மாறி யிருப்பது போல் காணப்படவே அவள் கலவர மடைந்து போனாள்.

''முதலில் என்னை வீட்டில் விட்டுவிட்டுப் போவீங்கன்னு நினைச்சேன், வேறே எங்கேயோ?'' தடுமாறினாள் சிறிது அச்சத்துடன்.

கலகலவென்று சிரித்தான், அவன், ''படித்திருந்தும் பத்தாம் பசலியாக இருக்கிறீங்களே, என் வீட்டுக்கு உங்களைக் கூட்டிக்கொண்டு போகப் போகிறேன். என் வீட்டில்தான் உங்களிடம் முக்கியமான விஷயத்தைப் பேசப் போகிறேன். அம்மாகூட வீட்டில் இல்லை அதனால்...''

அவன் முடிக்குமுன், 'ஐயோ! வீட்டிலே பெரியவங்க இல்லாதபோது... என்ன பேசணும்? என்று அவள் குமுறினாள்.

அவன் மீண்டும் சிரித்தான். ''ரொம்ப பயந்தாங் கொள்ளி. உங்கள் படிப்புக்கும் உங்கள் குணத்துக்கும் பொருத்தமேயில்லையே! அம்மா வீட்டிலே இல்லா விட்டால் என்ன? அவங்க தன் தங்கச்சியைப் பார்க்க டெல்லிக்குப் போயிருக்காங்க. ஆனால், வேலையாட் கள், சமையல் ஆள் எல்லாரும் இருக்காங்க. நான் உங்களை ஒரு காட்டு பங்களாவுக்கு கடத்தியா கொண்டு போகிறேன்?'' கேட்டு விட்டு மோகனமாக முறுவலித்தான்.

அதற்கு அவளால் பதில் சொல்லத் தெரியவில்லை. முகம் சிவக்க-நெஞ்சு பதைபதைக்க, பொங்கிப்புரண்ட உணர்வுகளை சமாளிக்க முயன்றபடி காரின் கதவோடு ஒட்டிக்கொண்டாள்.

அடையாறில் அவனது பெரிய பங்களா இருந்தது. காரைக் கண்டதும், கேட்டை அகலத் திறந்து வைத்து விட்டு சலாம் அடித்த கூர்க்கா, மழைக்காக தனக்குக் கட்டப்பட்டு இருந்த அந்தச் சிறு கூண்டுக்குள் ஒண்டிக் கொண்டான்.

போர்டிகோவில் காரை நிறுத்துவிட்டு இறங்கினான் நரேந்திரன்.

உள்ளேயிருந்து ஒரே பாய்ச்சலாக ஓடிவந்த ஒரு வெள்ளை ''அல்சேஷன்'' தொப்பென்று ஆசையுடன் அவன் மீது விழுந்ததைக் கண்டு அரண்டு போய் காரிலேயே அமர்ந்து இருந்தாள் அனுராதா.

''இறங்குங்கோ, பயப்படாதீங்க வால்டர் ரொம்ப நல்லவன் - எனக்கு வேண்டியவங்கன்னு புரிந்து கொண்டு விடுவான்'' விளையாட்டாக அவன் அழைத்தபோது பயத்துடன் அவள் கீழே இறங்கினாள்.

சந்தேகப் பார்வையுடன் வாலை மெல்ல அசைத்த நாயைக் கண்டு அவளுக்கு மிக்க பயமாகத்தான் இருந்தது.



படிமீது தயக்கமாக நின்றுகொண்டு இருந்தபோது வானத்திலே பளீர் என்று ஒரு மின்னல்-தொடர்ந்து ஒரு பலத்த இடி.

''அம்மாடி'' கத்திக் கொண்டு படிகளை விரைவில் தாண்டி ஓடிவந்த தடுமாற்றத்திலே விழ இருந்தவளை அவன் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

''நாயைக் கண்டு பயம். இடியைக் கண்டு அச்சம், என்னைக் கண்டும் பயமா?'' கேலியாகக் கேட்டபடி அவளை மெல்லத் தாங்கிப் பிடித்துக்கொண்டு உள்ளே அழைத்துச் சென்றபோது அவளுக்குக் கலவரமும் வெட்கமும் தாளவில்லை.

''கணபதி சூடா காப்பியும், சாப்பிட ஏதாச்சும் கொண்டுவா'' உத்தரவிட்டபடி அவளை தங்கள் வீட்டு முன்னறைக்கு அழைத்துச் சென்றான்.

பின்னாலேயே நிழல்போல வந்த நாயை அரைக்கண்ணால் பார்த்தபடி, கொஞ்சம் மிரட்சியுடன் அவள் அவன் காட்டிய இருக்கையில் உட்கார்ந்தாள்.

வால்டர் சட்டென்று பாய்ந்து தன் முன்னங்கால் களை மடிமீது வைத்து முகத்துக்கு அருகே தன் முகத்தை நீட்டியபோது ''அம்மாடி'' என்று மறுபடியும் அவள் அலறிவிட்டாள்.

வால்டர்! இப்படி வா. உன் வருங்கால எஜமானியைப் பார்க்க இத்தனை துடிப்பா? போ, அப்பாலே'' அவன் அதட்டியதைக் கேட்டு அடுத்த அதிர்ச்சி அவளுக்கு.

''என்ன, அப்படிப் பார்க்கிறே! இனி ஒருமையில் தான் பேசறதுன்னு முடிவு செய்துட்டேன். எதுக்காக இங்கே கூட்டி வந்தேன் தெரியுமா?'' சொல்லிக் கொண்டே எழுந்து உள்ளே சென்றான்.

சிறிது பொழுதில் விரைவாகத் திரும்பியவன் கையில் ஒரு சிறு வெல்வெட் பெட்டி இருந்தது.

''கையை நீட்டு'' உத்தரவிட்டபடியே அவள் இடக்கரத்திலே பெட்டிக்குள் இருந்த வைர மோதிரத்தைத் தன் கரங்களால் அணிவித்தான். ''இந்த மோதிரம் எங்கள் குடும்பத்துச் சொத்து. பாட்டி முப்பாட்டி வழியாக வந்தது. நான் யாரைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேனோ அவளுக்குப் போடும்படி அம்மா என்னிடம் கொடுத்திருக் காங்க.''

நெஞ்சு படபடக்க, முகம் சிவக்க, பதில் பேசத் தோணாது அவள் தரைமீது விரிக்கப்பட்டு இருந்த பாரசீகக் கம்பளத்தை வெறித்தாள். டாக்டர் நரேந்திரன் அவளை மணந்து கொள்ள, விரும்புகிறாராமே உண்மையா!

சிண்டிரெல்லா கதை தெரியும் இல்லையா? காலில் இருந்து நழுவி விழுந்த அந்த தங்கப் பாதணியை எடுத்துக் கொண்டு அது எந்தப் பெண் காலுக்குப் பொருந்துகிறதோ அவள்தான் அந்த ராஜகுமாரின்னு ஊர் ஊராகத் தேடினார்களாமே? அதுபோல, நானும் தேடிக்கொண்டு இருந்தேன். உன் விரலுக்கு செய்தது போல், எத்தனை பொருத்தமா, சரியா இருக்கு பாத்தியா? இந்த நரேந்திரனின் ராஜகுமாரி... இந்த அனுராதாதான். அனு! உன்னை நான் மனமார நேசிக்கிறேன். என்னைக் கல்யாணம் செய்துகொள்வியா?''

ஆசையுடன் அவன் அருகில் வந்த குழைந்த குரலில் கேட்டபோது, அவளுக்கு என்ன கசக்குமா? கட்டுக் கொள்ள முடியாத மகிழ்ச்சி! முதல் நாள் பார்த்ததில் இருந்து அவளுந்தான் அவனை தன் மனத்திற்குள் பிடித்து வைத்துக்கொண்டு ஆசையைத் துறக்க முடியாது தவிக்கிறாளே?



''உனக்கு என்னைப் பிடிக்கிறதா?'' கேட்டபடி அவன் அருகில் வந்தபோது அந்த இன்பத்திலேயே அவள் இதயம் துடிப்பதை நிறுத்தி, உறைந்துவிடும் போல தவித்துப் போனாள்.

''இந்தத் தகுதிக்கு நான் பொருத்தமானவளான்னு யோசிக்கிறேன்.''

''ரொம்ப பொருத்தமானவள். பணம்-பதவி-அந்தஸ்து இதெல்லாம் எனக்கு முக்கியம் அல்ல. என் மனசுக்கு அமைதியைத் தருகிற ஒருத்திதான் முக்கியம்.''

அவன் அப்படிப் பேச, அதைக் கேட்க எத்தனை சுவையாக இருந்தது.

இருமிக்கொண்டு தான் வருவதை அறிவுறுத்திய வண்ணம் உள்ளே வந்தான், சமையல் ஆள் கணபதி.

மரத்தட்டிலே பீங்கான் கெட்டிலில் காப்பியும், பருக கோப்பைகளும், தட்டுகளில் பாதாம் அல்வாவும், வெங்காய பக்கோடாவும் கொண்டு வந்து வைத்தான்.

''முதலில் இனிப்பை சாப்பிடு. நம் வாழ்க்கை இனிப்பாக இருக்கட்டும்'' அவன் கொஞ்சியபோது அனுராதாவுக்கு சொர்க்கத்தில் இருப்பது போன்று சுகமாக இருந்தது.

வெகு விரைவில் தலைகுப்புற நரகத்தில் விழுந்து விட நேரும் என்பதை அவள் அப்போது அறிந்திருந்தால்...?

அன்று நேரம் கழித்துதான் அவள் தன் வீட்டிற்குத் திரும்பினாள். வெகு நேரம் தங்கள் வருங்காலத்தைப் பற்றிப் பேசிவிட்டு மழை நின்றதும் அவளைக் காரில் கொண்டு வீட்டு வாசலில் இறக்கிவிட்டுப் போயிருந்தான்.

எடுத்த எடுப்பிலேயே அம்மா மீனா கேட்டு விட்டாள்.

''ஏன் இவ்வளவு நேரம்? யார் கார் அது? அன்னிக்கு வந்தாரே அதே டாக்டர்தானே?'' படபட வென்று பல கேள்விகள்.

''அவர் எங்கள் மருத்துவமனையின் தலைவர் என்று வச்சுக்கோங்க. மழை அதிகமாகக் கொட்டிச்சு-இருட்டிப் போச்சேன்னு அவரே கொண்டு வந்து விட்டார்.''

இலையைக் கூடத்துத் தரையில் விரித்து, நீர் தெளித்து விட்டு தம்ளரை பக்கத்திலே வைத்தாள் மீனா. ''முதல்லே கைகால்களைக் கழுவிட்டு சாப்பிடு. பின்னாடி உங்கிட்டே பேசணும்'' அம்மாவின் குரல் காரமாக ஒலித்தது.

குற்ற உணர்வின் சுமை. நரேந்திரனின் பங்களாவில் சாப்பிட்ட சிற்றுண்டி வேறு வயிற்றை அடைத்துக் கொண்டு இருந்தது. அவளால் அன்று வழக்கம்போல் உணவைச் சுவைத்து சாப்பிடவே முடியவில்லை. இங்கு மங்கும் பதார்த்தங்களை ஒதுக்கிவிட்டு விரைவாக முடித்துக்கொண்டு, நீர் சாப்பிட இடக்கையால் தம்ளரைத் தூக்கினாள்.

கூடத்து மின்விளக்கு ஒளியில் பளபளவென்று அவள் கைவிரலில் மின்னிய மோதிரம் அம்மாவின் கண்களில் பட்டுவிட்டது.

மகள் எழுந்து கையைக் கழுவிக்கொண்டு கூடத்திற்குள் வருவதற்குள் பொறுக்க முடியாமல் கேட்டு விட்டாள். ''கையில் அது என்ன? புதுசா மோதிரம், எங்கே வாங்கினே? எப்போ வாங்கினே? பார்த்தால் வைரம் போல இருக்கே?''

''வைர மோதிரம்தான், அம்மா. டாக்டர் நரேந்திரன் எனக்குப் பரிசாகக் கொடுத்தார்.''

''பரிசாகவா?'' அம்மா உரத்துக் கத்தி விட்டாள்.



''உங்கள் கிட்ட நான் இதுவரை எதையும் மறைச்சதில்லே. நிதானமா சொல்லத்தான் இருந்தேன். நீங்கள்தான் அவசரமா கேள்வி மேலே கேள்வி போடறீங்க. டாக்டர் நரேந்திரன் ஆனந்தா மருத்துவமனை யின் ஒரு கூட்டாளி. டாக்டர் மருதீசன் ஓய்வு எடுத்துக்க விரும்புகிறார். நர்ஸிங்ஹோம் முழுவதும் விரைவில் நரேந்திரனுக்கே சொந்தமாகி விடலாம். அப்படி ஒரு பேச்சு பரவலா இருக்கு.''

''அதுக்கும் இந்த மோதிரத்துக்கும் என்ன சம்பந்தம்?'' அம்மா மீனா வெடித்தாள் கோபத்துடன்.

''ஆனந்தா மருத்துமனையின் வருங்காலத் தலைவர் என்னை மணந்துகொள்ள விரும்பிக் கேட்டார். ஒத்துக் கொண்டு விட்டேன். அதற்கு அடையாளமாக இந்த மோதிரத்தை அவர் எனக்கு இன்னிக்குக் கொடுத்தார்.''

''அனு என்னைக் கேட்காமல் கொள்ளாமல் இப்படி ஒரு காரியம் நீ செய்வியா? அவர் அந்தஸ்து என்ன? நம்ப அந்தஸ்து என்ன? யோசிச்சுப் பார்த்தியா? அந்தக் காலத்திலே சகுந்தலைக்கு துஷ்யந்தன் மோதிரம் போட்டாப்போல ஏதாவது ஏடாகூடமா நடந்துட்டால் நான் உசிரோடவே இருக்க மாட்டேன், தெரிஞ்சுக்கோ.''

அனு ஒரே பாய்ச்சலில் அம்மாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு விட்டாள்.

''அம்மா! இது சகுந்தலை-துஷ்யந்தன் கதை யில்லை. அவர் என்னை மனசார விரும்பறார். இருவரும் ஒரே தொழிலில் ஈடுபட்டு இருக்கிறோம். அந்தஸ்து பிரச்னையே இல்லையம்மா. அவரே என்னை ரொம்ப விரும்பிக் கேட்டார், அம்மா.''

''நீ...'' அம்மா ஒரே ஒரு கேள்வியை அழுத்தமாகக் கேட்டுவிட்டு மகளின் முகத்தை ஊடுருவிப் பார்த்தாள்.

''எனக்கும் அவர் மேலே ரொம்ப விருப்பமாகத் தான் இருக்கு.''

''பணம், பங்களா, பதவி இதெல்லாம் பார்த்து மயங்கிட்டியோ?''

''இல்லேம்மா. சத்தியமா சொல்றேன். அவரை அவரது அறிவுக்கும் திறமைக்கும் அவருக்காகவுமே விரும்பறேன் அம்மா.''

''இன்னும் அவர் தன் தாய்கிட்ட சொல்லலை. உங்களை வந்து முறைப்படி பெண் கேட்கலை. அதுக்குள்ளே இப்படி கோவிச்சுக்கிறீங்களே, அம்மா!'' மகள் செல்லமாக தாயின் கழுத்தை இறுக்க அணைத்துக் கொண்டு கன்னத்துடன் கன்னம் வைத்துக் குழைந்த போது, அந்த ஏமாந்த தாயும் சம்மதம் கொடுத்து விட்டாள்.

ஆனால், மாமியார் சண்பகம் சட்டென்று சம்மதம் கொடுத்தாளா?

விஷயத்தை மகன் அறிவித்ததும், கோபத்திலே குதித்துக் கூத்தாடினாள்.

''உன் படிப்புக்கும் - நம் அந்தஸ்த்துக்கும் எந்த விதத்தில் ஈடுன்னு இவளைப் போய்ப் பிடிச்சே? வேண்டாம்! இந்தப் பெண்ணை மறந்துடு.''

தாயாருக்கும் மகனுக்கும் இடையே இந்தக் கல்யாணத்தில் பெரும் கருத்து வேற்றுமை-தகராறு-சண்டை கண்ணீர். முடிவில் மகனது பிடிவாதத்திற்கு தாயார் விட்டுக் கொடுத்துத் தொலைத்தாள்.

''சொக்குப் பொடி தூவி என் மகனை மயக்கி விட்டாள் அனுராதா'' என்றவரை அவள்மீது எடுத்த எடுப்பிலேயே மாமியாருக்கு வெறுப்பு.



''சம்பந்தி'' என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ள முடியாத குடும்பம் என்று மற்றொரு குறை. அதனால் ஏற்பட்ட வெறுப்பு.

இப்படிப் பல காரணங்கள். மாமியாருக்கு வேண்டாத மருமகளாகத்தான் அனு அந்தப் பங்களாவுக்குள் காலெடுத்து வைத்தாள்.

தன்னால் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே ஏற்பட்ட பிரிவைக் கண்டு சண்பகம் அதிர்ந்துபோய் விடவில்லை. ஒரு வகையில் சந்தோஷப்பட்டாள் என்றே சொல்ல வேண்டும். ''நாங்கள் போட்ட நகைகளை யெல்லாம் கழட்டி வச்சுட்டு போ - யார் உன்னைப் பிடிச்சு நிறுத்தறா?'' அமுத்தலாகத்தான் பேசினாள்.

நல்ல வேளை, இந்த வேதனைகளைப் பார்த்துக் கொண்டு இருக்க அவள் தாய் மீனா உயிருடன் இருக்க வில்லை. பேரன் பிறந்திருக்கிறான் என்ற மகிழ்ச்சிச் செய்தியைக் கேட்ட சில நாளில், அவள் பரலோகம் போய்ச் சேர்ந்து விட்டாள்.

கோபத்துடன் நரேந்திரனது பொருள் அனைத்தை யும் அவள் வைத்து விட்டுத்தான் கிளம்பினாள். பெற்ற குழந்தையைக் கூடப் பிரிந்தாள். ஆனால் அந்த வைர மோதிரத்தை மட்டும் திருப்பிக் கொடுக்க அவளுக்கு மனம் இருக்கவில்லை.

விலை உயர்ந்த பொருள் என்றதால் ஏற்பட்ட பிடிப்பு அல்ல. முதல் முதலாக காதல் என்ற உயர்ந்த உணர்வை அவள் மனதில் ஏற்படுத்தி. அந்த அழகான பரிசை அவள் கரத்தில் அணிவித்த அந்த இனிய நினைவை அவள் மறக்க விரும்பவில்லை.

''அந்த மோதிரம்?'' சண்பகம் அதட்டிக் கேட்டாள்.

"அதை நான் திருப்பித் தரப்போவது இல்லை. முதல் முதலாக அவர் எனக்குக் கொடுத்தது. ஒருத்தருக்கு ஒரு பொருளை பரிசாகக் கொடுத்து விட்டால் பின்னர் அது அவர்களுக்குத்தான் சொந்தம், அப்படித்தான் சட்டம்."

"ரொம்ப சட்டந் தெரிஞ்சவள்! வாயை வளர்த்து வச்சிருக்கா, உங்க அம்மா."

"என் அம்மாவைப் பத்தி நீங்கள் எதுவும் பேசத் தேவையில்லை."

'கோபமாகக் கூறிவிட்டு டாக்சியில் ஏறிக் கொண்டாள்.

வருவான் - ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் நரேந்திரன் அவளைத் தேடி வருவான் என்று அவள் எதிர்பார்த்தாள். எத்தனை ஏமாற்றம்! அவர்கள் இடையே மூண்ட அந்த அன்புக் காதலுக்கு இப்படி ஒரு முடிவா?

திருச்சி ஜங்ஷன் என்ற கூக்குரல் கேட்டது?.

வண்டி நின்றது. அவள் வெளியே எட்டிப் பார்க்க விரும்பினாள். அவளையும் அறியாது கன்னங்களில் வழிந்து கழுத்தை நனைத்து விட்டிருந்த கண்ணீரை பரபரப்பாகத் துடைத்துக் கொண்டாள்.

"இப்பத்தான் திருச்சி வந்திருக்கு. இங்கே கொஞ்சம் பத்திரமா இருக்கணும். இங்கே தபதபன்னு கூட்டம் வண்டியிலே ஏறும்... இந்த பக்கமெல்லாம் திருட்டு அதிகம்னு சொல்லிக்கிறாங்க" ரேவதி கரகரத்த தொண்டையில் தூக்கக் கலக்கத்துடன் மேல் பலகையில் இருந்து எச்சரித்தாள்.

இடுப்பிலே முடிப்பில் புதையுண்டு பத்திரமாக இருந்த அந்த வைர மோதிரத்தை தடவித் தொட்டுப் பார்த்துக் கொண்டாள் அனுராதா.



"என்ன சொன்னீங்க?" கேட்டபடி விழித்துக் கொண்ட சாரதா, கீழே கையை நீட்டி பெட்டிகள் பத்திரமாக இருக்கின்றனவா என்று துழாவிப் பார்த்தாள்.

சற்று நேரத்தில் வண்டி இழுத்துக் குலுக்கிக் கொண்டு நகரத் தொடங்கியது.

போர்வையை சரி செய்து கொண்டு மீண்டும் தலையைச் சாய்த்தாள், அனுராதா.

உறக்கம் வந்தால்தானே?

சிந்தனைகள் சிறகடித்துக் கொண்டு அந்த நாளை நோக்கிப் பறந்தன.

## 4

நகரத்தில் மிகவும் பிரபலமான கார்த்தி கல்யாண மண்டபத்தில் அவர்களது திருமணம் நடக்க ஏற்பாடாகி இருந்தது.

"எங்களுக்கு வேண்டியவங்க ஏகப்பட்டவங்க இருக்கிறாங்க. அதோட நரேந்திரனின் நண்பர்கள் வேறு படை திரட்டிக்கிட்டு வந்துடுவாங்க. அதனாலே எங்கள் கவுரவத்துக்குத் தக்கபடியா நாங்கள் அந்த மண்டத்திலே தான் கல்யாணத்தை வச்சிக்கப் போறோம். நீங்களா செலவழிக்கப் போறீங்க! ஏன் அப்படி முழிக்கிறிங்க?" சம்பந்தியம்மாள் சண்பகம் தன் ஏழைச்சம்பந்தி மீனாவிடம் மிடுக்காகப் பேசினாள்.

முதல் சந்திப்பிலேயே சம்பந்தியம்மாளின் கர்வ மனப்பான்மையைப் புரிந்துகொண்டு விட்ட மீனாவுக்குக் கொஞ்சம் அச்சமாகத்தான் இருந்தது. "பணத்திமிருடன் பேச்சுக்குப் பேச்சு மற்றவர்களை மட்டந்தட்டிப் பேசும்

சண்பகத்துடன் எப்படிச் சமாளிக்கப் போகிறோம்? ஆழந்தெரியாது இந்தப் பெண் எங்கேயோ இறங்கி விட்டாளே'' தாங்க முடியாத கவலை அவளுக்கு.

மருத்துவமனையில் வார்டுகளைச் சுற்றிப் பார்வையிட்டுக்கொண்டு இருந்தாள், அனு. முதல் நாள் மாலைதான் அவளை நரேந்திரன் கடைக்குக் கூட்டிக் கொண்டு போயிருந்தான். அவன் விரும்பியவண்ணமே பட்டும் - பனாரசும் வாங்க அனுமதித்தான். அந்தந்தக் கடைகளில் சட்டைப் பையில் இருந்த காசோலையை எடுத்துத் தொகையைக் கையெழுத்திட்டுக் கிழித்துக் கொடுத்துக் கொண்டு இருந்தான்.

பெட்டிமேல் பெட்டியாக அடுக்கி மூட்டையாகக் கட்டிக்கொண்டு தூக்க முடியாத புடவைச் சுமையுடன் உள்ளே நுழைந்த மகள் அவற்றை கூடத்திலே பரப்பினாள்.

''அம்மா, இதெல்லாம் அவர் எனக்கு வாங்கித் தந்திருக்கும் கல்யாணப் பரிசு, அம்மா! பாருங்கள்'' உள்ளே கைவேலையாக இருந்த மீனாவைச் சுண்டி இழுத்தாள், மகள்.

''இந்தச் சேலை கிட்டத்தட்ட எழுநூறு ரூபாய், அம்மா! கரையும் தலைப்பும் பார்த்தீர்களா.''

''இது கூட ரொம்ப விலைதான். வரவேற்புக்கு உடுத்திக்கலாம்னு நினைக்கிறேன். ஆயிரத்து நூறு ரூபாய்! அம்மா!''

''என்னம்மா பேசமாட்டேங்கறீங்க?'' மகள் தாயாரை வற்புறுத்திக் கேட்டாள்.

மீனாவின் கண்கள் கலங்கிப் போயின. ''ஒரு தாயாருக்கு இந்தப் பட்டும் பனாரசும் பெரிய விஷயம் இல்லே, அம்மா. தன் குழந்தையின் மகிழ்ச்சிதான் ரொம்ப முக்கியம்.''



''நான் சந்தோஷமாகத்தானே இருக்கேன்!''

''நீடிச்சு இருக்கணும்னு கவலைப்படறேன். ஏன்னா என் உசிரைக் கொடுத்து உன்னை பாடுபட்டு வளர்த்து ஆளாக்கியிருக்கேன். எந்தக் காரணத்தினாலாவது உன் சந்தோஷம் குலைஞ்சு போச்சுன்னா அதை நான் தாங்கிக்க முடியாது'' திடீரென்று அம்மா விம்மி அழுதாள்.

''ஏனம்மா இப்படிக் கண்ணீர் வடிக்கிறீங்க? ஏதோ நான் தகாததைச் செஞ்சுட்டாப்பல வருத்தப்படுகிறீங்களே'' மகள் சிணுங்கினாள்.

''நமக்குக் கொஞ்சமும் தகாத இடமாச்சே அதனாலே ரொம்பக் கவலையாயிருக்கு.''

''அவர் என் மேலே ரொம்ப அன்பு வச்சிருக்கார், அம்மா. அதனாலே நமக்குள் அந்தஸ்து வேற்றுமை குறுக்கே வராது, கவலையை விடுங்கள். சந்தோஷமா இங்கே வந்து இதையெல்லாம் பாருங்கள்'' மகள் உற்சாகப்படுத்தினாள்.

அன்று தாயார் பட்ட கவலை விரைவில் உண்மையாகி விடப் போகிறது என்பதை அவள் கனவில்கூட நினைக்க வில்லையே!

''டாக்டரம்மா! உங்களைத் தொலைபேசியில் யாரோ அழைக்கிறாங்க.''

வார்டு வேலை நடுவே நர்சு வந்து அழைத்தாள். அனுராதா தொலைபேசியிருக்கும் வட்டத்திற்குள் விரைவாகச் சென்றாள்.

மறுபக்கத்திலே டாக்டர் ரேவதிதான் பேசினாள். ''இன்று வீட்டுக்குப் போகுமுன் என் கிளினிக்கிற்கு நீ வந்து போக வேணும். உன்னோடு நான் பேச வேண்டும்.''

ரேவதியின் பேச்சிற்கு அவளால் மறுப்புத் தெரிவிக்க முடியவில்லை. ஒப்புக்கொண்டாள்.

அன்று மாலை வழக்கம்போல டாக்டர் நரேந்திரன் அவளை வீட்டுக்கு அழைத்துச் செல்ல காரைக் கிளப்பிக் கொண்டுவந்து நிறுத்தியபோது அவள் தன் சிநேகிதி ரேவதியைப் பார்க்கப் போக வேண்டும் என்று கூறினாள். விடைபெற்றுக் கொண்டு பஸ்சை நோக்கிச் சென்றாள்.

ரேவதியின் மருத்துவ அறையில் அப்போது நோயாளிகள் அதிகம் இருக்கவில்லை. கடைசியாகக் காத்திருந்த இரண்டு பெண்களையும் விரைவில் கவனித்து அனுப்பிவிட்டு, தன் தோழியை அறைக்குள் அழைத்துக் கொண்டாள்.

''கல்யாண ஏற்பாடுகள் ரொம்பத் துரிதமாக நடக்கிறதாமே?'' ரேவதி கேட்டாள். ''தேதிகூட நிச்சயித்தாச்சு. நானே நேரில் வந்து சொல்ல இருந்தேன். அதுக்குள்ளே, நீங்களே கூப்பிட்டுவிட்டீங்க'' வெட்கத்துடன் முறுவலித்தாள் அனுராதா.

''டாக்டர் நரேந்திரனைக் கல்யாணம் செய்து கொள்வதில் உனக்குப் பூரண சம்மதந்தானே?''

''என்ன அப்படி ஒரு கேள்வி கேட்கிறீங்க! போன தடவை உங்களைச் சந்தித்தபோது எங்கள் இடையே ஏற்பட்டு இருக்கும் காதலைப்பற்றி ஒளிவு மறைவு இல்லாமல் சொன்னேனே?'' ஆதங்கத்துடன் கேட்டாள் அனுராதா.

''உங்கம்மா இன்று காலை என்னைப் பார்க்க வந்தாங்க. அவங்களுக்கு இந்தக் கல்யாணத்திலே அத்தனை பிடித்தம் இல்லை. எனக்குக் கூட அத்தனை உசிதமாகப்படலை.''

''தேதி வச்சு மண்டபத்துக்கு ஏற்பாடு பண்ணி, துணிமணிகள் எடுத்த பிறகு இப்ப வந்து அம்மா



வேண்டாம்னா என்ன அர்த்தம்? நான் சுகமா வாழ்வதைக் காண அவங்களுக்கே பிடிக்கலையா? மகள் கல்யாணம் பண்ணிக்கொண்டு போய் விட்டால், அவளது சம்பாத்தியம் போயிடுமேன்று கவலையா?'' ஆத்திரத்துடன் படபடத்தாள், அனு.

''பாத்தியா, நீ இப்படி பேசுவேன்னு தெரிஞ்சுதான் அவங்க என்கிட்ட வந்து முறையிட்டுக் கொண்டாங்க. உனக்கு டாக்டர் நரேந்திரனையும் அவங்க அம்மாவையும் நல்லாத் தெரியுமா?''

''அவங்க அம்மாவை நான் கல்யாணம் செய்துக்கப் போறதில்லை. அவங்க கொஞ்சம் கர்வமானவங்கன்னு பட்டது. என்னைப் பொறுத்தவரை நான் என் வருங்காலக் கணவரை அறிவேன். அது போதாதா?''

''போதாது. உனக்கு டாக்டர் நரேந்திரனை சரியாகத் தெரியாது. தனக்குத் தொழிலில் திறமை அதிகம் உண்டு என்ற மண்டைக் கர்வம் அவருக்கு அதிகம். பணக்காரன் என்ற திமிர். இன்னும் அவரிடம் எத்தனையோ குறைகள் உள்ளன. நல்லா புரிஞ்சு கொண்டுதானே இந்த கல்யாணத்துக்கு ஒப்புக்கொண்டு இருக்கிறே?''

''நான் அவரை விரும்புகிறேன். அவர் என்னை நேசிக்கிறார். குற்றம் குறைகளை நாங்களே புரிந்து ஈடுசெய்து கொண்டுவிடுவோம்.''

''இது போதாது. உன் கணவனை ஒரு சமயம் உன் வழிக்குக் கொண்டு வந்துவிடலாம். உன் மாமியாரை கடவுள்கூட திருத்த முடியாது. பணத் திமிரும் அந்தஸ்தும் அவங்க ரத்தத்திலே ஊறிக் கிடக்கு. உன் மாமியார் பெரிய இடத்துப் பெண் என்பது உண்மை. உன் மாமனார் ரொம்ப சாதாரண இடத்துப்பிள்ளை. அவர் படிப்பிற்காக உன் மாமியாரை அத்தனை சொத்துக்களுடன் கொண்டுவந்து

கொடுத்தார்களாம். அதைக் காரணமாக வைத்துக்கொண்டு உன் மாமியார் தன் கணவனை பாடாய்ப்படுத்தி வைத்துவிட்டார்களாம். பாவம், மனிதர் மனைவியுடன் வாழ முடியாது தமது வயது காலத்தில் வீட்டைவிட்டு வெளியேறி சந்நியாசம் மேற்கொண்டு வடக்கே எங்கேயோ போய் ஒரு மடத்தில் உயிரை விட்டாராம். கணவனையே வீட்டை விட்டுத் துரத்தியவள் மருமகளை என்ன பாடுபடுத்துவாள்? புரிஞ்சுக்கோ!''

கணவர் ''என் பக்கம் இருந்தால் அவங்க என்னை ஒண்ணும் அசைக்க முடியாது'' அனுராதா பிடிவாதமாகப் பேசினாள்.

''சண்பகம் அம்மாளை நீ சரிவர தெரிஞ்சுக்கலை. சொத்து அத்தனையும் அவங்களுடையது. அந்தப் பலத்தை வைத்துக் கொண்டு மகனை ஆட்டிப் படைத்தால்...''

''நானும் என் கணவரும் சொத்துக்களை உதறிவிட்டு எங்கள் தொழிலைத் தனிப்பட்ட முறையில் நடத்தி முன்னுக்கு வர முயலுவோம். உண்மையா உழைத்தால் உயராமலா போய்விடுவோம்?''

''பைத்தியம்! போக பாக்கியங்களில் திளைத்து வாழ்ந்து பழக்கப்பட்டவங்களை அவற்றை உதறிட்டு என்னோடு வந்து கஞ்சியைக் கலந்து குடிங்கோன்னா சரிப் பட்டு வராது. அநேகருக்கு அத்தனை தியாக மனப் பான்மை வந்துடாது.''

''டாக்டர் நரேந்திரன் என்னை உயிராக மதிக்கிறார். நானும் அவரை அப்படித்தான் நேசிக்கிறேன். எங்களுக்குள் எதுவும் இடை புகுந்துவிட முடியாது டாக்டர்! அம்மாவுக்கு நீங்கள்தான் எடுத்துச் சொல்லி அமைதியா இருக்க ஆறுதல் சொல்லணும்.''



எங்கள் இடையே காற்றுக்கூட புகாது என்று பெருமை பேசினாளே. ஆனால், ஓரிரு ஆண்டுக்குள் அவர்கள் இடையே புகுந்து குழப்பிய விஷயங்கள் எத்தனை எத்தனை?''

அந்தஸ்து - பணம் - திறமை, கொள்கைள், மற்றொரு பெண்... என்று எத்தனை குழப்பங்கள்?

ஒரு நாள் நல்ல வெயிலின்போது அதே ரேவதியிடம் அடித்துப் புரட்டிக் கொண்டு ஓடிவந்தாள், அனு.

''ரேவதி அம்மா! நீங்கள்தான் எனக்கு ஆறுதல் சொல்லி வழிகாட்டணும். நான் அவரைவிட்டுப் பிரிஞ்சு வந்துட்டேன்'' பேச முடியாது திக்கித் திணறிவிட்டு ஓவென்று அழுதாள்.

''உட்கார். மெல்ல நிதானமா சொல்லு. என்ன நடந்தது?''

''ஒரே வார்த்தையில் சொல்ல முடியாது. எத்தனையோ நடந்து விட்டன. எங்களுக்குள் பலத்த சண்டை. அவருக்கு விவாகரத்துத் தேவையாம்'' விக்கி விக்கி அழுதாள்.

''குழந்தை! அவன் கதி?'' ரேவதி வியப்புடன் வினவினாள்.

குழந்தையைக்கூட அவங்கதான் வளர்க்கப் போறாங்களாம், ரேவதி அம்மா! நான் அனாதையா போயிட்டேனே! என் பக்கம் பேச, எனக்கு நியாயம் வாங்கித் தர யார் இருக்காங்க?'' மீண்டும் அவள் விம்மி அழுதாள்.

''ஏன் இல்லை? உன் பக்கம் துணையாக நீ வழிபடும் உன் குல தெய்வம் முருகன் இருக்காரே! அவரை மறந்துட்டுப் பேசாதே.''

''என் புக்ககத்திலே ஒரு நிமிடம்கூடத் தாங்க முடியாத நரக வேதனையை நான் அனுபவிச்சேனே, அப்போ அந்த முருகன் எங்கே போயிருந்தார்? இப்ப மட்டும் ஓடி வந்து துணை செய்யப் போகிறாரா?''

''உனக்கு அத்தனை நம்பிக்கை இல்லை. அதனால் தான் இப்படி பேசறே. பொறுமையா இரு. டாக்டர் நரேந்திரன் என்ன மேற்கொண்டு செய்யப் போறார்னு பார்க்கலாம். அதுவரை தொடர்ந்து நீ உன் கிளினிக்கில் வேலை பார்த்துக்கொண்டு இரு. இங்கே அருகே ஒரு பிளாட்டில் உனக்கு இடம் ஏற்பாடு பண்ணித் தருகிறேன். ஒரு பெண் கையில் தொழில் திறமையை வச்சுக்கொண்டு ஏன் பயப்படணும்? தனியா நீ வாழ்ந்து காட்டு. மனிதன் விரைவில் வழிக்கு வந்து விடுவார். கவலைப்படாதே!'' ஆறுதல்கள் பல சொன்னாள்.

தனியாக அவள் அந்த பிளாட்டில் வாழத்தொடங்கி சில மாதங்கள் ஆகிவிட்டன.

அவள் தனியே அங்கு வசிப்பது அவனுக்குத் தெரியும். மாமியாருக்கும் தெரியும். ஆனாலும் அசட்டையாக இருந்தனர். ஏழைப் பெண் என்றதால் இந்த விசித்திர மனப்போக்கா? அவளும் வசதியான இடத்தில் இருந்து வந்து வாழ்க்கைப்பட்டு இருந்தால் ஒரு சமயம் நரேந்திரன் இத்தனை மோசமாக நடந்து இருக்க மாட்டாரோ, என்னவோ.

என்ன இருந்தாலும் பணத்திற்குத் தனிப்பட்ட பலம் இருக்கிறதே!



# 5

இரவு முழுவதும் வழி நெடுகிலும் பெய்து கொண்டு வந்த மழை சென்னை பக்கம் தலைகாட்ட வில்லை. பளிச் சென்று எழுந்த சூரியன் ஒன்பது மணிக்கே சுள்ளென்று எரியத்தொடங்கி விட்டான்.

எழும்பூர் நிலையத்தை வண்டி அடைந்ததும், மூவரும் இறங்கினர். ரேவதியின் டிரைவர் கண்ணுசாமி வண்டியுடன் தயாராக நிலையத்தில் காத்துக் கொண்டு இருந்தான். சாரதாவை வழியில் அவள் வீட்டில் இறக்கி விட்டு ரேவதி தன் தோழியுடன் அந்தச் சிறு பிளாட்டுக்கு வந்தாள்.

சர்.சி.பி.ராமசாமி சாலையில் வண்டி ஓடி சந்து திரும்பும் பகுதியில் புதிதாக எழும்பியிருந்த கட்டடக் குவியலில் அனு குடியிருந்தாள். சாலையைப் பார்த்தபடி பெரிய சன்னல்கள் அமைந்த ஒற்றைப்படுக்கையறை கொண்ட சிறு குடியிருப்புப் பகுதி அது. இரண்டாவது மாடியில் இருந்தது. சதா சாலையில் ஓடும் வண்டிகள் எழுப்பும் ஓசை, எதிர் பக்கத்து குடியிருப்பில் வசிப்பவர் களின் குழந்தைகள் மாடிப்படிகளில் ஓடும்போது எழுப்பும் சத்தம் என்று கலகலப்பான பகுதி அது.

வாழ்க்கையில் அவள் இதுவரை தன்னந்தனியாக இப்படி ஒரு வீட்டில் தான் மட்டுமே வசித்தது இல்லை. அப்பாவுக்குப் பின்னர் அம்மாவின் அரவணைப்பில் வளர்ந்தவள். திருமணம் ஆனதும் அந்தப் பெரிய பங்களாவில் ஆள் படைகள் சூழ மாமியார் - கணவன் - வருவோர்போவோர் என்று ஆர்ப்பாட்டமான சூழ்நிலை யில் வாழ்ந்து பழக்கப்பட்டவள். கடந்த சில மாதமாக இப்படி அவள் தன்னந்தனியே ஒரு சிறு அறைக்குள் தன்

நம்பிக்கையே துணையாகக்கொண்டு வாழ நேர்ந்து விட்டதே. வாழ்வில் அவள் எதையெல்லாம் வெறுத்தாளோ அதெல்லாம் அவளுக்கு ஏனோ அனுபவங்களாக வந்து வாய்த்தன.

குழந்தைப் பருவத்தில் அவளுக்கு இருட்டைக் கண்டால் மிக்க பயம். இப்போது அவளது வருங்காலம் ஒரே இருட்டாகிவிட்டது.

சிந்தாதிரிப்பேட்டையில் நெருக்கமான பகுதியில் இருந்த சிறு கட்டடம். அதைச் சீர்திருத்தி பழுது பார்த்து, மேசை நாற்காலிகள் வாங்கிப் போட்டு, ஒரு சிறு மருத்துவமனையாக, தன் தாயின் நினைவை நிலை நிறுத்த 'மீனாட்சி கிளினிக்' என்று அமைத்துக் கொண்டாள்.

அதைத் தொடங்கி நடத்துவதைப் பற்றி அவளுக்கும் கணவனுக்கும் மாமியார் இடையேயும் எத்தனை விவாதங்கள்-தர்க்கங்கள் எதிர்ப்புகள்?

கேட்டவுடனேயே நரேந்திரன் மறுப்புத் தெரிவித்தான்.

''நமது மருத்துவமனை வேலையை முழுக்கக் கவனிச்சால் போதாதா? போயும் போயும் அந்தத் தெருவில் ஏன் ஒரு கிளினிக் ஆரம்பிக்கணும்?''

''நமது மருத்துவமனையில் வசதியானவங்கதான் வைத்தியம் செய்து கொள்ள முடியும். இந்தக் கிளினிக் ஏழை மக்களுக்கு உதவ வேண்டும் என்று திறக்க விரும்புகிறேன். வைத்தியரைப் பார்க்க ஒரு தடவை ஐம்பது ரூபாய் கொடுக்க எல்லோராலும் கட்டுப் படியாகுமா?''

''ஏழைகளுக்குத்தான் தர்ம ஆஸ்பத்திரிகள் இருக் கின்றனவே! உலகத்தில் உள்ள அத்தனை ஏழைகளுக்கும் பாடுபட்டுவிட முடியுமா?'' ஏளனமாகக் கேட்டான் அவன்.



''நான் வசித்த பகுதியைச் சுற்றியிருக்கும் ஏழை மக்களுக்காவது என்னால் ஆன உதவியைச் செய்ய விரும்புகிறேன். நமது மருத்துவமனைக்குப் போன நேரம் போக மீதி நேரத்திலேதான் இந்தப் பணி'' அவள் விவாதித்தாள்.

''அப்போ வீடு, வாசல் புருஷன் இதுகளை கவனிப்பது எப்போ?'' மாமியார் சுடச் சுடக் கேட்டாள்.

''கணவன், வீடு, குழந்தை யாரையும் நான் அசட்டை பண்ணலையே. ஒரு நிமிட நேரத்தைக்கூட வீணாக்காமல் நான் உழைச்சிட்டுத்தானே இருக்கேன். ஏன் அத்தை இப்படி கோபமா பேசுகிறீங்க?''

''துலுக்கானத்துக்கு தலைப்பிரசவம். வேதாம் பாளுக்கு மூணாவது குழந்தைன்னு நீ நேரம் காலம் இல்லாம ஓடிக்கிட்டே இரு. உன் குழந்தைக்கு, வேளைக்கு சாப்பாடு போட்டு கவனிச்சுட்டு இந்த வீட்டையும் கட்டிக் கொண்டு கால மூச்சூடும் நான் நாயா உழைக்க வேண்டியதுதான் கதியாயிடுச்சு. புருஷனையும், குழந்தையையும் கூட கவனிக்க முடியாத அத்தனை பெரும் வேலை உனக்கு வெளியிலே. இதுக்குத்தான் நான் நரேந்திரன்கிட்ட முட்டிக்கிட்டேன். நமக்கு வேலை செய்கிற மருமகள் வேண்டாம்னேன். கேட்கலை'' மாமியார் சீறினாள்.

''வைத்தியக் கல்வி, நர்சுப்படிப்பு, ஆசிரியர் பயிற்சி இதெல்லாம் அடைந்த பெண்கள் தங்களுக்குக் கிடைத்துள்ள அறிவை பயனுள்ளதாக்கிக் கொள்ள முயலணும். நல்லா படிச்சுட்டு, படிப்பை உதறிவிட்டு குடும்பத்துக்குள்ளே எல்லோர் போலும் அடங்கி தமக்காக மட்டும் வாழ்வது நல்லதா, சொல்லுங்கள்? இதனால் நாட்டுக்கும், சமூகத்துக்கும் எத்தனை நஷ்டம்?''

''சமூகத்திற்கு உன்னால் லாபமோ நஷ்டமோ தெரியாது. இந்தப் படிப்பு மூலமா நீ ஒரு பெரிய புளியங் கொம்பைப் பிடிச்சுட்டே! இல்லாட்டா என் வாசற் படியைக் கூட மிதிக்க லாயக்கில்லாத குடும்பத்துப் பெண்ணை மருமகளாக ஏத்துக்க எனக்கென்ன பைத்தியமா? வைத்தியப் படிப்பால் மத்தவங்களுக்கு உதவறியோ என்னவோ, உன் வரைக்கும் அந்தப் படிப்பு நல்லா உதவிடிச்சு. இத்தனை பெரிய பங்களாவில் மகாராணி யாட்டமா வந்து உட்கார்ந்துட்டே'' கடுகடுவென்று பேசினாள் மாமியார்.

சண்பகம் மனதில்தான் மருமகள் மேல் எத்தனை வெறுப்பு? ஆண்டு சில ஆகியும், அவளுடைய பேரனுக்குத் தாயாகிய அந்த வெறுப்பு அணு அளவும் குறைய வில்லையே, இன்னும் பெருகியல்லவா போய்க் கொண்டு இருந்தது?

கணவனிடம் இருந்து பிரிந்து வெளியேறியதும் அவள் தன் சிறு பெட்டியுடன் நேரே டாக்சியில் புறப் பட்டு ரேவதியிடந்தான் அடைக்கலம் தேடி ஓடிவந்தாள்.

ரேவதிக்கு கலாசேத்திர காலனியில் பெரிய பங்களா இருந்தது. மனைவியை இழந்த சகோதரன் மட்டுமே துணையாக வசித்தார். ரேவதிக்கு தாராளமான மனமும் உண்டு. ஆனாலும், அனுராதாவைத் தன்னுடன் கூட வசிக்க வைத்துக் கொள்ளவில்லை. தன்னந்தனியாக அவள் ஒரு குடியிருப்புப் பகுதியில் வசிப்பதுதான் நலம் என்று திட்டமிட்டு ஏற்பாடு செய்து கொடுத்தாள்.

கொஞ்ச நாள் கழித்து விவாகரத்து கோரி, நரேந்திரன் கொடுக்கப் போகும் வக்கீல் நோட்டீசில் ரேவதியின் சகோதரன் தன் மனைவியின் பிரிவுக்குக் காரணம் என்று குற்றம் சாட்டினாலும் சொல்வதற்கு இல்லை என்ற



அச்சம், ரேவதிக்கு. பாம்பு என்று தாண்ட முடியாது-பழுது என்று மிதிக்க முடியாது. அப்படிப்பட்ட விசித்திரமான மனிதன் நரேந்திரன் என்பது அவளுக்குத் தெரியும். அடிக்கடி வந்து அனுவைக் கவனித்துக் கொண்டாள். தனியாக இருப்பதால் தேவை என்று அவசரமாக ஒரு தொலைபேசியை அந்த வீட்டில் வைக்கவும் உதவினாள்.

நல்லவேளை சிந்தாதிரிப்பேட்டையில் அவள் தொடங்கிய அந்தச் சிறு கிளினிக் இப்போது நன்கு வளர்ச்சியடைந்து இருந்தது. நரேந்திரனிடம் கையேந்திக் கொண்டிருக்கத் தேவையில்லாது அனு தன் சொந்த சம்பாத்தியத்திலேயே தன்னைத் தானே காத்துக் கொள்ள முடிந்தது.

மண்ணெண்ணெய் அடுப்பைப் பற்ற வைத்து பாலைக் காய்ச்சினாள், அனு. அவள் இன்று வரப் போவதை முன்கூட்டியே சொல்லிவிட்டுப் போயிருந்ததி னால் எதிர்ப் பக்கத்து அம்மா அவளுக்குப் பால் வாங்கித் தயாராக வைத்திருந்தாள். திடீர் காப்பி பொடி பாட்டிலைத் திறந்து வேண்டியதை அள்ளி பாலில் போட்டு அவசரமாக அவர்கள் இருவருக்கும் காப்பி கலந்தாள்.

டப்பாவிலே மீதியிருந்த ரவையைக் கொட்டி வேகமாக உப்புமா கிளறினாள். சிநேகிதிகள் இருவரும் முன் அறையில் கிடந்த பிரம்பு நாற்காலியில் அமர்ந்து கொண்டு காலை ஆகாரத்தை விரைவாக முடித்துக் கொண்டனர்.

''இன்று முழுவதும் ஓய்வு எடுத்துக்கோ. நாளையில் இருந்து வேலைக்குப் போகத் தொடங்கு'' என்றாள் ரேவதி. ''உனக்கு ஏற்பட்டு இருக்கும் துன்பத்துக்கு மருந்து என்ன தெரியுமா? சலியாத - அலுக்காத உழைப்பு. உழைப்பில் கணவர் கோவிந்தன் இறந்தபோது நான் என்ன

செய்தேன் தெரியுமா? அடுத்த நாளே, என் மருத்துவ மனையைக் கவனிக்க புறப்பட்டு விட்டேன்."

கேள்விப்பட்டேன். அந்தச் சமயந்தான் நீங்கள் தேனாம்பேட்டையில் ஒரு கிளை மருத்துவமனை திறந்ததாகவும் சொன்னார்கள்."

"காலை, மாலை என்று ஓய்வு இன்றி நான் வேலை செய்து கொண்டே இருந்ததனால்தான் அந்த மாபெரும் இழப்பின் துன்பத்தில் இருந்துநிமிர முடிந்தது. நாளைக்குக் காலையில் இருந்து, உன் கிளினிக்கிற்கு காலை மாலை ரெண்டு வேளையும் போ. நோயாளி களைக் கவனி. அவர்களது கஷ்டத்தை அனுதாபத்துடன் கேள். அப்போ உன் கஷ்டம் தானாகவே மறைஞ்சு போயிடும், துணிவா இரு. அது வெகு முக்கியம்" சொல்லிவிட்டு, விடைபெற்றுக் கொண்டு ரேவதி போய்விட்டாள்.

தண்ணீரை சூடாக்கிக் குடித்துவிட்டு, வேறு உடுத்திக் கொண்டு வீட்டை ஒழுங்கு செய்வதில் காலைப்பொழுது கழிந்து போயிற்று. பிறகு சமையலைத் தொடங்கினாள்.

கணவனுடன் வாழ்ந்த காலத்தில் அவளுக்கு சமையல் வேலைபற்றியே கவலைப்படத் தேவையிருக்க வில்லை. சமைக்கவே அந்த வீட்டில் இரண்டு ஆட்கள் இருந்தனர். சுவையாக சமைக்க கணபதி, ஓடிஓடி பரிமாற தேனப்பன். மாலையில் எழுந்ததும், குளித்து முடித்து விட்டு நரேந்திரன் முன் அறையில் காலை நீட்டிக் கொண்டு கத்தை பத்திரிகை தாளுடன் படிக்க உட்கார்ந்து விடுவான். குழந்தை சிவகுமார் சோபாவில் இருவருக்கும் இடையே தன் இரு கரங்களாலும் அவர்களை அணைத்த படியே நடுவே உட்கார்ந்து இருப்பான்.

"அப்பாமேல ஆசையா? உனக்கு அம்மா மேல ஆசையா?"



"அப்பா மேலும் ஆசை! அம்மா மேலும் ஆசை!"

"யார் மேலே ரொம்ப ரொம்ப ஆசை?"

"ரெண்டு பேர் மேலேயும் ரொம்ப ரொம்ப ஆசை!"

குழந்தை தாயையும் விட்டுக் கொடுக்க மாட்டான். தகப்பனையும் விட்டுத் தள்ளமாட்டான்.

இரவில் அம்மா மடியில் தலையும் அப்பாமீது காலையும் நீட்டிக் கொண்டு அம்மா சொல்லும் கதைகளைக் கேட்டபடி உறங்க அடம் பண்ணுவான்.

"இப்போ? அவன் எப்படி இருக்கிறானோ? அம்மாவைத் தேடி அழுதால் என்ன சமாதானம் சொல்லப் போகிறாங்க?"

தட்டிலே போட்டுக் கொண்டு சாப்பிட உட்கார்ந்த உணவு அனுவின் தொண்டையில் இறங்க மறுத்தது.

"பாவம், அம்மா! இப்படித்தானே குழந்தையான அவளைப் பிரிஞ்சு தன் கடைசிக் காலத்தில் தனியவளாகி விட்டாங்க."

கல்யாணமானதும் புக்ககம் போனதும் அனுராதா முதலில் தினசரி ஒரு முறையாவது அம்மாவை வந்து பார்த்துப் போய்க்கொண்டு இருந்தாள். ஆரம்பத்தில் அவளுடன் நரேந்திரன் வருவது வழக்கம். பின்னர் வாசலிலேயே காரில் அவளுக்காகக் காத்திருக்கத் தலைப் பட்டான். அதற்குப் பின்னர் நீயே போய் பார்த்துட்டு வா" என்றான். கடைசியில், "நித்தமும் உங்கம்மாளைப் பார்க்கப் போக வேண்டியது அவசியமா? அவங்களை யார் தூக்கிட்டுப் போயிடுவாங்க!" என்ற கேள்வி கூட கேட்கத் தொடங்கி விட்டான். அதன்பின் அம்மாவைப் பார்க்க அவள் திருட்டுத்தனமாகக் கணவனிடமோ மாமியாரிடமோ சொல்லாது போகும் நிலையும் ஏற்பட்டு விட்டது.

அவள் கர்ப்பமாக இருந்த போது, அம்மாவின் நினைப்பு அடிக்கடி ஏற்பட்டு மனதை வருத்தியது. ஒரு சில நாள் பிறந்த வீட்டில் தாயுடன் தங்கியிருக்க விரும்பினாள்.

''படுக்க ஒரு நல்ல பாய் கூடக் கிடையாது அந்த வீட்டில். அங்கே போய் நீ ஏன் சங்கடப்படணும்? வேணுமின்னா உங்கம்மா உன்னை இங்கே வந்து பார்த்துட்டுப் போகட்டுமே!'' மாமியார் கடுமையாகச் சொல்லி விட்டாள்.

அம்மா நீங்களாவது வந்து பார்க்கக் கூடாதா?'' என்று ஒரு கார்டு எழுதிப் போட்டாள்'' மகள். ஆனால், அம்மா வரவில்லை.

இரண்டு வார காலம் தொடர்ந்து அம்மாவைப் பார்க்காதது மனதிற்கு மிகவும் சங்கடமாகத்தான் இருந்தது. மருத்துவமனையில் இருந்து காரைத் தானே ஓட்டிக் கொண்டு அந்தக் குறுகிய தெருவிற்குள் நுழைந்தாள். காரில் இருந்து இறங்கி கதவைத் தட்டினாள்.

சாதாரணமாக விரைவில் கதவைத் திறந்துவிடும் அம்மா ஏனோ வெகு நேரம் எடுத்துக் கொண்டாள்.

''வாம்மா! உட்கார். அவர் வரவில்லையின்னு தெரிகிறது. நீயா வண்டியை ஓட்டிக் கொண்டு வந்தே? இந்த நிலையிலே இனிமேல் நீ ஓட்டலாமா? உன் கணவரே உன்னைக் கண்டிச்சிருப்பாரே?''

அம்மாவின் முகம் சற்று ஊதிக் காணப்பட்டது. கால்களில் நீர் பிடித்துக்கொண்டு இருப்பதையும் கவனித்தாள்.

''அம்மா உங்களுக்கு உடம்புக்கு என்ன?'' கலவரத்துடன் வினவினாள், மகள்.

''ஒண்ணுமில்லை. கொஞ்சம் தலைவலி. வயசாயிடுச்சு தள்ளலை. ஒண்டிக்கட்டையாகிட்டேனே? அந்தக் கவலை வேறு!'' அவள் சிரிக்க முயன்றாள்.



காரில் இருந்து மருந்து பையை எடுத்து வந்து தாயை பரிசோதித்துப் பார்த்தாள்.

அம்மாவுக்கு இரத்த அழுத்தம் எக்கச்சக்கமாக உயர்ந்து இருந்தது.

''என்னம்மா, உடம்பை ரொம்ப கெடுத்துக் கிட்டிருக்கிறீங்களே? இது சமயம் நீங்கள் ஒரு பத்துநாள் ஆஸ்பத்திரியிலே தங்கியிருப்பதுதான் நல்லது.''

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். ஏதாவது மருந்து எழுதிக்கொடு. வாங்கிச் சாப்பிடுகிறேன்.''

''எங்கம்மாவை வீட்டோட இங்கே வச்சுக்கப் பிரியப்படுகிறேன். அவங்களுக்கு உடம்புக்கு முடியலை. ஒரு நாலுநாள் நம்மோட அவங்க தங்கியிருந்தால் இரத்த அழுத்தம் குறைந்துவிடும்'' என்று கணவனிடம் சொல்லி அவள் தன் வீட்டிலேயே தாயை வைத்துக் கொள்ளலாமா? வயிற்றிலே பத்துமாதம் இடம் கொடுத்த தாய் ஆயிற்றே?

தன் வீட்டில் ஒரு நாலு நாள் இடம் கொடுத்துத் தாயை உபசரிக்க அவளுக்கு உரிமையில்லை. இதே நிலையில் ஓர் ஆண் இருந்தால் என் ''அம்மாவுக்கு உடம்பு சுகம் இல்லை. நாம்தான் பார்த்துக்கணும். நம்பளோடத்தான் இருக்கப் போறாங்க.'' ஒரே வார்த்தையில் முடிவு கட்டிவிட முடியும்.

படித்தவள்-தொழில் கல்வி திறமையுடையவள்-தானே சம்பாதிக்கவும் செய்கிறாள். இருந்தும் ஒருத்தனுக்குக் கழுத்தை நீட்டிவிட்டதும் உரிமைகள் எப்படித்தான் பறிபோய் விடுகின்றன.

எழுந்து உட்கார்ந்த அம்மா சலிப்பான குரலில் பேசினாள். ''உன்னை இந்தப் பக்கமே காணலையே, முழுகாம வேற இருக்கையே அப்படின்னு மனசு

பொறுக்காமல் நேத்திக்கு உனக்குப் பிடிச்ச முறுக்கும் அதிரசமும் செய்து கொண்டு உன்னைப் பார்க்க உங்கள் பங்களாவுக்கு வந்திருந்தேன். கையோட சம்பந்தி அம்மாளுக்கு 'ஒரு சீப்பு மலைப்பழமும் கொண்டு வந்திருந்தேன். நீ இன்னமும் ஆஸ்பத்திரியில் இருந்து வரலைன்னு சம்பந்தியம்மா சொன்னாங்க.''

''என்னிடம் சொல்லலையே?''

''வளைகாப்பு ஒண்ணும் நடத்தலையேன்னு மனசு ரொம்ப சங்கடப்பட்டது. ஏதோ என் கையில் கிடச்சதைக் கொண்டு உனக்கு ஒரு பட்டுச் சேலையும், அதுக்கேத்த ரவிக்கைத் துண்டும் வாங்கி வந்தேன். ''உங்கள் பெண் உங்கள் கிட்ட பணம் கொடுத்து இதெல்லாம் வாங்கிக் கொண்டு வரச் சொன்னாளா?'' என்று எடுத்த எடுப்பிலேயே சம்பந்தியம்மா கேட்டது மண்டையில் அடிச்சாபோல வேதனையா இருந்தது. ''என் பணத்திலே வாங்கிக் கொண்டு வந்தேன். ஏன் இப்படி கேட்கிறீங்க?''ன்னு நான் கேட்டதும் அந்தம்மாவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது.''

''அந்த அம்மாவுக்கு வாய் அதிகம் என்பது தெரிந்ததுதானே?''

''உங்கள் பொண்ணு உங்கள் செலவுக்கு மாசாமாசம் திருட்டுத்தனமா பணம் கொடுக்கிறாள்ங்கிறது எனக்குத் தெரியாதா? அவள் கொடுக்காட்டி உங்களுக்குக் காசு பணம் ஏது? எப்படி அந்த வீட்டிலே காலந் தள்ரீங்கன்னு சம்பந்தியம்மா படபடவென்று பேசினாலும், நான் அதற்கு மேல் இருக்க விரும்பாமல், இன்னொரு தடவை வரேன்னு சொல்லிட்டுக் கிளம்பி விட்டேன்.''

''நீங்கள் வந்தபோது நான் இல்லாமல் போய் விட்டேனே?''



''அந்த சேலை ரவிக்கையை எடுத்துக்கிட்டுப் போங்கோ. எங்கள் வீட்டிலே வளைகாப்புக்கு நாங்களே உயர்ந்த பட்டுச் சேலை வாங்கி வச்சிருக்கோம். இதைப் பார்த்தால் என் மகன் ரொம்ப கோவிச்சுக்குவான்னு உத்திரவு போட்டாங்க. அதனாலே கையோட அதை எடுத்துட்டு வந்துட்டேன். ஆனால், மனசு ரொம்ப கஷ்டப்பட்டது. தகாத இடத்து சம்பந்தத்தாலேதானே இப்படி ஏச்சு கேட்க நேர்ந்தது? வெகுநேரம் அழுது விட்டேன். ராத்திரியெல்லாம் தலைவலி. அதனாலேயே ஒரு சமயம் ரத்த அழுத்தம் அதிகமாகி விட்டிருக்கும்.''

கோபமும் ஆத்திரமும், துக்கமும் ஒருங்கே அனுவை ஆட்டிப் படைத்தன.

அவர்கள் வீட்டு ஏழ்மையைச் சுட்டிக்காட்டி அவமானப்படுத்துவதில் மாமியார் சண்பகத்துக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி?

ஊகும்! இதை இப்படியே விட்டு விடக் கூடாது-

''அம்மா! அந்த சேலையைக் கொண்டு வாங்க, இப்ப நான் உடுத்திக்கிட்டு வீட்டுக்குப்போறேன். மாமியார் என் கழுத்தையா வெட்டிடுவாங்க? இதென்ன ஒரு பெண் செய்யக் கூடாத மாபெரும் குற்றமா? சொந்தத் தாயைப் பார்ப்பதில் என்ன தவறு? அவங்க ஆசையோடு கொடுப்பதை ஏத்துக்கிறதிலே என்ன தவறு? இவங்க நம்மை என்ன நினைச்சிக்கிட்டு இருக்காங்க?

''ரொம்ப இரைஞ்சு கத்தாதே, அம்மா. பச்சை உடம்புக்கு ஆகாது'' தாயார் பரிந்தாள்.

''அம்மா! உங்கள் கையால் சமைச்ச சுண்டைக்காய் வத்தக் குழம்பு சாப்பிட எனக்கு ஆசையாயிருக்கு. அதுக்காகத்தான் ஓடி வந்தேன்'' மகள் தயக்கத்துடன் சிறு

பிள்ளைபோல் திணறியதைக் கண்டு மீனா மகளை மார்போடு அணைத்துக் கொண்டாள்.

''இதென்ன பிரமாதம்? இப்படி சித்த உட்காரு, ஒரு பத்து நிமிடத்திலே செஞ்சு என் கையால் உனக்குப் போடறேன். இந்தச் சமயம் ஏற்படும் ஆசைகளை உடனுக்குடன் தீர்த்துக்கணுமே.''

சுடச்சுட சோற்றை இலையில் வைத்து நெய் ஊற்றி வத்தல் குழம்பை ஊற்றி, தொட்டுக் கொள்ள உருளைக் கிழங்குப் பொரியலுடன் பிசைந்து சாப்பிடும் போது அமிர்தமாக அத்தனை சுவையாக இருந்தது!

அவள் வீட்டுக்குத் திரும்புமுன், நரேந்திரன் மருத்துவ மனையில் இருந்து திரும்பி விட்டான்.

பகல் உணவுக்கு மனைவி எங்கே போய் விட்டாள் என்ற தவிப்பு அவனுக்கு.

''வெகு நேரம் உனக்காகக் காத்திருந்தேன். ஆமாம், மருத்துவமனையில் இருந்து நீ எனக்கு முன்னாடியே கிளம்பிட்டியே?'' அவன் கண்கள் அவள் அணிந்து இருந்த புதிய சேலைமீது படர்ந்தன.

''அம்மா எனக்காக இந்தப் புதுச்சேலையை வாங்கி வச்சிருந்தாங்க. அவங்களைப் பார்க்கப்போன போது கொடுத்தாங்க. உடுத்திக் கொண்டு விட்டேன். அப்படியே அவங்க கையால் சமைத்ததை-'' பேசிமுடிப்பதற்குள் அவளுக்கு வயிற்றைப் புரட்டியது. ஓடிச் சென்று குபுகுபு வென்று வாந்தியெடுத்து விட்டாள்.

''அதுக்குத்தான் நான் சொன்னேன். உன் பெண்ஜாதி என் பேச்சுக்கு மதிப்பு கொடுத்தால்தானே? சதா காரை எடுத்துக் கொண்டு இப்படி ஊரைச் சுத்தணுமா?'' சண்பகம் பொரிந்தாள்.



அதன்பின் கர்ப்பிணிகளுக்கு வரும் விஷ வாந்தி யுடன் அவள் தங்களது மருத்துவமனையில் சிலநாள் தங்க நேர்ந்தது. இதுபற்றி அவள் தாயாருக்கு யாரும் சொல்லி அனுப்பவில்லை. தாயாரின் உடல் நிலை எப்படி இருக்கிறது என்ற தகவலும் மகளுக்குத் தெரிய வழியில்லாது இருந்தது.

மருத்துவமனையில் இருந்து திரும்பியபின் அவள் வீட்டிலேயே தங்கியிருக்க வேண்டும் என்று கணவன் கட்டளையிட்டான். அதை மீற முடியாது. தாயைப் பற்றி சதா நினைத்துக்கொண்டு வீட்டிலே தங்கியிருந்தாள்.

அவள் தாயாருக்கு மாரடைப்பு வந்து அரசாங்க மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறாள் என்ற செய்தியை யாரும் அவளிடம் சொல்லவில்லை. அதிர்ச்சியினால் குழந்தைக்குக் கெடுதல் ஏதும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதால் சொல்லவில்லை என்ற சாக்கு.

ஒன்பதாவது மாத இறுதியிலேயே சிவகுமார் அவளுக்குப் பிறந்து விட்டான்.

''எங்கம்மாவுக்கு மறக்காமல் சொல்லி அனுப்புங்கோ. ரொம்ப சந்தோஷப்படுவாங்க'' மாமியாரிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். ஆனால் குழந்தையுடன் வீட்டிற்கு அவள் வந்து சேர்ந்த பின்னர்தான் சண்பகம் தன் சம்பந்திக்கு சமையல் ஆள்மூலம் செய்தியைத் தெரிவிக்கச் செய்திருந்தாள்.

ஆஸ்பத்திரியிலே நோயாளியாகப்படுத்திருந்த மீனாவுக்கு ஆனந்தம் பிடிபடவில்லை. பேரனைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை; பெற்ற மகளைத் தொட்டுத்தடவி திருஷ்டி கழித்து வாழ்த்த வேண்டும் என்ற துடிப்பு. ஆனால், மறுபடியும் மார்வலி வந்து விடவே, அவள் மருத்துவ மனையிலேயே இன்னும் தங்க நேரிட்டது.

''உங்கம்மா ஆஸ்பத்திரியிலே உடம்புக்கு முடியாமல் படுத்திருக்காங்க. மாரடைப்பாம்'' கணேசன் வந்து சொன்னபோது துடித்துப் போனாள், அனுராதா.

உடனடியாக அம்மாவைப் பார்க்க வேண்டும் என்று கிளம்பினாள். மகள் தாயைத் தேடிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு வருமுன், தாய் தனது இறுதிப் பயணத்தைத் தேடிப் போய் விட்டாள். கடைசியாக மகளின் முகத்தைப் பார்க்கக் கூடக் கொடுத்து வைக்காது அந்த ஏழைத்தாய் மறைந்து விட்டாள்.

அனு மட்டும் ஓர் ஆண் பிள்ளையாகப் பிறந் திருந்தால், அனாதை போல் அம்மாவை ஆஸ்பத்திரியில் சாகவிட்டு வைத்திருப்பாளா?

படித்திருந்தும், சொந்த சம்பாத்தியம் இருந்தும் பெண் என்ற நிலையால் பெற்றவளுக்கு ஏதும் செய்ய முடியாத பாவியாக இருந்து விட்டாளே. அந்தக் குற்ற உணர்வில் அவள் அம்மாவை நினைத்துக் கொண்ட பொழுதெல்லாம் விசும்பி விசும்பி அழுதாள்.

''அம்மா! கடைசிக் காலத்திலே உங்களைக் கை விட்டு அனாதையாகத் தவிக்க விட்டதின் பலனை இப்போ அனுபவிக்கிறேன். நானும் இப்போ ஓர் அனாதை அம்மா, அம்மா!'' உரத்து பைத்தியம் பிடித்தவள் போல பேசிக்கொண்டே விசும்பியபடி தட்டில் போட்டிருந்த உணவை சாப்பிட முடியாது, கையைக் கழுவினாள்.

முகத்தைத் துடைத்துக் கொண்டு சன்னல் அருகே வந்து நின்றாள்.

வெளியே சாலையில் அவள் கணவனின் நீல அம்பாசிடர் மெதுவாகப் போவது தெரிந்தது அதற்குள் அவள் தோளைப் பிடித்துக் கொண்டு நின்ற சின்னஞ் சிறு



தலையை ஊன்றிப் பார்த்தபோது அவள் பெற்ற வயிறு முறுக்கிப் புரண்டது. கார் வேகமாகப் பார்வையில் இருந்து மறைந்ததும் தொப் என்று இருக்கையில் வந்து விழுந்தாள்!

''முடியாது! எத்தனை கோர்ட்டு ஏறினாலும் சரி குழந்தை யின் பராமரிப்பு தாயான தனக்குத்தான் வேண்டும் என்று வாதாட வேண்டும். அவள் சேமித்து வைத்திருக்கும் அத்தனை பணமும் போனாலும் சரி, விடக் கூடாது. குமார்... என் குமார்... செல்லமே-நான் இல்லாமல் நீ எப்படி கண்ணா தூங்கறே குமார்... என் குமார்'' சித்தம் கலங்கியவள் போலக் கேவிக் கேவி அழுதாள் அவள்.

## 6

நேரம் மெல்ல நத்தையாக நகர்ந்தது. தனியே பேச்சுத் துணைக்குக் கூட யாரும் அருகில் இல்லாத போது நேரம் கனக்கத்தானே செய்யும்?

வேகமாக இருள் பரவிக் கொண்டதும் சாலை விளக்குகள் பளீர் என்று எரியத் தொடங்கின. முன்னறையில் கிடந்த பிரம்பு நாற்காலியில் சாய்ந்தபடி அந்தப் பெரிய சன்னல் வழியே வெளி உலகத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தாள், அனு.

''சர்... சர்...'' என்று ஒன்றன்பின் ஒன்றாக ஓடிய வாகனங்கள்-

நைலக்ஸ் சேலைத் தலைப்பை வீசிக் கொண்டு ஜோடியாக சிரித்தபடி - கணவனோ - காதலனோ ஒருவனுடன் நடக்கும் பெண்கள் -

எதிர் சாலையில் தெரிந்த கடையில் மிட்டாய் வாங்க வந்த சிறுவனின் துடிப்பு-

நடைபாதை மீது பிளாஸ்டிக் சாமான்களை பேரம் செய்து வாங்க நிற்கும் பெண்களின் கூட்டம்-

வேடிக்கை பார்த்த வண்ணம் இருந்தாள். அவர்களுக்குப் பேச்சுத் துணைக்கேனும் யாரோ அருகில் இருந்தார்கள். அவளுக்கு நான்கு சுவர்தான் துணை. இப்படி இவள் திடீரென்று அனாதையாகிவிட்டாளே, முருகா!

ஒரு சமயம் நரேந்திரனை மணந்துகொள்ளாது அவள் அம்மா சொற்படி வேறு யாரையாவது மணந்து இருந்தால் -

சே!சே! இப்படி ஒரு சிந்தனை ஏற்படவே கூடாது.

அவளுக்கு இன்னமும் நரேந்திரன் மேல் காதல் இருக்கத்தானே இருந்தது. அவள் அவனை வெறுக்கவில்லையே. இன்னமும் தீவிரமாக அல்லவா நேசிக்கிறாள்.

யாரோ வேறு ஒரு பெண்ணுடன் அவன் காரில் சுற்றுகிறான் என்று கேள்விப்பட்ட செய்தியைக்கூட அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லையே.

தாங்க முடியாத கோபத்தினால்தானே அவள் வீட்டைவிட்டு வெளியேறினாள்?

ரேவதி சொன்னதுபோல் அவள் அந்தக் காரியத்தை செய்திருக்கக் கூடாது.

தடுக்க முடியாத ஓர் உணர்வின் உந்தலில், கோபத்துடன் தன் சிறு பெட்டியைத் தூக்கிக்கொண்டு வெளியே வந்ததின் விபரீதம். நரேந்திரன் வந்து சமாதானம் செய்து, அழைத்துப் போவான் என்று எதிர்பார்த்ததற்குப் பதில், அவனது கடிதம் அல்லவா அவளது சிந்தாதிரிப் பேட்டை மருத்துவ அறை முகவரிக்கு வந்து நின்றது.

''நமக்குள் பல வேற்றுமைகள். இத்தனை ஆண்டு ஆகியும் நீ உன் கொள்கைகளை மாற்றி நமக்குள் ஒற்றுமையைத் தேட மறுத்துவிட்டாய், மனத்துக்குப் பிடிக்காத பல காரியங்களைச் செய்கிறாய். என் தாயை மதிப்பது இல்லை. வீட்டைப் புறக்கணிக்கிறாய். பிள்ளையைக் கவனிப்பது இல்லை. வீட்டை விட்டு துணிவுடன் வெளியேறி தனியே வசிக்கவும் முற்பட்டு விட்டாய். இந்த நிலையில் கணவன் - மனைவி என்ற உறவு இனி நமக்குத் தேவைதானா? அதனால் நன்றாக சிந்தித்து விவாகரத்து செய்துவிட முடிவு செய்து விட்டேன், நரேந்திரன்.''



கடிதத்தை ரேவதியிடம் எடுத்துக் கொண்டு ஓடினாள்.

''பொறுமையாக இரு. மேலே என்ன நடக்கிறது என்று பார்க்கலாம்'' கையமர்த்திவிட்டாள் ரேவதி.

அந்தக் கடிதத்திற்கு அவள் பதிலே போடவில்லை. பிறகு அவனிடம் இருந்தும் கடிதம் வரவில்லை. நீண்ட பயங்கரமான அமைதி. நீ யாரோ, நான் யாரோ என்கிற பாவனையில் அவன் அவளைப்பற்றி விசாரிக்கவில்லை.

சில நாள் தொடர்ந்து அவள் ஆனந்தா நர்சிங்ஹோமில்தான் வேலை பார்த்து வந்தாள். மாத முடிவில் சம்பளம் ஓர் உறையில் வைக்கப்பட்டு அவளது அறை மேசை மீது வேலையாள் கொண்டு வைத்துப் போகும் நிலை. மருத்துவமனையில் வேலை பார்க்கும் வைத்தியர்கள் என்ற நிலையில் கூட அவளிடம் அவன் பேச முன் வரவில்லை. கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களை தன் உதவி வைத்தியர் மூலம் தெரிந்து கொண்டான். இந்த நிலையில் அவள் தொடர்ந்து வேலைபார்க்க விரும்பவில்லை. வெளியேறி விட்டாள்.

யாரோ தூரத்து உறவுப் பெண்ணைத் தன் மகனுக்குக் கட்டி வைக்க சண்பகம் முயலுவதாக அனு கேள்விப் பட்டாள். இடையே நரேந்திரன் வேறு யாரோ ஒரு

பெண்ணுடன் நெருக்கமாகப் பழகி வருவதாகவும் பரவலாகப் பேசப்பட்டது.

இதையெல்லாம் கேட்க மிகவும் துயரமாகத்தான் இருந்தது. தானே மறுபடியும் வீட்டைத் தேடிச்சென்று மாமியார் காலில் விழ அவளுக்கு மனம் இல்லை. அப்படி விழுந்தாலும் அந்த மாமியார் மன்னித்துவிடும் இனம் அல்ல. ''வெளியே போயேன்'' என்று துரத்தியவள் அவள்தானே?

எல்லாம் ஒரு சிறு வாக்குவாதத்திலே தொடங்கியது.

அன்று இரவு அவள் தன்னுடைய சிந்தாதிரிப் பேட்டை மருத்துவ அறையில் இருந்து திரும்பி வர சற்று நேரமாகி விட்டது. இரவு பத்து மணிக்கு மேல் வந்து நின்ற மருமகளை எரித்து விடுகிறவள் போல் சண்பகம் பார்த்தாள்.

''நரேந்திரன் வந்து சாப்பிட்டுட்டு, ஓர் ஆபரேசனுக்கு அவசரமாகக் கிளம்பி போயிருக்கான். நீ இருந்தால் உதவிக்குக் கூப்பிட்டுப் போகலாம்னு பார்த்தான். நீதான் ஏழைகளுக்குத் தொண்டு பண்ணிக் கொண்டு இருக்கியே. அதனாலே அவன் வேறே ஒரு டாக்டரை உதவிக்குக் கூப்பிட நேர்ந்திச்சு. வீட்டுக்கு உதவியா எனக்கு இல்லாட்டியும், அவனுக்காவது உதவியா நீ இருக்கக் கூடாதா?''

''அத்தை! என் கிளினிக்கில் தொலைபேசி இருக்கே. அவர் கூப்பிடலாமே? தொலைபேசி கூடவா ஏழையாயிருச்சு!''

''என்ன சொன்னே?'' சீறினாள் மாமியார்.

''ஏழை என்றாலே ஏன்தான் உங்களுக்கு இப்படி ஒரு வெறுப்போ, தெரியலை. ஒரு சமயம் என் மாமனார் ஏழைக்குடும்பத்தில் இருந்து வந்தார் என்பதால் உங்களுக்கு ஒரு மனக் குழப்பமோ என்னவோ.''



''எனக்காடி மனக் குழப்பம்? என்னையா பயித்தியக்காரி என்கிறாய்?'' கோபத்துடன் கர்ச்சித்துக் கொண்டு சண்பகம் முன்னால் வந்தாள்.

''எனக்கு எல்லாம் தெரியும். அடிமட்ட நிலையில் இருந்து வந்தவர் என் மாமனார். அந்தக் கசப்பிலே உங்களுக்கு அவரைக் கண்டால் ரொம்ப துச்சம். பணம் இருக்குன்னு நீங்கள் திமிரா நடந்து கொண்டது அவருக்குப் பிடிக்கலை. வீட்டை விட்டே போயிட்டார்.''

''பரவாயில்லையே? வீட்டை விட்டு புருஷனைத் துரத்திட்டேன்னு கூட சொல்லுவே. உனக்குப் படிச்ச திமிர்.''

''படிப்பு கொடுத்த துணிவு. அதைத் திமிர் என்று தவறாகச் சொல்லாதீங்க. உள்ளத்தை உள்ளபடி பேச ஏற்படும் துணிவு. அவ்வளவுதான்'' சொல்லிவிட்டு மாடியறைப் பக்கம் திரும்பினாள்.

''அங்கே எங்கே போறே? எனக்கு முழுக்க பதில் சொல்லிவிட்டு அப்பால் நகரு. எவள் சொன்னாள், என் புருஷனை நான் வீட்டை விட்டுத் துரத்திட்டேன்னு. அதை முதல்ல சொல்லிவிட்டுப் போ.''

''யாரோ சொன்னாங்க. அதைப் பத்தி ஏன் விடுங்க.''

''விடவா சொல்றே? இரு... நான் யார்னு நீ புரிஞ்சுக்குவே?''

மாமியார் சண்பகம் பல்லைக் கடித்து பயமுறுத்திய போது அசட்டையாகத் தோள்களை குலுக்கிவிட்டு. துணிவுடன் தன் அறைக்குள் வந்தாள் அனு. அன்று இரவு அவளுக்கு சாப்பிடக்கூட மனம் இருக்கவில்லை. குளித்து முடித்துவிட்டு, இரவு உடை அணிந்து கொண்டு, வேலையாள் கொண்டு வந்து வைத்த பாலை மட்டும் சாப்பிட்டு விட்டு, படுக்கையில் சாய்ந்து கொண்டாள்.

திடீரென்று வானம் மின்னிக்கொண்டு மழை பொழியத் தொடங்கியது. பலத்த ஓசையுடன் இடி வேறு. அவளுக்கு இடியோசையைக் கேட்டாலே பிடிக்காது. குழந்தைப் பருவத்தில் ஏற்பட்ட பழக்கம். பலத்த இடிகேட்ட போதெல்லாம் ''அர்ச்சுனா! அர்ச்சுனா'' என்று கூவிக் கொண்டு காதைப் பொத்திக் கண்களை மூடிக் கொண்டு படுக்கையில் குப்புறப் படுத்துவிடுவாள்.

''ஆமாம்! வானத்துக்குக் கீழே குடியிருக்கிறவங்க இடிக்குப் பயந்தால்? பெரிய மாயாஜாலம் பண்றா இவள்!'' மாமியார் கூட பலமுறை அவளைக் கடிந்து கொண்டது உண்டு. இடித்துச் சொன்னதும் உண்டு.

''அர்சுனனை ஏன் கூப்பிடுகிறே! அழகான பெண்கள் கூப்பிட்டதும் அடித்துப் புரட்டிக் கொண்டு ஓடி வந்து விடுவான்.'' மனைவியின் அருகே வந்து படுக்கையில் உட்கார்ந்து கொண்டு அவள் கன்னங்களை வருடியபடி கேலி செய்வான் நரேந்திரன், திருமணம் ஆன புதிதில். இன்னும் காதல் களிப்பில் இருவரும் சொர்க்கத்திலே மிதந்து கொண்டு இருந்த காலம், அப்போது.

''அர்ச்சுனனை கூப்பிடாதே. இனி என்னைக் கூப்பிடு'' கொஞ்சிக் கொண்டே அவளைத் தன் அருகே இழுத்துக் கொண்டான் நரேந்திரன்.

''சின்னப் பிள்ளையில் இருந்தே இடியென்றால் எனக்குப் பயம்.''

''ஏன் பயப்படணும்? இடி வெறும் சத்தம். மின்னல் தான் ஆபத்தானது. மின்னல் பளிச்சிட்டு முடிஞ்ச பிறகுதானே இடி ஓசை? நிஜத்தைக் கண்டு அஞ்சாமல் நிழலைக் கண்டு பயப்படுறே.''

உண்மைதான்-அந்த வீட்டில் பயப்பட வேண்டிய நிஜம் அவள் மாமியார்! தன்னைக் கண்டு எல்லோரும் நடு நடுங்க வேண்டும் என்ற குரூரமான ஆசை அவளுக்கு.



தன்னை மதிக்காது எதிர்த்துப் பேசி விட்டாள் மருமகள் என்று வன்மம். மருத்துமனையில் இருந்து திரும்பிய மகனிடம் என்ன சொன்னாளோ, வேகமாக அறைக்குள் வந்தான், நரேந்திரன்.

ஆஸ்பத்திரி மருந்து வாசனை குப்பென்று எழவே அவள் படுக்கையில் இருந்து எழுந்து உட்கார்ந்தாள். வெளியே வானம் பளிச் என்று மின்னி காது செவிடாகும் படி பலத்த ஓசையுடன் இடித்தது.

''அர்ச்சுனா!'' கத்திக்கொண்டு காதைப்பொத்திக் கொண்டு அவள் படுக்கைமீது சாயப் போனாள்.

''நிறுத்து இந்த நாடகத்தை! உங்கிட்ட கொஞ்சம் பேசணும்'' ஓங்கிய குரலில் அவன் கோபமாகக் கத்தவே அவள் திடுக்கிட்டுப் போனாள்.

இந்த அதிர்ச்சியில் இடி மறுபடியும் தொடர்ந்து இடித்ததுகூட அவள் காதில் விழவில்லை.

அம்மாவோட என்ன தர்க்கம்? வீட்டுக்கு வந்தால் எனக்கு நிம்மதி வேண்டாமா?'' எடுத்த எடுப்பிலேயே எரிச்சலுடன் கேட்டுக் கொண்டு அருகே வந்து படுக்கை விளிம்பில் உட்கார்ந்து கொண்டான்.

''தர்க்கம் செய்தது நான் இல்லை. அவங்கதான் ஆரம்பிச்சாங்க'' மெல்ல முணுமுணுத்தாள், அனு.

''நான் வீட்டுக்கு வந்தபோது நீ இல்லையே? எங்கே போயிருந்தே?''

''கிளினிக்கிலே இருந்தேன்.''

''இல்லை. தொலைபேசியிலே கூப்பிட்டுப் பார்த்தேன். வெகுநேரம் மணி அடிச்சிக் கொண்டே இருந்தது.''

''வீட்டுக்குக் கிளம்பிக்கிட்டு இருந்தபோது இன்றைக்குப் கிருத்திகைன்னு ஞாபகம் வந்தது. அடுத்த

தெருவில் இருந்த முருகன் கோவிலுக்குப் போனேன். அப்போ நீங்க போன் செய்திருப்பீங்க.''

''எனக்கு இதெல்லாம் பிடிக்காதுன்னு தெரிஞ்சும்...'' பற்களை அழுத்தமாகக் கடித்தான் அவன்.

''எனக்குப் பிடிச்ச விஷயங்களை உங்கள் வீண்பிடிவாதத்துக்காக உதறச் சொல்றீங்க. எனக்கு ரொம்ப அதிசயமா இருக்கு. உங்களுக்குத் தெய்வ நம்பிக்கை இல்லைன்னு சொல்றீங்க. எல்லாம் இயற்கையின் நியதீங்கறீங்க. இன்னொரு பக்கம் உங்களுக்குப் பணம் - அந்தஸ்து இதுகள் மேலே தீவிர நம்பிக்கையிருக்கு. ஏழை - பணக்காரங்கிறது இயற்கையின் நியதியில்லைன்னு ஏன் நம்பமாட்டேங்கறீங்க? உங்கம்மாவின் குணம் அப்படியே உங்களுக்கு வந்து விட்டது.''

''என்ன சொன்னே?''

''இப்படித்தான் உங்கம்மாவும் என்னிடம் கேட்டாங்க. பளிச்சினு மனசிலே பட்டதைச் சொன்னேன்.

''உனக்கு ரொம்ப வாய்.''

''தன்னைத் தானே காத்துகிறதுக்கு வாய் தேவையாக இருக்கும் போது அது அகலமா திறந்திருக்கிறது, அவ்வளவுதான்.''

''நீ ரொம்ப அதிகம் பேசியிருக்கிறாய். அம்மா மனசு நொந்து போயிருக்காங்க. அம்மாவை விரோதிச்சுக் கிறது நல்லதில்லை. சொல்லிட்டேன். போய் அம்மாவிடம் மன்னிப்புக் கேள்.''

''உங்கம்மாவுக்கு என் மேல் என்னிக்குமே அன்பு கிடையாது. நான் அவங்களுக்கு வேண்டாத மறுமகள். ஒண்ணு சொல்கிறேன், கேட்பீர்களா?''

அவள் முகத்தை உற்றுப் பார்த்தான். நரேந்திரன்.



''இந்தப் பங்களா, கார், வேலையாட்கள் என்ற சுகம் நமக்குத் தேவையில்லை. இரண்டு பேர் கையிலும் தொழில் இருக்கு. பேசாமல் எங்கேயாவது வெளியூருக்குப் போய் நாமே சொந்தமாகத் தொழில் தொடங்கி வாழ முயன்றால்-''

''வயசு காலத்திலே என் தாயைத் தவிக்கவிட்டு வரச் சொல்றியா பேஷ்?''

''உண்மையா நீங்கள் தாயைப்பத்தி அத்தனை அக்கறை உடையவராக இருந்தால் அவங்க பேச்சுக்கு மீறி என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்க மாட்டீங்க-''

இத்தனை பெரிய பங்களா, கார், மருத்துவமனை, எனக்கு இருக்கும் பெயர் - புகழ் எல்லாத்தையும் உதறி விட்டு வரச் சொல்றியா? அது நடக்காது. நான் சொல்றபடி நீ நடக்கத் தயாரா, இல்லையா?'' காரமாகப் பேசியபடி அவளை மீண்டும் உறுத்துப் பார்த்தான். கோபத்திலே அவன் முகமும் கண்களும் சிவந்து காணப்பட்டன.

''என்னன்னு சொல்லுங்கோ கேட்கிறேன்.''

''என் அம்மா சொற்படிதான் நீ நடக்கணும். இந்த சாமி, பூதம் என்கிற நம்பிக்கையை விட்டுத் தொலை. எங்கம்மாவே என் பேச்சுக்குக் கட்டுப்பட்டு இந்த வீட்டிலே பூஜை அறை-அது இதுன்னு எதுவுமே வச்சுக் கொண்டது இல்லை.''

''உங்கம்மாக்கு பணத்தில்தான் நம்பிக்கை அதிகம். அதுவே தன்னை காலமுச்சூடும் காப்பாத்திடும்னு நினைச்சிட்டு இருக்காங்க. அவங்க விருப்பம் அது. ஆனால், நான் தெய்வ நம்பிக்கை என்கிற சூழ்நிலையில் வளர்க்கப்பட்டவள். விஞ்ஞான அறிவுக்கு மீறி ஏதோ ஒரு சக்தி இருக்குன்னு நம்பிக்கை உடையவள். இத்தனை

பெரிய பங்களாவில் என் குலதெய்வம் முருகனுக்கு ஒரு துளி இடம் இல்லையென்பதை வந்த அன்னிக்கே புரிஞ்சு கொண்டேன். ஒரு விளக்கேத்தி வச்சு கும்பிடறதைக்கூட நீங்கள் விரும்பலைங்கிறதை புரிஞ்சு கொண்டேன். என் மனசிலேயே அவருக்கு ஒரு கோயில் வச்சுக் கொண்டேன். ''அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக இன்புருக சிந்தையிடுதிரியா நான் ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு'' என்று ஓர் ஆழ்வார் பாடியிருக்கிறார். அதைப்போல மனசிலேயே என் குலதெய்வத்துக்கு நான் விளக்கேத்திக்கிறேன். வழிபடுகிறேன். அதில் உங்களுக்கு ஏன் தடை?'' படபடவென்று அவள் பேசினாள்.

''நாளடைவில் என் வழிக்கு வருவேன்னு நினைச்சேன். வரவர உன் மூடக்கொள்கை அதிகரிக்கிறதே தவிர குறைவதைக் காணோம்.''

''என் வழிப்படி என்னை விடுங்கள்.''

''ஒரு பெரிய மருத்துமனையிலே நீ உதவி வைத்தியர்ங்கிறதை மறந்து தனிப்பட்ட முறையிலே ஒரு கிளினிக் வச்சுட்டு, ஏழைகளுக்குத் தொண்டாம் - மண்ணாங்கட்டியாம்! நினைச்சபோது வீட்டுக்கு வரது - போறது. இதெல்லாம் என் மனைவிங்கிற நிலைக்கு சரியா இருக்கா, யோசிச்சுப் பார்.''

''ஏழையாக நான் பிறந்ததினால் எனக்கு ஏழை மக்கள் மேல் அனுதாபம். அவங்களுக்கு என்னால் ஆனதை செய்ய விரும்புகிறேன். அது ஒரு தவறா?''

''எனக்குப் பிடிக்கலை. அவ்வளவுதான் சொல்ல முடியும்?''

''உங்களுக்குப் பிடிக்காததினால்தான் ஏழை அப்பாவை உங்கம்மா துரத்தினபோது, நீங்கள் வளர்ந்த வாலிபனாக இருந்தும் பேசாமல் வாயை மூடிக்கொண்டு இருந்தீங்களாக்கும்.''



''என்ன சொன்னே!'' குபீரென்று புலிபோல் பாய்ந்து அவள் தோள்களைப் பிடித்து அவன் ஆத்திரத்துடன் குலுக்கியபோது, அவள் உண்மையிலேயே பயந்தே போய்விட்டாள்.

முகம் சிவக்க - கண்கள் சிவக்க ஆத்திரமே உருவாக எதிரே நின்ற நரேந்திரனுக்கு இப்படி ஒரு கோபம் வருமா!

''இந்த விஷயத்தை அம்மாவிடம் பேசி நீ தர்கித்திருக்கிறாய். உனக்கு எத்தனை துணிச்சல்? இந்த வீடு, இந்த வாழ்க்கை, இப்போ நீ சாப்பிடும் சாப்பாடு எல்லாம் அம்மாவுடையது. ஞாபகம் இருக்கட்டும். இன்னொருமுறை என் தகப்பனாரைப் பற்றிய பேச்சை எடுத்தியோ...''

''என்ன செய்வீங்க?'' அவள் கேட்கவில்லை. அவள் கண்கள் கேட்டன.

''உனக்கும் எனக்கும் உள்ள உறவே போச்சுன்னு வச்சுக்கோ, எங்கம்மாதான் எனக்கு எல்லாம், தெரிஞ்சுக்கோ'' ஆத்திரத்துடன் உறுமினான்.

''இல்லை! பணந்தான் உங்களுக்கு முக்கியம். உண்மையை ஒத்துக்க பயப்படுறீங்க. உங்க மனசிலே கடுகளவு தெய்வ நம்பிக்கை இருந்தால் உண்மை உதட்டுலே தானா வரும். ஆரம்ப அஸ்திவாரமே கலகலக்கும் போது...''

அவள் பேசி முடிக்குமுன், அருகில் இருந்த தலையணையை கோபத்துடன் அவள் முகத்தில் வீசியெறிந்தான் அவன்.

''வாயை மூடு! மேலே ஒரு பேச்சு பேசினால், நான் யார்னு தெரிஞ்சுப்பே'' ஓங்கி அவன் கத்தினான்.

வெளியே அதன் எதிர் ஒலிபோல் வீடு கிடுகிடுக்க ஒரு பெரிய இடி ஓசை.

அவள் இடி ஓசைக்கு இப்போது பயப்படவில்லை. அதைவிட பயங்கரமாக அவள் இதயத்தைத் தாக்கியது, கணவனது கோபக் கூக்குரல்.

போர்வையை எடுத்து தலைமீது போர்த்திக் கொண்டு அவள் படுக்கையில் ஒருக்களித்துப் படுத்து விட்டாள். வெகுநேரம் உறங்கவில்லை.

இரவின் நடுப்பொழுதில் மெல்லத் திரும்பி இருட்டிலே கையால் துழாவிப் பார்த்தாள்.

நரேந்திரன் படுக்கையில் காணப்படவில்லை.

கீழ் அறையில் தனிப்படுக்கையில் உறங்கிக் கொண்டு இருந்தான்.

## 7

தம்பதிகளுக்கு இடையே ஏற்படும் பல பூசல்கள் தானே விரைவில் சமாதானத்தில் முடிந்துவிடும். அப்படித்தான் அவள் அன்று காலை எழுந்தபொழுது நினைத்தாள்.

குளித்து முடித்து விட்டு வேற்றுடை அணிந்து கொண்டு மருத்துவமனைக்குப் போகத் தயாராக அவள் கீழே வந்த பொழுது, நரேந்திரன் முன்னதாகவே காப்பி பலகாரம் சாப்பிட்டு மருத்துவமனைக்குப் போய் விட்டான் என்பதை அறிந்து கொண்டாள்.

பலகாரம் சாப்பிட உட்கார்ந்தவள் எதிரே மாமியார் வந்து அமர்ந்து கொண்டாள்.



தேனப்பன் தோசையும் சட்டினியும் பரிமாறிவிட்டு, காப்பி எடுத்துவர உள்ளே ஓடினான்.

''தனிக் குடித்தனம் போகணும்னு சொன்னாயாமே?'' சண்பகத்தின் குரல், அவளை நிமிர்ந்து பார்க்கச் செய்தது.

''நமக்குள் ஒத்துக்கொள்ளா விட்டால் தனியா இருப்பது நல்லதுதானே?''

ஒத்துக்கொள்ளாத நிலையை உருவாக்கத் திட்டம் போடறவள் நீ. எனக்குத் தெரியாதா, உன்னை? இந்த வீட்டுக்குள்ளே காலை வச்சபோதே இவள் படுநீலி, நம் மகனை கையில் போட்டுக்கொண்டு வீட்டை இரண்டாக்குவாள்னு தெரிஞ்சுகொண்டு விட்டேன். ஆனால், உன் ஜம்பம் என்னிடம் பலிக்கப் போறதில்லை. என் மகன் என் பேச்சைத்தான் கேட்பான்.''

அமைதியாக அவள் தோசையை பிட்டு சட்டினியில் ஒத்தி வாயில் போட முயன்றபோது மாமியார் மறுபடியும் வெடித்தாள்.

''இந்த வீடு, இந்த வாழ்க்கை, ஏன் நீ இப்ப வாயிலே போட்டுக்கிற இந்த தோசை அத்தனையும் என்னுடையது. தெரிஞ்சுக்கோ! என்னையும் என் பிள்ளையையும் பிரிக்கவா பார்க்கிறே?'' உறுமினாள்.

சட்டென்று கையை உதறிக் கொண்டு எழுந்து விட்டாள் அனுராதா.

குபீரென்று புரண்டு எழுந்த கோபத்தை அவளால் கட்டுக்கொள்ள வில்லை. ''இனி நான் வெளியிலேயே சாப்பிட்டுக்கிறேன். திருப்திதானே, உங்களுக்கு?''

''ஏன், வெளியிலேயே தங்கிவிடேன், சாமர்த்தியம் இருந்தால். இது என் வீடு. ஞாபகம் வச்சுக்கோ.''

''அதுதான் உங்கள் விருப்பம்னா இப்பவே நான் வெளியிலே போயிடறேன்.''

அனு விடுவிடு என்று மாடிக்கு விரைந்தாள்.

''இந்தா, போகுமுன் நாங்கள் போட்ட மூக்குத்தி, திருகாணி முதற்கொண்டு கழட்டி வச்சுட்டுப்போ. உனக்கு அத்தனை ரோஷம் இருந்தால் அப்படிச் செய்'' சவால் விடுத்தாள் சண்பகம்.

'சே! சே! இவங்க ஒரு மனிதப் பிறவியா! வார்த்தைகளாலேயே சுட்டுக் கொல்லும் அரக்கி! இனி ஒரு நிமிடம் இங்கே தங்கினாலும் கேவலம்!' தனக்குள்ளே எண்ணி, ஆத்திரம் பொங்க மாடிக்கு விரைந்தாள், அனுராதா.

அவர்கள் வீட்டு துணிகளையும் அணிகளையும் வைத்து விட்டுத் தன் சொந்த சம்பாத்தியத்தில் வாங்கிக் கொண்டவற்றை மட்டுமே வாரி ஒரு சிறு பெட்டிக்குள் போட்டுக் கொண்டாள்.

பின்கட்டிலே வேலைக்காரி, குழந்தை சிவகுமாரனை குளிப்பாட்டிக் கொண்டு இருந்தாள்.

''எங்கே என் குழந்தை? அவனையும் அழைச்சிட்டு நான் போயிடறேன். பிறகு அவர் வந்ததும் சொல்லி விடுங்கோ'' கூறிக்கொண்டு பெட்டியைத் தரையில் வைத்து விட்டு அவள் பின் கட்டுக்குப் போக முயன்றாள்.

மாமியார் சண்பகம் புலிபோல பாய்ந்து அவள் கரத்தைப் பிடித்து தரதரவென்று இழுத்தாள். ''அவன் எங்கள் வீட்டுப் பிள்ளை! அவனை அழைச்சுட்டுப் போக உனக்கு உரிமை கிடையாது.''

''அவன் என் குழந்தை! என் குழந்தையை என் கிட்டே இருந்து யாராலும் பிரிக்க முடியாது'' உரத்த குரலில் அவள் கூவியதும், உள்ளேயிருந்த வேலையாட்கள் அங்கே ஓடிவந்து விட்டனர்.



''போங்கள் எல்லாம் அப்பால்! இங்கென்ன வேடிக்கை?'' புலியாகச் சீறி விழுந்தாள் சண்பகம்.

வேலையாட்கள் சட்டென்று பின் கட்டுக்குள் மறைந்து விட்ட போதிலும், மாமியாருக்கும் மருமகளுக்கும் சண்டை, என்ற விஷயத்தை மூடிவைக்க முடியவில்லை.

''கூப்பிட்டீங்களா, அம்மா?'' வேண்டும் என்றே வேலைக்காரி வள்ளி குழந்தையை அவசரமாகத் துடைத்து துண்டால் போர்த்தி எடுத்துக் கொண்டு முன்னறைக்கு ஓடி வந்தாள்.

''அம்மா! அம்மா!'' சிவகுமார் கைகளை நீட்டி தாவியதைக் காண அனுவுக்குப் பொறுக்க முடியவில்லை.

வேலைக்கு புறப்படுமுன்-சிறிது நேரம் அவனுடன் கொஞ்சி விளையாடி விட்டுத்தான் அவள் கிளம்புவது வழக்கம். அநேக இரவுகள் அவனைத் தன்னுடன் அறையில் அருகே படுக்க வைத்துக் கொள்வதும் உண்டு. வேலைகள் எத்தனை இருந்தும் அவள் கணவனையோ, குழந்தையையோ புறக்கணிக்கவில்லை. அதே சமயம் தொழிற் கல்வியால் மற்றவர்கள் அடையக் கூடிய பயன்களை உதறிவிட்டு அவள் வீட்டுடன் தன் மகிழ்ச்சியே பெரிது என்று தன்னலமாகவும் வாழவில்லை.

படித்துவிட்டு பெண்கள் வேலை செய்யப் புறப்படும்போது ஓரளவு தங்கள் சுகங்களைத் தியாகம் செய்யத்தான் நேர்கிறது. இதையெல்லாம் அறிந்தவள் அவள். மாமியார்தான் அவளைப் புரிந்து கொள்ள மறுத்தாள். அடிமட்ட நிலையில் இருந்து வந்தவள் என்ற

காரணத்தால் அவளை மட்டமாக நினைத்தாள் - தீவிரமாக வெறுத்தாள். ''வீட்டை விட்டு வெளியே போ'' என்று விரட்டும் அளவுக்கு அவள் மீது ஆத்திரம் அதிகரித்து விட்டது.

''வள்ளி! குழந்தையை மாடிக்குக் கொண்டு போய் வச்சுக்கோ 'நான் வரேன்'' பெரிய எஜமானி உத்திர விட்டதை வள்ளியால் மறுக்க முடியவில்லை.

கலவரத்துடன் திரும்பித் திரும்பி அனுராதாவைப் பார்த்துக் கொண்டு அழுது அடம் செய்த சிவகுமாரை இறுக்கமாக அணைத்தபடி வேலைக்காரி படிகளில் மெல்ல ஏறி மேலே மறைந்தாள்.

''உங்கள் சொத்தையெல்லாம் நீங்கள் சொன்னபடி வச்சுட்டேன். என் சொத்தான என் குழந்தையை நான் எடுத்துப் போறதுதானே நியாயம்'' அனு பதறினாள்.

''அந்த நியாயத்தை கோர்ட்டிலே பேசிக்கோ! இந்த வாசற்படியைத் தாண்டி வெளியிலே போன பிறகு நீ மறுபடி இதுக்குள்ள வர முடியாது. வர விடமாட்டேன். நல்லா புரிஞ்சுக்கோ. ஏன் நிக்கறே? கிளம்பு. பெட்டி யோட தயாராக புறப்பட்டே. இப்ப பயமா இருக்கா?'' ஏளனமாகக் கோபத்துடன் சிரித்தாள் சண்பகம்.

''அவரிடம் பேசிக் கொள்கிறேன்'' கருவியபடி மிடுக்காகப் பெட்டியை எடுத்துக் கொண்டு அவள் நேரே தன் தோழி டாக்டர் ரேவதியின் மருத்துவ அறைக்கு டாக்சியில் விரைந்தாள்.

அங்கு இருந்தபடியே தொலைபேசியில் ஆனந்தா மருத்துவ மனையில் இருந்த கணவனுடன் அவள் தொடர்பு கொண்டாள். ''உங்கம்மா என்னை வெளியே போகச் சொல்லி மிகவும் கோபமாகப் பேசிட்டாங்க. நான் இப்போ வெளியில் இருந்து பேசறேன். என்ன செய்யட்டும்? நான் எங்கே போய் தங்குகிறதுன்னு



சொன்னால் பெட்டியை வச்சுட்டு வேலைக்கு வரேன்'' திக்கலும் திணறலுமாகப் பேசினாள்.

''அம்மாவே சற்றுமுன் பேசினாங்க, வீட்டை விட்டுப் புறப்படுமுன் நீ தீர்மானம் செய்திருப்பியே. ஏன் எங்கிட்ட கேட்கிறே?'' அவன் குரலில்தான் எத்தனை ஏளனம்.

''நீங்களும் இப்படிப் பேசினால்...'' அவள் தேம்பினாள்.

''நீ வீட்டைவிட்டு வெளியேறிய பிறகு பேச என்ன இருக்கு? உன் விருப்பப்படி வெளியிலே எங்கே வேணுமானாலும் தங்கிக்கலாம்.''

''நடந்ததை முழுதும் கேட்டால்''... அவள் விசும்பினாள்.

தேவையில்லை. நீ அழவும் தேவையில்லை. உண்மையைச் சொல்லப் போனால் அழ வேண்டியவன் நான். இப்படி என் மனைவி என்னை எல்லார் முன்னாலே யும் அவமானப்படுத்தி விட்டு வீட்டைவிட்டு வெளியேறி விட்டாள் என்கிற வெட்கத்தை நினைச்சு நினைச்சு வேதனைப்பட்டு அழவேண்டியவன் நான்.''

நீங்கள் கோபமாகப் பேசுகிறீங்க. உங்களைத் தவிர எனக்கு யார் இருக்கிறாங்க. அதை நினைச்சுப் பார்த்து'' அவள் முடிக்குமுன் -

''யாரோ இருப்பதால்தானே நீ துணிவோட வெளியிலே போயிருக்கே! எனக்கு உன்னோட பேசிக் கொண்டு இருக்க பொழுது இல்லை.

நான் இப்ப என்ன செய்யட்டும்? அதையாவது நீங்கள் சொன்னாத்தான்...'' அவள் மீண்டும் விம்மி யழுதாள்.

''நீ இப்ப என்ன செய்யக் கூடாதுங்கிறதை வேணுமானால் சொல்லட்டுமா? நீ எந்தத் துணிவோட வெளியிலே போனியோ அந்த துணிவைத் துறந்து மறுபடி எங்கள் வீட்டுக்குள்ளே வரக்கூடாது.''

''நீங்களா சொல்றீங்க...'' குலுங்கி அழுதாள்.

''நானேதான், டாக்டர் நரேந்திரன் சொல்லுகிறேன். இன்றோட, இப்பவோட நம் உறவு முறிஞ்சுபோச்சு.''

''என் குழந்தை...?'' அவள் பலமாக விசும்பினாள்.

''அவன் எனக்குச் சொந்தமானவன். கடமைகளை மறந்து, கட்டுப்பாடுகளை உடைச்சிண்டு வெளியே போகத்துணிஞ்ச நீ ஒரு நல்ல தாயாக இருக்க முடியாது. எனவே அவனை வளர்க்கும் உரிமை உனக்குத் தரப்படமாட்டாது.''

''உங்கம்மா நம்மை பிரிச்சு வைக்கப் போறாங்களா?'' அவள் அழுதாள்.

''அவங்களைப் பிரிக்க நீ பார்த்தே! தன் வினை தன்னையே சுடுகிறதுன்னு சொல்லச் சொன்னாங்க.''

துக்கம் நெஞ்சை அடைக்க அவள் இருக்கையில் இருந்து எழுந்தாள்.

தண்ணீர் குடிக்க அடுப்படிக்குப் போனாள். அங்கே பாத்திரத்தில் ஊற்றி வைத்த மோர் இருந்தது. அதை ஒரு தம்ளரில் ஊற்றி ஒரு மடக்குக் குடித்தாள்.

என்ன புளிப்பு! உச்சந்தலையை உலுக்கும் புளிப்பு.

வெயில் காலத்தில் மோர் எத்தனை சீக்கிரம் புளித்து விடுகிறது? ஒரு சில ஆண்டுகளில் அவளது அன்பு அவள் கணவனுக்குப் புளித்துப் போனதே, அதைப்போல்!



வெறுப்புடன் சிரித்துக் கொண்டாள். புரை ஏறிக்கொண்டது.

இப்போது மணி என்ன? எட்டாகப் போகிறதே? குழந்தை குமார் அம்மாவை நினைத்து அழுகிறான் போலிருக்கிறது. என்ன அநியாயம்? பச்சை பசும் பாலகனை தாயிடம் இருந்து பிரித்து வைக்க எத்தனை கடின மனது இருக்கவேண்டும்?

தம்ளரை கழுவி வைத்து விட்டு, அறைக்குள் வந்து உட்கார்ந்தாள்.

சந்தடி மிக்க பகுதிதான் அது. ஆனாலும் இருள் மண்டிக் கொண்டு இரவு முன்னேறும்போது சட்டென்று அமைதி அடைந்துவிடும். சுற்றிலும் உள்ள குடியிருப்பு விளக்குகள் அணைக்கப்பட்டு, கட்டடமே இருளில் மூழ்கி விடும்போது அவளுக்கு அந்த அமைதியும் இருளும் பயத்தைக் கொடுத்தன. மாடிப் படிகளில் யாராவது ஏறி வரும் ஓசை கேட்டால், அவளையும் அறியாது நெஞ்சு பயத்திலே அடித்துக்கொள்ளும். அவள் தனியாக இங்கு வசிப்பது தெரிந்த முரடர்கள் யாராவது அவளுக்குத் துன்பம் கொடுக்க இரவின் பின்னேரத்தில் வந்து கதவைத் தட்டினால்?

தன் நோயாளிகளிடமும் அவள் எச்சரித்து இருந்தாள். கூடியவரை இரவில் அவளை அவர்கள் அழைக்கக்கூடாது. அவசரமான பிரசவ கேஸ்களாக இருந்தால், தம்பியோ அல்லது அண்ணனோ அவளுக்கு ஏற்கனவே தெரிந்தவர்தான் வந்து பெயரைச் சொல்லி கதவைத் தட்டவேண்டும். கூடவே வீட்டில் இருந்து ஒரு பெண்ணையும் துணையாக அழைத்து வந்தால் தேவலை. இப்படி பலத்த எச்சரிக்கை செய்திருந்தாள்.

தன்னந்தனியாக இருக்கிறாள். இரவில் யாரோ வந்து அழைத்ததும் கிளம்புகிறாள். எங்கே போகிறாள் என்று அக்கம்பக்கத்தவர்கள் தவறாக நினைத்துக் கொள்ளலாமே? ஏற்கனவே அவள் கணவனைப் பிரிந்து வந்திருக்கிற சங்கதி அந்தக் குடியிருப்பு முழுவதும் பரவியிருந்தது. ஆளுக்கு ஒருவித கதை சொல்லிக் கொள்கிறார்கள் என்பதும் அவள் காதுகளில் விழுந்தன.

பெண் என்பவள் படித்துவிட்டால் என்ன? தொழில் கல்வி அடைந்துவிட்டால் என்ன? கணவனுடன் இல்லாது இப்படித் தனியே வாழத் தொடங்கிவிட்டால், பலவிதமான சந்தேகப் பார்வைகளுக்கு இலக்காக வேண்டியதுதான். இதே நிலையில் நரேந்திரன் இருந்தால் அவனைப் பற்றி யார் பேசப் போகிறார்கள்? பெண் எப்பொழுதும் யாருக்கும் ஒரு கிள்ளுக்கீரைதான்.

என்னென்னவோ யோசித்தபடியே அவள் தொலை பேசி எண்களைச் சுழற்றினாள்.

''இப்பத்தான் சாப்பிட்டு எழுந்தேன். நாதன், நல்ல புளிக்குழம்பு செய்திருந்தான். ஒரு வாரத்தில் நாக்கு செத்துப் போயிட்டது. நாம் வெளியே பயணம் பண்ணும்போது ரசம் குழம்புன்னு உணவையே நினைச்சு ரொம்ப அலட்டிக்கிறோம். வெள்ளைக்காரங்களைப் பார். எங்கே போனாலும் அங்கங்கே கிடைக்கும் சாப்பாட்டை ஒரு பிடி பிடிச்சுட்டு நிம்மதியா இருக்காங்க. நமக்கு இன்னமும் சரியா வாழத்தெரியலை'' படபட என்று பேசினாள் டாக்டர் ரேவதி. ''ஆமாம், எதுக்குக் கூப்பிட்டே?''

''ஒண்ணுமில்லை. குழந்தையின் நினைவு வந்தது. உங்கள்கிட்ட என் துக்கத்தை சொல்லிக்காம யார்கிட்ட சொல்லிக்கப் போறேன்? அதனால் கூப்பிட்டேன்.



குழந்தையைப் பிரிஞ்சு இருப்பது ரொம்பக் கஷ்டமாக இருக்கு டாக்டர். ஏன் என்னை இப்படி அவங்க சித்திரவதை பண்றாங்க? எனக்கு காசு, பணம் எதுவும் வேண்டாம்-என் குழந்தைதான் வேணும். அவன் இப்போ எப்படி இருக்கானோ? பார்த்து நாலு மாசம் இருவது நாளாச்சே ரேவதி அம்மா'' புலம்பினாள் அனு.

''கவனமா கேளு. நானே உனக்கு இன்னிக்கு போன் பண்ணலாம்னு இருந்தேன். நீ கூப்பிட்டது நல்லதா போச்சு. உன் குழந்தை குமாரை நான் இன்னிக்கு மாலை நண்பர் ஒருவர் வீட்டிலே பார்த்தேன்.''

''உண்மையாகவா ரேவதி அம்மா!''

''ஆமாம். எதிர்பாராத சந்திப்பு. என் நண்பர் வீட்டிலே நிச்சயதார்த்தம்-அவரது கடைசி பையனுக்கு. கூப்பிட்டிருந்தாங்க இன்னிக்குத்தான் ஊரில் இருந்து வந்தேன்னு சொல்லி தப்பிக்க முடியலை. போயிருந்தேன். அங்கே உன் மாமியார் கண்ணைப் பறிக்கும் சிவப்பு வண்ணத்திலே முழங்கால்வரை சரிகைக் கரை போட்ட பனாரஸ் புடவையில் கூடை நகையை மேலே அள்ளிக் கொட்டிக்கொண்டு வந்திருந்தாங்க.''

''அவங்களை விடுங்க. என் குழந்தை-''

''உனக்கு ரொம்ப அவசரம். இந்த அவசர புத்திதான் உன்னை இந்த நிலையில் வச்சிருக்கு. நாற்காலியை நிறைச்சுக்கொண்டு உட்கார்ந்திருந்தவங்க மடியிலே சிவகுமாரைப் பார்த்தேன். முன்னைவிட கொழு கொழுன்னு இருக்கான். அப்படியே உன் கண்கள், அவரது முகவாய், குழந்தை பார்க்க ஆரோக்கியமாக இருக்கான். ஏன் கவலைப்படறே?''

''என் மாமியார்கிட்டே நீங்கள் பேசினீங்களா?''

''அதெப்படி முடியும்? உனக்கு சிநேகிதர்கள் எல்லாரும் அவங்களுக்கு விரோதிகளாச்சே. நான் உள்ளே நுழைஞ்சதை கவனிச்சதுமே முகத்தை அந்தப் பக்கம் திருப்பிக் கொண்டாங்க.''

''அவரைப் பார்த்தீங்களா, ரேவதி அம்மா? அவரைப் பார்த்து கூட எத்தனை மாசமாச்சு! ரொம்ப வேதனையா இருக்கு.''

''பொறுமையா இருன்னு ஆயிரம் தடவை சொல்லிட்டேன். பிரம்மதேவன் உன்னைப் படைக்கும் போது அழகான உருவம் கொடுத்து நல்ல மூக்கும் கண்ணும் வச்சான். ஆனால், பொறுமை என்கிற கிண்ணத்திலே கையைத் தொட்டு உன் தலையிலே வைக்க மறந்துட்டான். பொண்ணுக்கு அழகு, திறமை எல்லாம் இருக்கு; முக்கியமா வேண்டியது இல்லே!'' ரேவதி பகபகவென்று சிரித்தாள்.

கன்னத்திலே உருண்ட கண்ணீரை விரலால் சுண்டிவிட்டு, அனுராதாவும் சிரித்தாள். ''போங்கோ ரேவதி அம்மா. என்னைக் கேலி செய்து சிரிக்க வைக்கிறீங்க.''

''நீ நல்லா சிரிக்கணும், விரைவிலே சிரிச்சுக் கொண்டு இருக்கணுங்கறதுதான் எனது நித்தியப்படி பிரார்த்தனை. விரைவில் நீ சிரிக்கப் போகிறே.''

ஒரு நிமிடம் என்றாலும் டாக்டர் ரேவதி எத்தனை ஆறுதலாகப் பேசுகிறாள். மனதுக்கு எத்தனை இதமா இருக்கிறது. அனு ஆச்சரியப்பட்டாள்.



# 8

அடுத்த சில நாள் அனுவுக்கு தன்னைப் பற்றி சிந்தித்து துயரப்பட நேரமே இருக்கவில்லை. ஒரு வாரமாக வெளியூர் போய் இருந்ததால், தினமும் காலையும் மாலையும் கவனித்து சிகிச்சை செய்ய வேண்டிய நோயாளிகளின் கூட்டம் பெருகியிருந்தது. வேலை மும்முரத்தில் அவள் தன்னைப்பற்றி எண்ணிப் பார்க்கவும் மறந்தே போனாள்.

அவளுடைய நோயாளிகளில் பெரும்பாலானவர் மிகவும் ஏழைகள்-அப்படியிருந்தும் அன்புடன் தங்களைக் கவனித்து சிகிச்சை செய்யும் அவளுக்கு உண்டான தொகையை மனம் உவந்து அவ்வப்போதே கொடுத்து விடும் சுபாவம் உடையவர்களாக இருந்தனர். அவர்களது அன்பான ஆதரவில்தான் அவள் சுதந்திரமாக தன்னந்தனியே வாழ முடிந்தது. அவர்கள் தங்களுக்குப் பொறுப்பாக சிகிச்சையளிக்கும் வைத்தியரிடம் நன்றி காட்டினார்கள். தன்னை ஆதரிக்கும் அந்த நோயாளிகள் மீது அவள் அன்பு காட்டினாள். இப்படி அவர்கள் இடையே ஒரு நட்புரிமை. சிலர் அவளிடம் சிகிச்சை பெற்றுக் கொண்ட உரிமையுடன் மிகவும் நெருங்கி நட்புடன் பழகவும் தொடங்கி விட்டனர்.

அன்று காலை அவளைப் பார்க்க வந்திருந்தாள் ஒரு வயதான அம்மாள். அவள் இரத்த அழுத்த நோயால் வெகுகாலமாகப் பீடிக்கப்பட்டு, சிகிச்சைக்கு வந்து கொண்டு இருந்தாள்.

''பரவாயில்லையே இப்போ உங்கள் ரத்த அழுத்தம் நல்லா இறங்கி இருக்கு. நான் சொன்ன மருந்துகளை விடாது சாப்பிடறாப் போல தெரியுது'' அனுராதா சிரித்துக் கொண்டே சொன்னாள்.

''எங்கள் நோயையும் கஷ்டத்தையும் தீர்க்க ஒரு தெய்வம் போல நீ இங்கே வந்து தினமும் உட்கார்ந்துக்கிற உன் கஷ்டத்தைத் தீர்க்க அந்த தெய்வத்துக்கே மனசு இல்லேம்மா.''

புன்முறுவலுடன் அனுராதா அந்த அம்மாளைப் பார்த்தாள்.

''சின்ன வயசு, உங்கள் ரெண்டு பேருக்கும். இப்படிப் பிரிஞ்சு இருக்கீங்களே? அதை நினைச்சு என் மனசு ரொம்ப சங்கடப்படுகிறது. வீட்டிலே பெரிய வங்களா இருக்கிற மாமியாராவது எடுத்து மகனுக்கு சொல்லக் கூடாதா? உலகத்திலே நடக்காத சங்கதி இல்லேம்மா. சின்னப் பொண்ணு உன்னைத் தனியா இருக்கும்படி விட்டுவிட அவருக்கு மனசு எப்படித்தான் வந்ததோ?''

பெற்ற தாய் போய் விட்டாள். ஆனால் யாரோ ஓர் அம்மா தாயைப் போன்ற பாசத்துடன் தன் கஷ்டத்தை பற்றி கவலைப்படுவதைக் கேட்க அனு நெஞ்சு உருகிப்போனாள். அவள் அனாதையில்லை! அவளுக்காக மனம் கரைகிறவர்கள் அநேகர் அருகே இருக்கிறார்கள் என்ற தெம்பு ஏற்பட்டது.

''நன்றி, அம்மா. என் மேலே நீங்கள் காட்டற அன்புக்கு ரொம்ப நன்றி'' தன் உணர்வுகளை சமாளித்தபடி மெல்லச் சிரித்தாள்.

''நீ நம்புவியோ என்னவோம்மா, நான் நிதமும் பிள்ளையார் கோவில்லே, உனக்காக ரொம்ப வேண்டிக்கிறேன். சீக்கிரம் நீ உன் வீட்டுக்காரரோட போய்ச் சேர்ந்து சுகமா வாழனும்னு நான் மனசார வேண்டிக்கிறேன் அம்மா. கவலைப்படாதே, கடவுள்



இருக்கார்.'' அவளது கையைத் தொட்டு ஆதரவுடன் அழுத்திவிட்டு, வெளியே சென்றாள்.

நெஞ்சம் நெகிழ்ந்து, கண்கள் பனிக்க, உணர்வுகள் அலைபாய சிறிது நேரம் வேலை செய்யத் தோன்றாது தடுமாறிப் போனாள் அனுராதா.

அடுத்த நாள் காலை அவளுக்கு அப்படி ஓர் அதிசயமான எண்ணம் ஏற்பட்டது.

தினமும் அவள் கணவன் நுங்கம்பாக்கத்தில் இருந்த தனது மருத்துவமனைக்கு அடையாறில் இருந்து கிளம்கிப் போகும் நேரமும், வழியும் அவளுக்கு மனப்பாடம். அவள் வசித்துக் கொண்டு இருந்த அந்தக் குடியிருப்பு பகுதியருகே அவனது கார் காலை எட்டு பதினைந்து அல்லது இருபதுக்குள் வந்துவிடும் என்ற கணிப்பு அவளுக்கு. காலை ஆகாரத்தை விரைவாக முடித்துக் கொண்டு தனது மருத்துவமனைக்குப் புறப்பட அவளும் தயாரானாள். கதவை மூடிப் பூட்டிக் கொண்டு வேகமாக கீழே இறங்கி வந்து வாசலில் தயாராக நின்று கொண்டாள்.

அவளது அதிர்ஷ்டம், அன்று ராமசாமி அய்யர் சாலைக்குள்ளே அவன் வண்டி வந்ததும், ஒரு கடைமுன் நிறுத்திவிட்டு என்னவோ வாங்க அவன் இறங்கிச் சென்றான். பரபரப்புடன் தெருவைத் தாண்டி எதிர்ப்பக்கம் விரைந்தாள், அனுராதா.

கடையில் இருந்து சாமான் பொட்டலத்துடன் காருக்குத் திரும்பிய நரேந்திரன் திடுக்கிட்டுப் போனான். தன் காரின் கதவின்மீது சாய்ந்துகொண்டு மனைவி நிற்பதைக் கண்டான்.

''என்ன இதெல்லாம்? தெருவில் நாலு பேர் பார்க்கும் இடத்தில் நாடகம் போடணுமா?'' கோபத்துடன் அடிக்குரலில் அதட்டினான்.

''தொலைபேசியில் அழைத்தாலும் பதில் பேசமறுக்கறீங்க. ரேவதி அம்மா எனக்காகப் பேச வந்ததையும் மதிக்காது, அவங்ககிட்ட முகங்கொடுத்துப் பேச மறுத்துட்டீங்க. நமக்குத் தெரிஞ்ச நண்பர் நரசிங்கம் வந்து சமரசம் செய்து வைக்க முயன்றும் தோற்றுப் போனார்.''

''தெரிஞ்ச கதைதானே? அதைப்பத்தி பேச்சென்னடி, நகரு எனக்கு வேலைக்கு நேரமாச்சு.''

''நான்கூட வேலைக்குப் போகிறவள்தான். ஆனாலும் நமக்குள் கணக்குத் தீர்க்கிற முக்கியமான வேலை ஒண்ணு இருக்கே.''

''இதென்ன பிடிவாதம்? நடுரோடுன்னு பார்க்கிறேன்'' பற்களைக் கடித்தபடி அவளை உறுத்து விழித்தான்.

''தினமும் இந்த வழியே போறீங்க; நான் இங்கே இருப்பது தெரியும்; அப்படியும் இருக்கேனா செத்தேனான்னு பார்க்க முடியாது மனம் கல்லாகிட்டது. போகட்டும், என் குழந்தையை என்கிட்ட ஒப்பிக்க ஏற்பாடு செய்துடுங்க, என்னால் அவனைப் பிரிஞ்சு இருக்க முடியாது. இந்தப் பிஞ்சு வயசிலே அவனுக்குத் தாய்தான் முக்கியமா தேவை. அதை நேரிடையாகக் கேட்கத்தான் இங்கே காத்திட்டு நின்னேன். அவ்வளவு தான்'' சொல்லிவிட்டு சட்டென்று விலகி, எதிர்ப்பக்கமாக நடந்து அப்பால் சென்றுவிட்டாள்.

இந்த நேர்முகத் தாக்குதலுக்குக் கட்டாயம் ஏதாவது பலன் இருக்கும் என்று அனு நம்பினாள். அது போல பலன் கிடைத்தது-கடித உருவில்.

இரண்டு நாளைக்குப் பின்னர், மருத்துவமனையில் இருந்து பகல் உணவுக்காகத் திரும்பியிருந்தவள் கதவைத்



திறந்தபோது கதவு இடுக்கில் தபால்காரர் சொருகி வைத்துவிட்டுப் போன கடிதம் தொப்பென்று தரையில் விழுந்தது.

அவசரமாக - பதட்டமாகப் பிரித்துப் படித்தாள்.

நகரத்திலே மிகப் பிரபலமான வக்கீல் வீரராகவனிடம் இருந்து வந்திருந்தது.

''என் கட்சிக்காரர் டாக்டர் நரேந்திரனை நீங்கள் திருமணம் செய்துகொண்டு அவருடன் ஐந்து ஆண்டு வாழ்ந்துவிட்டு, ஒரு குழந்தைக்குத் தாயானபின் அக்டோபர் மாதம் ஏழாந்தேதி காலை திடீரென்று வீட்டைவிட்டு கிளம்பிச் சென்று தனியாக வசிக்கத் தொடங்கியிருக்கிறீர்கள் கணவனைப் புறக்கணித்து விட்டு, கடமைகளை மறந்து வசிக்கும் உங்களிடம் இருந்து என் கட்சிக்காரர் சட்டத்திற்கு உட்பட்ட பிரிவை விரும்புகிறார். அவர் அதை ஏன் வற்புறுத்தி அடையக் கூடாது என்பதற்கு விரைவில் உங்கள் விளக்கம் தரவேண்டும்.

வீரராகவன்,

வழக்கறிஞர்'

நெஞ்சிலே நெருப்பாக எரிந்தது!

குழந்தையைத் தந்துவிடுங்கள் என்றதும் நரேந்திரன், உடனடியாக வழக்குத் தொடரத் தொடங்கி விட்டானே! சட்டப்படியான பிரிவு வேண்டுமாமே! என்ன அநியாயம்! தட்டிக் கேட்க ஆள் இல்லை என்பதால் தாயும் மகனும் அவளிடம் வம்பு செய்கிறார்கள்.

''முருகா-இதையெல்லாம் பார்த்துட்டு நீ சிரிச்சு கிட்டேயிருக்கியே, அப்பா! எனக்கு உன்னைத் தவிர துணை யார்?'' கோவென்று கதறி அழுதாள்.

பின்னர் ரேவதியின் நினைவு வரவே, வீட்டைப் பூட்டிக்கொண்டு கடிதத்துடன் அங்கே விரைந்தாள்.

''ரேவதி அம்மா! இதைப் பாருங்கள். அவர் எனக்கு வக்கீல் நோட்டீசு அனுப்பியிருக்கிறார். நான் என்ன செய்வேன்? எங்களுக்குள் நிரந்தமான பிரிவு ஏற்பட்டு விடும் போல்தான் இருக்கிறது. ரேவதி அம்மா! என் வாழ்வு-இப்படியா நாசமாகணும்?'' விம்மி விம்மி அழுதாள்.

ரேவதி தன் மூக்குக் கண்ணாடியை சரி செய்து கொண்டு அதை ஊன்றிப் படித்தாள்.

''இதற்குப் பதில் வக்கீல் நோட்டீஸ் நாமும் கொடுக்க முடியும். உன்னைத் தகுந்த வக்கீலிடம் அழைத்துப் போகிறேன். விவாகரத்து என்பது இருசாராரும் மனம் ஒப்பி தங்களுக்குள் பேசி முடித்துக் கொண்டால் ஒழிய அத்தனை எளிதான காரியம் அல்ல. நீ இழு, நான் இழு என்று கோர்ட்டுக்கும், வக்கீல் வீட்டிற்கும் ஆண்டுக் கணக்கில் இழுத்துக் கொண்டு இருக்க முடியும்'' என்றாள் ரேவதி.

''விவாகரத்து சட்டம் என்பதே பெண்களின் உரிமையைப் பாதுகாக்கத்தான் அமுலுக்கு வந்தது! முன் எல்லாம் மனைவியை பிடிக்கவில்லையென்று தள்ளி வைத்துவிட்டு, இன்னொருத்தியை சட்டென்று ஆண் மகன் திருமணம் செய்துகொள்ள வாய்ப்பு இருந்தது. பெண்ணுக்கு இப்படி இழைக்கப்படும் அநீதியை அடக்கவும், அவளுக்குத் திருமணத்தில் சம உரிமை வழங்கவும்தான் இந்தச் சட்டம்'' என்று ரேவதி விளக்கினாள்.

வீட்டைவிட்டு ஓடிப்போய் விட்டாய் என்று நரேந்திரன் முதலில் உன்மீது குற்றஞ் சாட்டி வக்கீல்



நோட்டீசு அனுப்ப வேண்டும். நீ அதற்கு பதில் கொடுப்பாய். ''என் உடலையும் மனதையும் கொடுமை செய்து என் குழந்தையை வைத்துக்கொண்டு என்னை வீட்டைவிட்டு துரத்தி விட்டனர். நானாகப் போக வில்லை'' என்று மறுப்புத் தெரிவிப்பாய். பிறகு நீதிமன்றத்தில் வழக்காட வேண்டும். நாட்கள் நகரும். முடிவில் இரண்டு ஆண்டு காலம் சட்டத்திற்கு உட்பட்ட பிரிவு என்று நீதி வழங்கப்படும். அதற்குப்பின் அவர் விவாகரத்து கோரி மறுபடி வழக்காட வேண்டும். நீ எதிர்த்து வழக்காடலாம். இருபக்கத்து வக்கீலும் ''போதும் இந்தச் சண்டை'' என்று இரண்டு பேரையும் கூப்பிட்டு ஒத்துப் போகும்படி உபதேசிக்கலாம். தீர்ப்பு வழங்குமுன் திருமணத்தை உடைத்து விவாகரத்து வழங்குமுன் நீதிபதியே உங்கள் இருவரையும் அழைத்து ''திருமணம் என்பது புனிதமான இணைப்பு. இருவரும் குறைகளை பாராட்டாது விட்டுக் கொடுக்கப் பழகிக் கொண்டு, ஏன் இருவரும் நன்றாக வாழக் கூடாது'' என்று புத்திமதி சொல்லக்கூடும்? யோசிக்க அவகாசம் கூடத் தருவார். இப்படி பல படிகளைக் கடந்தால்தான், திருமணம் முறியும். அதற்குள் சண்பகம் அம்மாள் எத்தனை தலைகீழாக நின்றாலும் தன் மகனுக்கு வேறு ஒருத்தியைக் கட்டி வைக்க முடியாது. அப்படிச் செய்தால் நீ அதைக் குற்றமாக எடுத்துக்கொண்டு வழக்காடலாம். இரண்டாவ தாக வருகிறவளுக்கு மனைவி என்கிற அந்தஸ்தை சட்டம் தர மறுக்கும். இந்தக் காலத்துப் பெண்கள் இப்படிப்பட்ட இக்கட்டான திருமணத்துக்கு ஒப்பமாட்டார்கள். ஆகவே, நீ பொறுமையாக இரு. உன் வாழ்க்கையில் திடீர் என்று இப்போது ஏற்பட்டு இருக்கும் துயரத்தைப்போல திடீர் என்று இன்பமான திருப்பம் - ஓர் அற்புதம் ஏன் நிகழாது என்று நினைக்கிறாய்? என் அருமை அனு;

பொறுமையாக இரு. இந்த வக்கீல் நோட்டீசுக்கு உடனடியாகப் பதில் கொடுத்துவிட்டு காத்திரு'' என்று தைரியம் சொன்னாள் ரேவதி.

''நீ மனைவி என்ற ஸ்தானத்திலே இருக்கும்வரை டாக்டர் நரேந்திரன் வேறு யாரையும் திருமணம் செய்து கொண்டுவிட முடியாது. பயப்படாதே! உன்னுடன் உனது துயரச் சமயத்தில் உறுதுணையாக நான் எப்பொழுதும் இருப்பேன். சே! என்ன மதியீனம்! நம் இருவருக்கும் அந்த திருச்செந்தூர் முருகன் அல்லவா துணையாக இருக்கிறான். முகத்தை துடைச்சுக்கோ. காப்பி வரவழைக் கட்டுமா? சாப்பிடு. வயிற்றைக் காயப்போடாதே. உடம்பில் தெம்பு இருந்தால்தான் மனதிலும் தெம்பு'' வேகமாக எக்ஸ்பிரஸ் வண்டியைப் போல நிறுத்தாது பேசி முடித்தாள்.

''டாக்டர் ரேவதிக்கு வயது மேலே ஆக, ஆக, மனதிலே துணிவு ஏறிக்கொண்டு அல்லவா போகிறது! என்ன விந்தை-தன் தோழியைப் பற்றி பெருமையாக எண்ணிக் கொண்டாள் அனு.

அன்று மாலையே வக்கீல் வரதராஜனை அனு சந்தித்தாள்.

மேஜைக்குப் பின்னால் மெத்தை நாற்காலியில் ஜம் என்று சாய்ந்து இருந்த வரதராஜனுக்கு வயது ஐம்பதுக்கு மேல் இருக்கும். எங்கேயோ பார்த்த முகமாக இருக்கிறதே என்று எண்ணியபடி கைபையைத் திறந்து, காகிதத்தை எடுக்கத் துழாவினாள், அனு.

''டாக்டர் ரேவதியம்மாள் தொலைபேசியில் முன்னதாகவே சொல்லிட்டாங்க. என்னை உங்களுக்குத் தெரியலையா?'' பற்களைக் காட்டி, தடிமனான மூக்குக் கண்ணாடி வழியே கண்களால் சிரித்தார் வரதராஜன்.



அனுவுக்கு மெல்ல ஞாபகம் வந்தது. ''ஆமாம்! ஆனந்தா நர்சிங்ஹோமில் வயிற்று ஆபரேசன் செய்து கொண்டு மூன்றவாது மாடி அறையில் படுத்திருந்திங்களே இப்ப வயிற்றுவலி பூரணமா குணமாயிடிச்சா, சார்?'' விசாரித்தாள் அனுதாபத்துடன்.

''எனக்கு வயிற்றுவலி நல்லா தேவலையாயிட்டது. டாக்டர் நரேந்திரனுக்கு நல்ல கைராசி. நீங்களும் ரொம்ப நல்லா கவனிச்சீங்க. என்னை கவனித்துக் குணப்படுத்திய வைத்தியர்களுக்கு இப்போ பெரிய தலைவலி ஆரம்பமாகியிருக்கிறதேன்னு நினைச்சு வருத்தப்படறேன்.''

''என்ன சார் சொல்றீங்க?''

''பார்வதி- பரமேசுவரன் போல அலங்காரமாக நீங்கள் ரெண்டுபேரும் ஆஸ்பத்திரி கோட்டு போட்டுக் கொண்டு காலை வேளையிலே சிரித்த முகத்தோட வார்டுகளைப் பார்வையிட வருவீங்களே 'அதை நினைச்சேன். பார்த்தாலே நோய் போயிடும் போல இணைந்த ஜோடி' கணவனும் மனைவியுமா. இவர்கள் எப்படி திறமையா ஒருவருக்கு ஒருவர் துணையா இந்த மருத்துமனையை சீரா நடத்திக் கொண்டு போறாங்கன்னு நான் தினமும் பார்த்துப் பார்த்து வியக்கறது உண்டு.''

''அதுக்குக் கொடுத்து வைக்கலை, அவ்வளவுதான்'' நெடுமூச்செறிந்தாள் அனுராதா.

''இல்லையம்மா. இளமையின் துடிப்பு பொறுமையில்லாத வாலிப உணர்வுகளின் தவிப்பு. டாக்டர்தான் அவசரப்பட்டுக் கொண்டு கோபமா வக்கீல் நோட்டீஸ் விட்டிருக்கிறார். நீங்கள் உடனே பதிலுக்கு நோட்டீஸ் விடனுமா? எனக்கு பீஸ் பிரதானம்னு நினைச்சா, இப்பவே டைப் அடிச்சு அனுப்பி விடுவேன்.

என்னை நோயில் இருந்து காப்பாத்தியிருக்கிறீங்க. நன்றிக் கடனாக உங்களை இந்த விபத்தில் இருந்து காப்பாத்தணும்னு தோன்றது.''

நெஞ்சை பல்வேறு உணர்வுகள் அழுத்தப் பேசத் தோன்றாது அனுராதா விழித்தாள்.

பல கட்டங்களைத் தாண்டியபின் விவகாரத்து எனும் நிலை வரும்போது, நீதிபதியே ஒரு சமயம் அழைத்து புத்தி சொல்வார் என்றாள், தோழி ரேவதி. புத்தி சொல்லும் கட்டம் இப்பொழுதே தொடங்கிவிட்டதே.

''எதையும் அழிச்சிடறது சுலபம்; உருவாக்கிறது கஷ்டம்மா. நீங்கள் எல்லாம் படிச்சவங்க - பலருக்கு புத்தி சொல்லத் தெரிஞ்சவங்க. அவசரப்படாதீங்க. நான் பெங்களூருக்கு ஒரு கல்யாணத்துக்கு இன்று ராத்திரி மெயிலுக்குப் போகிறேன். அப்படியே அங்கேயிருக்கும் என் மகள் வீட்டிலே நாலுநாள் ஒய்வா இருந்துட்டு வரப்போகிறேன். உங்களுக்கு ஒரு வார அவகாசம் கொடுக்கிறேன். நன்றாக யோசிச்சுட்டு மறுபடி வாங்க.''

கண்ணில் புரண்ட நீரை சமாளித்துக் கொண்டு அனு பையைத் திறந்தாள்.

''பீசா! எதுக்கம்மா, வேண்டாம். ஒரு தகப்பன் நிலையில் இருந்து கொண்டு என் மகளுக்கு ஒரு புத்தி சொல்ல பணம் வாங்குவேனா? என்னை ரொம்ப நல்லா கவனிச்சு குணப்படுத்தினீங்க, நீங்கள் ரெண்டு பேரும் ஒற்றுமையா இருந்து இன்னும் பல நோயாளிகளைக் குணப்படுத்தணும். அதுதான் என் ஆசை.''

பொங்கிப் புரண்ட உணர்வுகளால் நெஞ்சு விம்ம அவள் மெல்ல எழுந்து வெளியே வந்தாள்.



கடல்காற்று இனிமையாக-குளிர்ச்சியாக முகத்தில் வீசியபோது மனதிலே ஒரு தெம்பு. ''பெரியவர் சொல்வதைக் கேட்போம். பொறுமையாக இருந்து பார்ப்போம். என்ன நடக்கிறது என்றுதான் விட்டுப் பிடிப்போமே'' என்ற சிந்தனையுடன் பஸ் நிலையத்தை நெருங்கினாள்.

## 9

அன்று மாலை நோயாளிகளைக் கவனித்துவிட்டு பஸ்ஸைப் பிடித்து வீடு திரும்புவதற்குள் இருட்டி விட்டது.

களைப்புத்தீர பச்சைத் தண்ணீரில் குளித்து முடித்தாள் அனு. வேறு சுத்தமான நூல் சேலை அணிந்து கொண்டு அவசரமாக முடியை வாரிக் கொண்டையிட்டுக் கொண்டாள்.

வீட்டில் இருந்தாலும், வேலையில் இருந்தாலும் எப்பொழுதும் சுத்தமாகக் காணப்படவேண்டும் என்ற கொள்கை, அவளுக்கு.

குங்குமத்தின்கீழ் நெற்றியில் திருச்செந்தூரில் இருந்து கொண்டு வந்த அபிஷேக விபூதியில் இருந்து துளியளவு எடுத்து கீற்றாக வைத்துக் கொண்டாள். நோயாளிகளில் ஒரு பெண்மணி - மைசூருக்குப் போயிருந்தவள் - திரும்பி வந்த போது டாக்டர் அம்மாவை மறக்காது ஒரு கத்தை சந்தன ஊதுவத்தி வாங்கி வந்திருந்தாள். அவளே நேராக மருத்துவ அறைக்குள் வந்து டாக்டர் அம்மாவிடம் தனது சிறு பரிசை அன்போடு கொடுத்துவிட்டுப் போயிருந்தாள். ஊதுவத்தி கத்தை மீதிருந்த காகிதத்தைக் கிழித்து, சில வத்திகளை எடுத்துக்

கொளுத்தி படுக்கையறை சுவரில் அபயக்கரத்துடன் முறுவலித்துக்கொண்டிருந்த பால முருகன் படத்து அருகே சட்டத்திலே தெரிந்த ஒரு சிறு ஓட்டைக்குள் சொருகி வைத்தாள். வீடு முழுவதும் சந்தன மணம் சூழ்ந்து கொண்டிருந்தது.

அருகேயிருந்த சிறு விளக்கை ஏற்றி வைத்துவிட்டு ஒரு நிமிடம் படத்தின் முன் நின்று தியானித்தாள். பிறகு சமையல் அறைப்பக்கம் வந்தாள்.

காலையில் அவசரமாக உப்புமாவுடன் வேலைக்குக் கிளம்பியிருந்தாள். இப்போது பசி வயிற்றைக் கிள்ளியது. முதலில் ஒருவாய் சூடாகக் காப்பி சாப்பிட்டுவிட்டு பிறகு சமையலைத் தொடங்கலாம் என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு அடுப்பைப் பற்ற வைத்தாள். பாலைக் காய்ச்சி இறக்கி, பொடியைக் கலந்து, தம்ளரில் ஊற்றி எடுத்துக் கொண்டு முன்னறைக்கு வந்தாள். அப்பொழுது அழைப்பு மணியை யாரோ அழுத்திக் கொண்டு இருந்தார்கள்.

அவசரகேஸ் ஏதாவது...? எண்ணியபடியே கதவைத் திறந்தாள்.

டாக்டர் ரேவதி!

முகத்திலே வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு சற்று மூச்சுத் திணற உள்ளே வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''என்ன திடீர் விஜயம்! காப்பி சாப்பிடுகிறீங்களா?''

''நீ இப்பத்தான் வேலையிலிருந்து வந்திருப்பே பசியா இருப்பே-முதல்லே சாப்பிடு.''

ரேவதியின் குரலில் கண்டிப்பும் அவசரமும் தொனித்தன.



''நீங்கள் சொல்றதை இனிமேல் உடனடியாகக் கேட்டுறதுன்னு அன்னிக்கே தீர்மானிச்சுட்டேனே.'' அனு புன்முறுவலித்தபடி காப்பியை ஒரே விழுங்காகப் பருகி முடித்தாள்.

''நானே காரை ஓட்டிக்கொண்டு வந்திருக்கேன். கார் கீழே நிற்கிறது. வெகு நேரம் காரை நிறுத்தி வைக்கிற இடம் அல்ல அது. சட்டுனு கிளம்பு. நான் சொல்லப் போறதை கேட்க துணிவைத் திரட்டிக் கொள். பதறாதே.''

கதவைப் பூட்டிக்கொண்டு தோழியின் முகத்தை கலவரத்துடன் பார்த்து படிகளில் வேகமாக இறங்கினாள் அனுராதா.

வண்டியில் முன் இருக்கையில் தன் அருகே அவளை உட்காரச் சொல்லிவிட்டு, காரைக் கிளப்பினாள், ரேவதி.

''நீ இன்னும் மாலைப் பத்திரிகை எதையும் பார்க்கலையா?''

ஜிவ்வென்று வயிற்றிலே பயங்கர உணர்வு அனுராதாவுக்கு.

''என்ன சொல்ல சுத்தி வளைக்கிறீங்க? கேட்க பயமாயிருக்கே!''

''நேத்து ராத்திரி மகாபலிபுரத்தில் இருந்து திரும்பி வந்துக்கிட்டிருந்தாங்க.''

''யார்?''

''உன் மாமியாரும்; உன் மகனும்.''

''அவங்களுக்கு என்ன?'' பதறினாள், அனு.

''உன் மாமியார் சும்மாதான் பொழுது போகலைன்னு டிரைவரோட பேரனைக் கூட்டிக்கொண்டு மகாபலிபுரம், காஞ்சிபுரம் வரை போய்வரத் திட்டமிட்டு,

காலையிலேயே கிளம்பியிருக்காங்க. டிரைவர் ரொம்ப நாளா ஓட்டுகிறவர்தான். உங்கள் வீட்டில் இருக்கும் அந்த வெளிநாட்டுக் காரை, எடுத்துட்டு கிளம்பியிருக்காங்க.''

''என்ன ஆச்சு? சீக்கிரம் சொல்லுங்க.''

''நேத்து ராத்திரி அவங்க திரும்பறதுக்கு பத்து மணியாயிடுச்சி. சேலைக் கடையைச் சுத்திகிட்டு காஞ்சிபுரத்திலே ரொம்ப நேரம் கழிச்சிட்டாங்க. ராத்திரி அந்த பக்கமெல்லாம் லேசா மழை வேறு பெய்திருக்கு. எதிரே வந்த லாரியோட கார் மோதி...''

''டாக்டர்! என் குழந்தைக்கு என்ன ஆச்சு!'' தாங்க முடியாது அலறிவிட்டாள் அனு.

''உன் மாமியார், குழந்தை குமார் ரெண்டு பேருக்கும் நல்ல காயம். நினைவு இல்லா நிலையிலே ஆனந்தா நர்சிங்ஹோமில் அனுமதிக்கப்பட்டு இருக்காங்க. செய்தி எல்லா மாலை பத்திரிகையிலும் கொட்டை எழுத்திலே வந்திருக்கே, நீ பார்க்கலைங்கிறதை உள்ளே வந்தவுடனேயே புரிஞ்சு கொண்டேன். கார் பப்படமா யிடுச்சு. டிரைவர் அந்த இடத்திலேயே போயிட்டார்.''

''ரேவதி அம்மா! நான் இப்பவே என் குழந்தையைப் பார்க்கணுமே'' விசும்பி விசும்பி அனுராதா அழத் தொடங்கினாள்.

''அதுக்குத்தான் முதல்லேயே சொன்னேன், நீ தைரியமா இருக்கணும்னு. இப்ப நீ அழுகிறதினாலே நிலமை மாறி விடப்போறதில்லை. இரண்டு பேரையும் ''இன்டென்சிவ் கேர் யூனிட்'' அறையிலேயே வச்சிருக் காங்க. நான் உடனடியா போய் பார்த்துட்டு வந்தேன். ஸ்பெஷலிஸ்டுகளை வரவழைச்சிருக்கார், டாக்டர் நரேந்திரன். நீயும் பார்க்கணுமே, அதனால் கூட்டிட்டுப் போக ஓடி வந்தேன்.''



''முந்தா நாள்தான், என் குழந்தையை என்கிட்ட கொடுத்துடுங்கோன்னு அவரைக் கேட்டேன். காரிலே கொண்டு அவனை காயப்படுத்துறதுக்கா அப்படி விர்னு முறைச்சுண்டு போனார். டாக்டர்கள் என்ன சொல்றாங்க, ரேவதி அம்மா?''

''காலையிலே பார்த்த ஸ்பெஷலிஸ்டு ஜயந்தன். ஒண்ணும் சொல்ல முடியாதுன்னு கையை விரிச்சுட்டாராம்.''

''ஐயோ! முருகா! எனக்கு இப்படி ஒரு கஷ்டத்தையும் கொடுத்து வேடிக்கை பார்க்கறியே-! என் குழந்தைக்கு விபத்து ஏன் ஏற்படணும்?''

''பதறாதே, அனு. உன் மாமியார் உன் குழந்தையை அழைச்சிட்டு போன மாசம் கல்கத்தா போயிருந்தாங்க. அதுக்கு முந்தி டெல்லி வரை போயிருந்தாங்க. விமானத்திலும் ரெயில் வண்டியிலும் பேரனோட பல இடங்களில் சுத்தியிருக்காங்க. அப்போவெல்லாம் நேராத இந்த விபத்து, இப்போ, நம் அருகே இருக்கும் மகாபலிபுரத்துகிட்டே நடக்கணும்னா-? ஏதோ ஒரு அர்த்தம் இருக்கு!''

''என்ன அர்த்தம்? இப்ப எல்லாத்தையும் இழந்துட்டு அனாதையா நடு ரோட்டிலே நிக்கிறேனே, அதுதான் அர்த்தம்! அந்த ஆண்டவனுக்கு இது சம்மதமா இருந்தால் நடக்கட்டும்'' விம்மியபடி தோழியின் தோளில் சாய்ந்து கொண்டாள், அனு.

மருத்துவமனையின் தோட்டத்திற்குள் வண்டியை ஓட்டிக் கொண்டு வந்து கோடிட்ட இடத்திலே நிறுத்தினாள் ரேவதி.

''முகத்தை துடைச்சிட்டு, என்னோட பின்னாலே கொஞ்சம் தைரியமா நட'' அதட்டினாள்.

''நெற்றி, தலை, முகவாய் எல்லாம் கட்டுகளால் மூடப்பட்டு, மூக்கும் கண்ணும் மட்டும் தெரிய, தன் நிலை மறந்து ஆழ்ந்து உறங்குகிறவன் போல், அந்தப் படுக்கையிலே கிடந்த தன் மகனை கண்ணாடி கதவு வழியே பார்த்த போதே அனு துக்கத்திலே தூளாகிப் போனாள்.

''முகமூடி போட்டுக்கோ. என் கோட்டை வாங்கி போட்டுக் கொண்டு, மெல்ல அறைக்குள்ளே கிட்டக்க போய் பார்'' கட்டளையிட்டாள், ரேவதி.

அனுவுக்கு மிகவும் பழக்கமான நர்சு வனிதா அந்த அறையில் முழு நேரக் காவலில் இருந்தாள். அனுவைக் கண்டதும் கதவைத் திறந்து, மிக்க ஆதரவுடன் தழுவிக் கொண்டாள்.

''கவலைப்படாதிங்க, கடவுள் இருக்கிறார்'' நர்சின் கண்களும் கலங்கின.

அந்தச் சின்னஞ்சிறு உடம்பிற்குள்ளே பாய்ந்து கொண்டிருந்த ''ட்ரிப்'' மருந்தையும், அருகில் வைக்கப் பட்டு இருந்த பல மருந்துகளையும், அருகில் வைக்கப்பட்டு இருந்த பல மருத்துவ சாதனங்களையும் பார்த்த அனுவின் குடல் புரண்டது.

யாருமே சொல்லத் தேவையில்லை. குழந்தை அபாயமான நிலையில் கிடக்கிறான். பிழைப்பது சிரமம்-அவளே புரிந்து கொண்டாள்.

என்ன அடக்கியும் அவளையும் மீறிய கண்ணீர் கன்னங்களில் தாரையாக ஓடியது. பொறுக்க முடியாது அவள் வாய் விட்டு விம்முவதைக் கண்டு நர்சு அவளை மெல்ல அணைத்தபடி வெளியே அழைத்து வந்தாள்.



''அடுத்த அறையில் உங்கள் மாமியாரைப் படுக்க வச்சிருக்காங்க. அவங்களை லீலா கவனிக்கிறாள்'' அடிக்குரலில் கூறிவிட்டு உள்ளே சென்று கதவை சாத்திக் கொண்டாள்.

கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அடுத்த அறைக் குள்ளே நுழைந்தாள், அனு.

சண்பகம் அம்மாளும் நினைவின்றிக் கிடந்தாள். முகம் முழுவதும் கட்டுகள். எலும்பு முறிவிற்கு கால்கள் மீது பலத்த கட்டுகள். மூக்கு வழியே பிராணவாயு ரப்பர் குழல் மூலம் செலுத்தப்பட்டுக் கொண்டு இருந்தது. அதிக இரத்த இழப்பைத் தடுக்க மாற்று ரத்தம் வேறு பாய்ச்சிக் கொண்டு இருந்தார்கள்.

''உங்களுக்காக நான் ரொம்ப வருந்துகிறேன். ஸ்பெஷலிஸ்ட்டுகள் எல்லாம் வந்து போய் விட்டார்கள். யாரும் நம்பிக்கை தெரிவித்ததாகத் தெரியவில்லை. இனி நாம் செய்கிறதுக்கு ஒண்ணுமில்லை.''

நீட்டி வைத்த நெடுமரம் போல, படுக்கையிலே கட்டுகளுடன் கண்களை மூடிச் சாய்ந்து கிடந்த மாமியாரைப் பார்த்த அனு மனதிலே வேதனை குமுறிக் கொண்டு வந்தது.

''குடும்பமே அழிஞ்சிடும் போலிருக்கே! முருகா! நான் என்ன தப்பு செய்தேன்? ஏன் எனக்கு இவ்வளவு பெரிய தண்டனை?'' துயரத்துடன் அவள் மெல்ல கதவைத் திறந்து கொண்டு வந்தாள்.

இருள் வேகமாகப் பரவிக்கொண்டு வரவே, மருத்துவமனையின் வராந்தா விளக்குகள் எல்லாம் பளிச் என்று எரியத் தொடங்கின.

''நாளையில் இருந்து ஒரு சிலநாள் உன் சிந்தாதிரிப்பேட்டை கிளினிக்கை கவனித்துக் கொள்ள நம் சிநேகிதி சரசுவதியிடம் ஏற்பாடு பண்ணியிருக்கிறேன். இப்படி வந்து இங்கே உட்கார்'' என்று ரேவதி அவளை அழைத்து சென்று, பரிசோதனை சாலைக்கு அருகே கிடந்த இருக்கை ஒன்றில் உட்கார வைத்தாள்.

''இன்னும் கொஞ்சம் சூடாகக் காப்பி சாப்பிடு. பட்டினி கிடந்தால் தலை சுற்றும்'' என்று கூறிக் கொண்டே ஆஸ்பத்திரி ஆள் ஒருத்தன் தட்டிலே சுமந்து கொண்டு ஓடி வந்து கொடுத்த காப்பியை வாங்கி அவர்களுக்குக் கொடுத்து குடிக்க வற்புறுத்தினாள்.

கண்களில் பொங்கிய கண்ணீர் வாயில்பட்டு உப்புக் கரிக்க, காப்பியுடன் அதையும் சேர்த்து விழுங்கிய அனு, நிலைகுலைந்து போயிருந்தாள். ''ரேவதி அம்மாள்! எனக்கு ஏன் இந்தத் தண்டனை? நான் யாருக்கும் எந்தவிதமான கெடுதலும் செய்த தில்லையே'' விசும்பினாள் அனு!

''உஸ்! இது ஆஸ்பத்திரி. இதன் விதிகளைப்பற்றி உனக்கு நான் சொல்ல வேண்டாம். அமைதியாக சிறிது நேரம் இங்கேயே இரு. இதோ வந்துட்டேன்'' சொல்லிக் கொண்டே பளிச்சென்று எரிந்த மின் விளக்கை அணைத்து விட்டு, மெல்லிய ஒளியில் தனியே சற்று இருக்க விட்டு விட்டு, ரேவதி நகர்ந்து விட்டாள்.

இருக்கை சாய்மானத்தில் தலையை சாய்த்துக் கொண்டு கண்ணீரைக் கட்டுப்படுத்த முயன்றபடி கண்களை மூடிக் கொண்டு அமர்ந்திருந்தாள், அனுராதா. ''அன்று மட்டும் அவர் என் பேச்சிற்குக் காது கொடுத்து இருந்தால் என் செல்ல மகனுக்கு இந்தப் பேராபத்து வந்திருக்குமா?''



திடீர் என்று தோள் மீது பட்ட கை அவளைத் திடுக்கிடச் செய்தது.

''எழுந்திரு. என் அறைக்கு வா. உன்னிடம் பேச வேண்டும்''

திகைத்துப் போய் விட்டாள்! அவளால் நம்பவே முடியவில்லை.

அவள் கணவன் நரேந்திரன் வலிய வந்து அவளிடம் பேச விரும்புகிறான். அதுவும் அந்தத் துன்பமான சூழ்நிலையில்?

மறுப்பு ஏதும் தெரிவிக்காமல் அவள் எழுந்து கூடவே நடந்தாள். குளிர்சாதன வசதி கொண்ட தனது பிரத்யேக அறைக்குள்ளே அவளை அழைத்துச் சென்று, மிருதுவான இருக்கை ஒன்றில் அமரச் செய்தான். அலமாரியில் இருந்த துண்டு ஒன்றை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

''முகத்தைக் கழுவிக்கோ, அழுது அழுது உன் கண்கள் ரொம்ப வீங்கிப் போயிருக்கு. ஏதாச்சும் சாப்பிட வரவழைக்கட்டுமா?''

சில மாதமாக அவள் கேட்டு அறியாத, இதமான குரலில் நரேந்திரன் கேட்டான்.

''வேண்டாம்'' என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினாள், அனு. மீண்டும் கண்களில் நீர் புரண்டது. துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது.

''அனு! அழாதே. என்னாலும் தாங்கத்தான் முடியலை'' கரகரத்த குரலுடன் அவள் அருகே வந்து கண்ணீரை அவன் மெல்ல துடைத்தபோது, அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

அவன் கண்களும் சிவந்து வீங்கி, முகம் உப்பி, முடிபுரண்டு பரிதாபமாக அவனும் காணப்பட்டான்.

''நீங்கள் கூட சாப்பிடலையா?'' அனு கேட்டுக் கொண்டே முகத்தைக் கழுவித்துடைத்துக் கொண்டாள். கைப் பையில் இருந்த குங்குமச் சிமிழை எடுத்து, நெற்றிக்கு இட்டுக் கொண்டாள். கணவனின் இதமான மொழியைக் கேட்டதும், மனதை நொறுக்கிய அந்தத் துயரம் பாதியாகிவிட்ட பிரமிப்பு அவளுக்கு.

''ராத்திரியெல்லாம் கண் விழிச்சிருந்து கவனிக்க வேண்டியிருந்தது. தூக்கம் எப்படி வரும்? குடும்பமே அழிஞ்சு தன்னந்தனியா நிக்கிறேனேன்னு நினைச்சப்போ என் மேலேயே எனக்கு வெறுப்பும் கசப்பும் தாங்க முடியலை அனு! இந்த நாலைஞ்சு மாசம் தனிமையிலே நீ எப்படி தவிச்சேங்கிறதை நான் ஒரு சில மணி நேரத்திலே உணர்ந்து கொண்டேன்.''

அனு அனுதாபத்துடன் அவனைப் பார்த்தாள்.

''உனக்கு நாங்கள் செய்த கொடுமைக்கெல்லாம் தகுந்த கூலி கிடைச்சுடுத்து, அனு. மனைவியை இழந்து மகனை இழந்து, தாயை இழந்து தனிமரமா நிக்கப்போறேன், நான். என்னாலே தாங்க முடியவில்லை. ஒவ்வொரு செயலுக்கும் பதில் இருக்கத்தான் இருக்கு. உனக்கு துன்பம் கொடுத்ததுக்கு நானும் அம்மாவும்- சொல்ல முடியாது அவன் திணறியபோது-

அனு பார்த்துக்கொண்டே நிற்க முடியவில்லை. உயிருக்கும் மேலாக இன்னமும் அவள் நேசிக்கும் கணவன் ஆச்சே! அவன் அவளையும் மீறிய உணர்வின் உந்துதலால், சட்டென்று நெருங்கி அவன் கைகளைப் பற்றிக்கொண்டாள்.



''நீங்களும் முகத்தைக் கழுவிக் கொள்ளுங்க. உங்களுக்காக நான் சாப்பிடறேன். ரெண்டு பேரும் சாப்பிடுவோம். எல்லாரையும் இழந்திட்டீங்கன்னு மறுபடியும் சொல்லாதீங்க. என்னை நீங்கள் இழக்கலை. உங்கள் மகிழ்ச்சியை பங்கிட்டுக்க மனைவின்னு உறவு கொண்டவள் உங்கள் துக்கத்தை பங்கிட்டுக்க அதே உறவிலே வந்திருக்கேன்.''

''உண்மையாகவா அனு? உனக்கு என் மேலே கோபம் இல்லையே'' தழுதழுத்தான் அவன்.

''என் மேலேயே எனக்கு கோபம் வருகிறது. அத்தைகிட்ட அப்படி எதிர்த்துப் பேசிகிட்டு நான் வெளியேறினது தப்பு என்பதை பின்பு உணர்ந்தேன். நமக்குள்ளே இருந்த பல வேற்றுமைகளையும் நாமே பேசி, முடிவுக்கு வந்திருக்கலாம். வெளியேறி உங்களை நான் அவமானப்படுத்திட்டேன்.''

''ரெண்டு பேருக்கும் நல்ல பாடம்'' விம்மிக் கொண்டே தன் நெஞ்சோடு அவளை இறுக அணைத்துக் கொண்டான், நரேந்திரன். ''துன்பத்தைப் பகிர்ந்து கொள்ள எனக்குத் துணையாக நீ வந்துட்டேன்னு உணர்ந்ததுமே என் நெஞ்சு லேசா போயிட்டுது. அனு நம் குழந்தையும், அம்மாவும் பிழைச்சுட்டால் எனக்கு இந்த உலகத்திலே வேறு எதுவுமே வேண்டாம்.''

''நிச்சயம் பிழைச்சுக்கிடுவாங்க. நான் நித்தமும் வணங்குகிற முருகன் நிச்சயம் என்னை கைவிட மாட்டான்'' அனு அவனுக்கு ஆறுதலாகச் சொன்னாள்.

ஒருவருக்கு ஒருவர் இது சமயம் துணையாக இருக்கிறோம் என்ற உணர்வில் பெருகிய கண்ணீர், மனதிலே மண்டிக்கிடந்த அவர்களது துயரத்தைப் பாதியாகக் கரைத்துவிட்டதே, விந்தைதான்!

# 10

கணவன் - மனைவி இருவரும் சாப்பிட அமர்ந்தார்கள்.

தேனப்பன் டிபன் பாக்சில் வீட்டில் இருந்து கொண்டு வந்திருந்த சாப்பாட்டை கணவனுக்குத் தன் கையாலே பரிமாறி உபசரித்தாள், அனு. தானும் கொஞ்சம் சாப்பிட்டாள். துயரத்தினால் இருவருக்குமே சாப்பாடு தொண்டையில் இறங்கவில்லை. அறையில் இருந்த நீண்ட இருக்கையில் அவனைப் படுக்கச் சொல்லி விட்டு, அவள் இரவு முழுவதும் கண் விழித்திருந்து மகனையும், மாமியாரையும் மாற்றி மாற்றி கவனித்துக் கொண்டாள்.

இருவரது நிலையிலும் கடுகளவும் அபிவிருத்தி காணப்படவில்லை.

விடிந்ததும் எழுந்து வந்து பார்த்த நரேந்திரனுக்கும் மிக்க ஏமாற்றமாகவும் துயரமாகவும் இருந்தது.

''உன்னை வீட்டுக்கு அழைத்துப்போகிறேன். நீ குளிச்சுட்டு கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கோ. நான் இவர் களைப் பார்த்துக்கிறேன்'' மனைவியைத் தன் காரிலே தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான் நரேந்திரன்.

சில மாத இடைவெளிக்குப்பின், தங்கள் படுக்கை யறைக்குள் இருந்த குளியலறைக்குள் புக அவளுக்கு தடுமாற்றமாகத்தான் இருந்தது.

குளித்து முடித்துவிட்டு, அலமாரியில் தான் விட்டுப் போயிருந்த சேலைகளில் ஒன்றை எடுத்து உடுத்திக் கொண்டு, விரைவாக வெளியே வந்தாள்.

''என்னை எனது குடியிருப்புக்குக் கொஞ்சம் அனுப்பி வைக்க முடியுமா?'' மிகவும் மெல்லிய குரலில் அவனிடம் கேட்டாள்.



''என்ன வேணும்? யாரையாவது அனுப்பி எடுத்து வரச் சொல்கிறேன்.

அவனிடம் மனசு விட்டுச் சொல்ல அவளுக்கு இன்னமும் குழப்பமாக இருந்தது.

''அந்த வீட்டுக்குப் போய் நொடியில் திரும்பி வந்துடறேன். ஒரு பொருள் எனக்குத் தேவையா இருக்கு'' என்றாள், மறுபடியும்.

''நானே அழைச்சிட்டுப் போறேன். நாம் ஆஸ்பத்திரிக்குப் போகுமுன் வழியில் நீ போய் அதை எடுத்துக் கொள்ளலாமே'' என்றான் நரேந்திரன்.

அப்பொழுதும் அவள் தன் மனதில் ஏற்பட்ட அந்த ஆவலை அவனிடம் சொல்லத் துணிவு இல்லாது தயங்கினாள்.

விரைவாக இருவரும் மருத்துவமனைக்குக் கிளம்பினார்கள். அவளது குடியிருப்பு அருகே வண்டியை நிறுத்திவிட்டு அவன் காரில் காத்திருந்தான். வேகமாகப் படிகளைக் கடந்து கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள், அனு. அலமாரி மேல்தட்டில் ஒரு பிளாஸ்டிக் டப்பாவிலே பத்திரமாக அடைத்து வைத்திருந்த திருச் செந்தூர் அபிஷேக விபூதியைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

''பிரிஞ்சு இருந்த எங்களை வினாடியிலே சேர்த்து வச்சுட்டே, ஆனால், அதற்கு இப்படி ஒரு விபத்து தேவையா? முருகா! என் குழந்தையும் மாமியாரும் பிழைக்கும்படி ஓர் அற்புதத்தை நிகழ்த்த மாட்டியா?''

அவள் மனமுருக வேண்டிக் கொள்ளுமுன், ''அனு!'' பின்னாலேயே குரல் கொடுத்துக் கொண்டு உள்ளே வந்துவிட்டான் நரேந்திரன். அந்த அறையையும்,

அதற்குள் கிடந்த சிறு கட்டிலையும், பிரம்பு நாற்காலி களையும், தனிமை சூழ்நிலையையும் பார்த்து, அவன் மனம் கரைந்து போனான்.

அத்தனை பெரிய பங்களா - வசதியான வாழ்க்கை எல்லாவற்றையும் விட்டு, அனு இப்படி ஒரு சிறைத் தண்டனையைத் தனக்குத்தானே விதித்துக் கொண்டு இருந்திருக்கிறாள். அவனும் அதைப்பற்றிக் கவலைப் படாது இருந்திருக்கிறான்!

''அனு! என்ன எடுக்க இத்தனை அவசரமாக ஓடி வந்தே?'' சாதாரணமாக அவன் கேட்டான்.

பிளாஸ்டிக் டப்பாவைக் கையில் இறுகப் பற்றிக் கொண்டாள். குற்ற உணர்விலே தவித்துப் போனாள். ''இத்தனை நாள் பிரிஞ்சிருந்து இருப்பத்தான் சேர்ந்திருக் கோம். எனக்கு சொல்லக்கூட பயமாக இருக்கு. ஆனாலும் உங்கள்கிட்ட மறைக்கவும் விருப்பம் இல்லை'' கண்கலங்கிப் போய்விட்டாள்.

''பயப்படாதே, தாராளமாகச் சொல்லு, ஏன் தயக்கம்?'' அன்புடன் சொல்லிக்கொண்டு அருகே வந்தான்.

''ஸ்பெஷலிஸ்டுகள் எல்லாம் கைவிட்டாங்கன்னு சொல்றீங்க-''

''அதைரியப்படாதே. பம்பாயில் இருந்து இரண்டு ஸ்பெஷலிஸ்டுகள் இன்று விமானத்தில் வருகிறார்கள்.''

''இருவரும் பிழைத்துக் கொள்வார்களா?''

கண்களில் நீர்மல்க, நெஞ்சு பதற தழுதழுத்த மனைவியை அணுகி அவளைத் தன் மார்புடன் அணைத்துக் கொண்டான்'' அனு! என்னையும் கோழையாக்கி விடாதே. நீ இது சமயம் எனக்கு ஆறுதல் சொல்லி பக்கத் துணையாக இருக்கணும் அனு.''



''துணையாக இருக்கத்தானே வந்திருக்கேன். ஒரு சிறு வேண்டுகோள்.''

''என்ன வேணும் சொல்லு?''

''எல்லாரும் கைவிட்டுட்டாங்க... ஆனால், என் முருகன் என்னைக் கைவிடமாட்டான்னு எனக்கு நம்பிக்கை.''

வறட்சியாகச் சிரித்தான், நரேந்திரன்.

''தயவு செய்து என் நம்பிக்கையை ஏளனம் பண்ணாதீங்க. திருச்செந்தூர் முருகனுக்கு அபிஷேகம் செய்த திருநீறை வச்சிருந்தேன். அதை எடுத்து வரத்தான் ஓடி வந்தேன். குழந்தை நெற்றியிலும், அத்தை நெற்றி யிலும் இந்தத் திருநீரைப் பூச விரும்புகிறேன்-''

''மருந்துகளால் முடியாததை, இந்த விபூதி சாதிக்கும் என்று நினைக்கிறாயா? நீ ஒரு டாக்டர் என்பதை மறந்துவிடாதே.''

''இனி நான் முருகனைத்தான் நம்பப் போறேன். கடும் விரதம் இருக்கப் போறேன். அவரது அற்புத மகிமையால் இரண்டு பேரும் பிழைச்சிட்டா, குழந்தை யோட போய் அபிஷேகம் செய்கிறதாக வேண்டிக்கப் போறேன். எதைத் தின்னால் பித்தம் தெளியும் என்கிற நிலையில் இருக்கிறேன்.''

''உன் விருப்பம். வா போகலாம்.''

அவர்கள் மருத்துவமனைக்குச் சென்ற பொழுது, பம்பாயில் இருந்து இரு ''ஸ்பெஷலிஸ்டு''களும் வந்து இருந்தார்கள்.

அவர்கள் குழந்தையையும், மாமியாரையும் சோதித்துப் பார்த்தார்கள். இரண்டு மணி நேரத்துக்கு மேல் பல பரிசோதனைகள் செய்தார்கள். இறுதியில் அவர்கள்

சொன்னது, ''மிகவும் மோசமான நிலைதான். உயிர் பிழைக்க ஆயிரத்தில் ஒரு பங்குதான் வாய்ப்பு இருக்கிறது.''

அனு பேர்ய் அவர்கள் இருவருக்கும் திருநீறு பூசி விட்டு வந்தாள். அதைப் பார்த்த ஒரு ஸ்பெஷலிஸ்டு, ''உன் நம்பிக்கை உன்னைக் குணப்படுத்தியது'' என்று இயேசுநாதர் கூறிய வாசகத்தை அனுவுக்கு நினைவு படுத்தினார்.

''தெய்வத்தின் அருள் நிச்சயம் தேவைதான். ஆனால், முயற்சி உள்ளவர்களுக்கே தெய்வம் அருள் புரிகிறது. எனவே, மனித முயற்சியும் முக்கியம்'' என்றார், இன்னொரு ஸ்பெஷலிஸ்டு.

அதன்பின் அனு, நரேந்திரன் ஸ்பெஷலிஸ்டுகள் நால்வரும் அமர்ந்து, அளிக்கவேண்டிய சிகிச்சை பற்றி விவாதித்துத் தீர்மானித்தார்கள்.

இரவும் பகலும் குழந்தையையும், மாமியாரையும் மாறி மாறிக் கவனித்துக் கொண்டாள் அனு.

சில வேளைகளில் நரேந்திரன் அவளுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு தான் கவனித்துக் கொண்டான்.

வீட்டை மறந்து, தன்னைப்பற்றிய நினைவு இன்றி சதா முருகனை வேண்டியபடியே அவள் குழந்தையின் கட்டிலின் அருகே கண் இமைக்காது காவலாக இருந்தாள்.

காலையும் மாலையும் குழந்தைக்கும் மாமியாருக் கும் திருநீறை அணிவித்தாள்.

நேரத்துக்கு மருந்து கொடுக்கவும் தவறவில்லை. வெளி நாட்டில் இருந்தும் மருந்துகள் வரவழைக்கப் பட்டன.



வீட்டில் இருந்து வரும் வழியில் தினமும் அந்த முருகன் கோவிலுக்கு முன் காரை நிறுத்தச் சொல்லி இறங்கி உள்ளே சென்று வணங்கிவிட்டு வந்தாள்.

முதல் இரண்டு நாள் அவள் மட்டும் உள்ளே போய் வந்தாள். நரேந்திரன் காரிலேயே காத்துக் கொண்டு வெளியே இருந்தான். மூன்றாவது நாள், மனதில் என்ன தோன்றியதோ, ''நானும் உனக்குத் துணையாக வருகிறேன்'' என்று அவனும் வந்தான். உள்ளூர அவளுக்கு வியப்புத் தான்-வெளியே காட்டிக் கொள்ள வில்லை.

மருத்துமனைக்குச் சென்றதும், ஸ்பெஷலிஸ்டு களின் ஆலோசனைப்படியே கருத்துடன் குழந்தையை யும் அம்மாவையும் கவனித்து வந்தான்.

பத்தாவது நாள் விடியற்காலை அரை தூக்கத்திலே ஆடி விழுந்து கொண்டு, அமர்ந்திருந்தவள் நிடுக்கிட்டு விழித்துக் கொண்டு நன்றாக உற்றுப் பார்த்தாள்.

குழந்தை சிவகுமாரின் கண் இமைகள் அசைந்தன. ''அம்மா?'' என்று எங்கேயோ கேட்பது போன்ற லேசான முனகல்.

அனுவுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. தன் அறையில் இருக்கையில் அமர்ந்தபடியே தூங்கிக் கொண்டு இருந்த கணவனை உலுக்கி எழுப்பினாள். ''என்னங்க, வந்து பாருங்க குழந்தைக்கு நினைவு திரும்பறாப்பலத் தோணுது வாங்கோ'' அவன் தோளைப் பிடித்து உலுக்கினாள்.

நரேந்திரனுக்கும் தாங்க முடியாத மகிழ்ச்சி. ஓடி வந்தான்.

குழந்தைக்கு மெல்ல மெல்ல ஞாபகசக்தி திரும்பிக் கொண்டு இருந்தது.

உடனேயே ஓடி அடுத்த அறையில் கிடந்த அம்மாவையும் பார்த்தான்.

அவள் அதே நிலையில் இன்னமும் இருந்தாள். அதைக் காண கொஞ்சம் ஏமாற்றமாகத்தான் இருந்தது.

ஸ்பெஷலிஸ்டுகள் எல்லோருக்கும் ''போன்'' செய்தான். அவர்கள் விரைந்து வந்தனர்.

''மாதக்கணக்கில் கூட நினைவு இல்லாது இருப்பவர்களும் உண்டு. இப்படி சில நாளைக்குப் பின்னர் நினைவு வந்து குணமாவதும் உண்டு. அனுவின் இடைவிடாத பணியாலும், நம்பிக்கையாலுந்தான் இவ்வளவு சீக்கிரம் குணம் அடைந்தான்'' என்று பாராட்டினார்கள்.

சிகிச்சை தீவிரப்படுத்தப்பட்டது. நாளுக்கு நாள் உடல் நிலையில் முன்னேற்றம் தெரிந்தது. பதினைந்தாவது நாள் சிவகுமார் கண்களை நன்றாகத் திறந்து, எதிரே இருந்த அவளைப் பார்த்தான். ''அம்மா! அம்மா'' அவன் வாய் முணுமுணுத்தது. துவண்டு கிடந்த கையை நீட்டி ''அம்மா'' என்று மகன் அழைத்ததைக் கேட்டு, மகிழ்ச்சி தாளாது அழுதுவிட்டாள், அனு.

''அப்பாவைப் பாருடா கண்ணா-'' நரேந்திரன் கண்களும் பனித்தன. கொஞ்சிப் பேசும் அளவு குணம் அடைந்துவிட்டான்.

ஆனால், சண்பகம் மிகவும் மெதுவாகத்தான் குணம் அடைந்தாள். அவள் எழுந்து நடக்கவும் பேசவும் மாசங்கள் பல சென்றன.

வீடு திரும்பிய அன்று -

''அனு! இங்கே வாம்மா!''



மருமகளை முதல் முதலாக அன்போடு அழைத்தாள், அவள்.

நான் போயிருந்தால் கூடப் பெரிசில்லை. வயது ஆகி விட்டது. இப்படி ஒரு முடிவுன்னு நினைச்சுக்கலாம். என் அருமைப் பேரன் போயிருந்தால் அந்தத் துக்கத்தை என் மகனால் தாங்கிக்கவே முடியாது. உனக்கும் நான் பெரிய பாதகம் செய்தவள் ஆயிருப்பேன்.''

''நடக்காததை நினைத்து ஏன் அத்தை வருந்துகிறீர்கள்? நல்லதை நினைப்போம். நல்லதைச் செய்வோம். நல்லதே நடக்கும்.''

''நான் பெற்ற மகள் இருந்தால்கூட என்னை இப்படிப் பார்த்து இருக்க மாட்டாள் என்று ஆஸ்பத்திரியில் உன் பணிவிடைகளைப் பார்த்த எல்லோரும் சொன்னார்கள். நீ கண்ணும் கருத்துமாகப் பார்த்ததால்தான் நான் பிழைத்தேன்.''

''எல்லாம் முருகன் அருள், அத்தை''

''எவ்வளவு அடக்கமாகப் பேசுகிறாய். உன் அருமை தெரியாமல் உன்னைக் கொடுமைப் படுத்திட்டேன்.''

''அதெல்லாம் இப்ப எதுக்கு அத்தை? நடந்தவை நடந்தவையா இருக்கட்டும். நடப்பவை நல்லவையா இருக்கட்டும்.''

''இந்தா! இனி நீதான் இந்த வீட்டுக்கு எஜமானி. எனக்கு இனி ஒரு பொறுப்பும் வேண்டாம். மெதுவா எழுந்து நல்லா நடக்க முடிஞ்சதும் என் பேரனோட தோட்டத்திலே சுத்தி வந்தால் போதும்'' என்று கூறியபடி தன் இடுப்பிலே சொருகிக் கொண்டிருந்த சாவிக்கொத்தை மருமகளிடம் மனமுவந்து நீட்டினாள்.

'பணமும் பதவியும் தன்னிடந்தான் இருக்கணும்னு இறுமாப்புடன் இருந்த அத்தைக்குக்கூட இப்படி ஒரு மன மாறுதலா? இதுவும் முருகனின் அருளே' என்று வியந்து போனாள், அனு.

# 11

''அப்பா! தூங்கிறீங்களா?''

மழலை மொழி தேனாகக் காதுகளில் பாய்ந்தது.

மெத்தென்று பட்டுப் போன்ற கன்னங்களும். சுருண்ட முடியும் மார்பில் தவழ்வதை உணர்ந்த நரேந்திரன், ''அம்மாவும் பிள்ளையும் எங்கே தூங்க விடுகிறீங்க?'' என்று போலியான கோபத்துடன் போர்வையை உதறிக்கொண்டு படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான்.

''சூரியோதயம் பார்க்க வேண்டாமா? திருநெல்வேலியிலேதான் நேத்து நல்லா மகனைக் கட்டிக் கொண்டு அந்த ஓட்டல் அறையிலே கும்பகர்ணனாட்டமா தூங்கினீங்க, இருட்டறதுக்கு முந்தியே கன்னியாகுமரி வந்துட்டோம். சுவாமி தரிசனத்துக்குப் பின் சாப்பிட்டதும் நேரே வந்து லாட்ஜிலே படுத்தவர் இப்பத்தான் எழுந்திருக்கிறீங்க.''

''சொல்லமாட்டியா, நீ? சென்னையிலிருந்து காரை நானே ஓட்டிக்கொண்டு வந்தா அலுப்பா இருக்காதா?''

''அதுக்குத்தான் அங்கங்கே நிறுத்தி, வேணுங்கிற ஓய்வு எடுத்துக்கிட்டு மெல்ல வந்தோமே, நானும் ஓட்டுவேன், ஆனால், வண்டியை நீங்கதான் ஜாக்கிரதையா ஓட்டணும்னு அத்தை உத்திரவு. நான் என்ன செய்யட்டும்?''



''மாமியாரும் மருமகளும் இப்போ நெருக்கமா யிட்டீங்க?'' கேலியாகக் கூறிக்கொண்டு எழுந்து பல் துலக்க பீங்கான் தொட்டியருகே நகர்ந்தான்.

''அத்தையால் நம்மோடகூட வர முடியலை. இன்னும் காலில் வலி இருந்துண்டே இருக்குன்னு சொல்றாங்க. அடுத்த முறை வருவதாகச் சொல்லி யிருக்காங்க.''

''இன்னொரு பயணம் வச்சிருக்கியா! அட போச்சுடா'' பயந்தவன் போல் நடித்துக்கொண்டு பல்துலக்கி முகம் கழுவிக் கொண்டான்.

''அத்தை எனக்கு ஓர் உத்திரவு போட்டிருக்காங்க. அந்த சிந்தாதிரிப்பேட்டை கிளினிக்கை நான் தொடர்ந்து நடத்தணுமாம். எக்காரணம் கொண்டும், வேறு யாருக்கும் கொடுக்கக் கூடாதாம்.''

''ஏனாம்?''

''ஏழை மக்களுக்கு நான் செய்த தர்மந்தான் நமது குடும்பத்தைக் காப்பாத்தியதாம். அப்படி அவங்களுக்கு ஒரு நம்பிக்கை வந்துவிட்டது.''

''எனக்கு நம்பிக்கை வந்திருப்பது போல! ஆஸ்பத்திரியிலே என் அறையிலே ஒரு முருகன் படம் வச்சிருக்கேன் இல்லையா, அதைப்பார்த்து என் நண்பர்களுக்கு எல்லாம் ஒரே ஆச்சரியம். இவன் எப்படி இப்படி மாறிப் போனான்னு பேசிக்கிறாங்க.''

''சீக்கிரம் குழந்தையை தூக்கிட்டு வராந்தாவிலே போய் நில்லுங்கோ. சூரியன் உதயமாற நேரம் நெருங்கிட்டு வரது'' விரைவுபடுத்தினாள், அனுராதா.

''அப்பா என்ன குளிர்? பல்லைத் தட்டுது!'' கம்பளிப் போர்வையுடன் குழந்தையை அணைத்துக் கொண்டு வராந்தாவிலே நின்றான் நரேந்திரன்.

அதிசயத்திலும் அதிசயமாக குளிர்காற்று வீசிக்கொண்டு லேசாக மேகம் படர்ந்து இருந்த வானத்தில் அவனுக்காக சூரியன் பளிச் என்று கடலில் இருந்து கிளம்பிக் காட்சி தந்து, சில வினாடிகளில் ஒரு பெரிய மேகத் திரைக்குள் மறைந்து கொண்டது.

''பரவாயில்லையே! உங்களுக்காக சூரியன்கூட மனசு வச்சுட்டதே! இனி நீங்கள்தான் மனசு வைக்கணும்'' அனு சிரித்தாள்.

''குளிச்சுட்டு சாப்பிடணும். பிறகு கோவிலுக்குப் போகணும், அவ்வளவுதானே?''

''இன்னும் இருக்கு. என் கையைப் பிடிச்சுட்டு கடலில் என்னோடு குளிக்கணும். போன தடவை வந்தபோது ரொம்ப கிராக்கி பண்ணினீங்க''

''அய்யய்யோ இந்தக் குளிரிலா...''

''கடல் நீர் குளிர் காலத்திலே வெது வெதுப்பாக இருக்கும்.''

''அனு வேண்டாம்! என்னை வற்புறுத்தி பய முறுத்தாதே.''

''அத்தைதான் அப்படிச் செய்யணும்னு சொல்லி அனுப்பினாங்க.

''மூணு கடலும் சங்கமமாகும் இடத்திலே கணவனும் மனைவியும் கையைப் பிடிச்சுண்டு மனசிலே எதையாவது விரும்பி முழுகி எழுந்தால் விரும்பினது விரைவில் பூர்த்தியாகுமாம்!''

''நீ ஏதாவது விரும்பிக்கப் போறியா?'' கண்களைச் சிமிட்டினான் அவன்.

''முதல்லே கிளம்புங்கோ. பின்னாடி சொல்றேன்.''



கடலில் பக்தர்கள் குளிக்கும் இடத்திலே உடுத்திய உடையுடனே நீரில் மெல்ல இறங்கினான், நரேந்திரன். முதலில் குழந்தையை முழுக்காட்டிவிட்டு துண்டால் போர்த்தி கரையில் உட்கார வைத்தான். பிறகு அனுவின் கையைப் பிடித்துக்கொண்டு, கடலுக்குள் இறங்கி மூன்று தடவை முங்கி எழுந்தான்.

ஈர உடையுடன் மெல்ல நடந்து லாட்ஜிற்கு வந்தனர். மறுபடி உப்பு நீர் போக குளித்து, வேறு உடை உடுத்திக்கொண்டு, கோவிலுக்குப் புறப்பட்டனர்.

தேவியை தரிசித்துவிட்டு வெளியே வந்தபோது நரேந்திரனால் ஆவலை அடக்க முடியவில்லை. மெல்ல நடந்து கொண்டிருந்தபோது கேட்டு விட்டான்.

''மனசிலே என்ன விரும்பிக்கொண்டு கடலில் முழுகினே? இப்பவாவது சொல்.''

''விரைவிலே சிவகுமாருக்கு ஒரு தங்கச்சிப் பாப்பா வேணும்னு 'வேண்டிக்கச் சொன்னாங்க. அப்படி ஒரு தங்கை பிறந்து விட்டால், தேவி கன்னியாகுமரியின் பெயரையே வைக்கணும்னு வேற சொல்லி அனுப்பி யிருக்காங்க.''

''தவறிப்போய் பிள்ளை பிறந்துட்டால்...'' சிரித்தான் நரேந்திரன்.

''முருகனுக்கு இருக்கிற ஆயிரத்தெட்டு பெயரில் எதையாவது ஒண்ணை வைப்போம். மறுபடியும் இங்கே வந்து...''

''கடலில் குளிச்சுட்டு வேண்டிக்கலாம்கிறியா! இரண்டே போதும் இதற்குமேல் வேண்டாம்னு தினமும் நீ உன் நோயாளிகளிடம் படிச்சு சொல்லி விட்டு, நம்ம

வீட்டிலே மட்டும் பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழச் சொல்றியா?''

''உங்கள் ஆசைக்கு ஒரு மகன். அத்தை ஆசைக்கு ஒரு மகள். அவங்க வச்சிருக்கிற அத்தனை நகையும் போட்டுக்க வீட்டிலே சட்டுன்னு ஒரு பெண் குழந்தை வேணுமாம்.''

''ஏன் அந்த நகையெல்லாம் உனக்குத் தேவையில்லையா?''

''எனக்கு உங்கள் முகத்திலே இப்ப இருக்கிறதே இந்த புன்னகை அதுவே போதும், என் வாழ்வை நிறைக்க வைக்கும் நகை இதுதான்.''

''ரொம்பத்தான் பேசறே! என் அம்மா உன்னை வாயாடின்னு சொன்னதிலும் அர்த்தம் இருக்கு'' சிரித்தான் மகிழ்ச்சியுடன். கூடவே அவளும் சிரித்தாள். அந்தச் சிரிப்பில்தான் எத்தனை ஆனந்தம்!

அடுத்த நாள் காலை அவர்கள் விடியு முன்பே திருச்செந்தூருக்கு வந்து சேர்ந்துவிட்டனர். விரைவாகக் குளித்து முடித்துக்கொண்டு கோயிலுக்குக் கிளம்பினர். ஒரு தடவை ரேவதியுடன் வந்து பழகிக் கொண்டதிலே அனுராதாவும் கெட்டிக்காரியாகி விட்டிருந்தாள். முருகனுக்கு அபிஷேக ஆராதனைக்கு துரிதமாக ஏற்பாடுகள் செய்துவிட்டாள்.

குழந்தையைத் தூக்கிக் கொண்டு, கணவனுடன் முருகன் சந்நிதியில் வந்து நின்ற போது அவளையும் அறியாது மகிழ்ச்சியிலே கண்களில் நீர் பெருகியது. ''எத்தனை அற்புதங்களைச் சாதித்து விட்டாய்! உன் கருணையே கருணை.''



அபிஷேக-ஆராதனைகளுக்குப் பின் அறைக்குத் திரும்பினார்கள். சிறிது நேரம் களைப்பாறிவிட்டு சாப்பிட்டு சென்னைக்குக் கிளம்பினார்கள்.

உற்சாகமாக காரை ஓட்டிக் கொண்டு சென்ற நரேந்திரன், மெல்லிய குரலில் என்னவோ இழுப்பது கேட்டது.

''பாட்டுகூட வராப்பல இருக்கே?'' சிரித்தபடி கேட்டாள், அனுராதா.

''பக்தி வந்துட்டா பாட்டும் வந்துடுது'' என்றவன் ''மையலோடு இருபுறமும் இருமாதர் தம்மோடு மயில் மிசை வந்தருளும் முருகோனே'' என்று வாய்விட்டுப் பாடினான்.

''அப்படின்னா என்னப்பா அர்த்தம்?'' அனுராதா வின் மடி மீதிருந்த சிவகுமார் கொஞ்சிக் குழைந்தான்.

''அப்படின்னா முருகன் சாமிக்கு இரண்டு அம்மான்னு அர்த்தம். அப்பாவுக்குக்கூட இரண்டு அம்மா இருக்காங்களே, உனக்குத் தெரியுமா?''

குழந்தைகிட்ட பேசற பேச்சா இதெல்லாம்!'' அனு சிணுங்கினாள்.

உண்மையைத்தானே சொன்னேன். ஒரு மனைவி இந்த அனுராதா அம்மா. இன்னொரு மனைவி - ஆனந்தா நர்சிங்ஹோம். நரேந்திரனின் வாழ்விலே இந்த இரண்டு பேருக்கும் சமபங்கு உண்டு. பொறாமை வந்துட்டதோ?'' கொஞ்சியபடி இரகசியமாகக் கேட்டான்.

''விளையாட்டு பின்னாலே இருக்கட்டும். சாலையைப் பார்த்து பத்திரமா வண்டியை ஓட்டுங்க.''

''இனி நம் வாழ்க்கை வண்டியும்ட பத்திரமா ஓடும். ஏன் தெரியுமா? விபூதி அபிஷேகம் ஆன கோலத்திலே

முருகனை தரிசிச்சப்போ அவர் சிரிக்கிறதுபோல தெரிஞ்சுது. நம்மைப் பார்த்து கருணையோட சிரிச்சுக் கொண்டிருக்கிறார். நமது கஷ்டத்துக்கெல்லாம் முடிவு வந்துட்டதுன்னு சிரிக்கிறார்.'' உற்சாகமாகச் சொல்லிய படியே வண்டியை சாலையில் கவனமாக ஓட்டினான் நரேந்திரன்.

சில்லென்ற பூங்காற்று முகத்திலே வீச, வருங் காலத்து இனிய கனவுகளிலே லயித்தவளாக மெல்ல கணவன் தோள்மீது கன்னத்தை அழுத்திக் கொண்டாள் அனுராதா.

(முற்றும்)


பூங்கொடி பதிப்பகம்
முருகன் சிரித்தான்
லக்ஷ்மி